26 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto)

துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நிதி 26 | பாலம் 04 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 15, 2016

# ISISஇற்கு எதிரான போரில் கனடாவின் பங்களிப்பு!



சிரியா மற்றும் ஈராக்கில் ISIS இற்கு எதிராக அமெரிக்க கூட்டுப்படைகளுடன் சேர்ந்து கனடா நடத்தும் போரினை ஆப்கானிஸ்தான் போர்முனையில் பெற்ற அனுபவத்தினையும், புகழ்பெற்ற கனேடிய இராணுவ பயிற்சியாளர்களது திறமையையும் கொண்டு அடுத்து வரும் இரண்டு ஆண்டு காலத்திற்கு கனடா முன்னெடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளது என 2016 பெப்ரவரி 08இல் கனேடிய பிரதமர் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தார்.

கடந்த சில வருடங்களாக கனடாவின் முன்னணி இராணுவப் பிரிவின் தேர்ந்தெடுக்கப்பட்ட 69 இராணுவவீரர்கள், ஈராக்கின் வட பகுதியில் உள்ள ISIS இற்கு எதிராக போரிடும் உள்ளூர் போராளிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறார்கள். இப்பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை கனடா மூன்று மடங்காக அதிகரித்து 207 கனேடிய இராணுவ வீரர்களை இப்பயிற்சியில் ஈடுபடுத்த உள்ளது.

கனேடிய இராணுவவீரர்களில் 600 பேர் தற்போது ISIS இற்கு எதிராக போரிடும் அமெரிக்க கூட்டுப்படைக்கு பல்வேறுவிதமான உதவிகளை செய்ய அமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்களின் எண்ணிக்கை 830 இற்கு அதிகரிக்கப்பட உள்ளது.

2014 நொவெம்பர் 2ஆம் திகதியில் இருந்து கனேடிய விமானப்படையை சேர்ந்த ஆறு CF-18 Hornet ரக விமானங்கள் ISIS இற்கு எதிரான போரில் அமெரிக்க கூட்டுப்படைகளுடன் சேர்ந்து குண்டுபோட உபயோகப்படுத்தப்படுகின்றன. இதனது சேவையை கடந்த பழமைவாதக்கட்சியின் அரசாங்கம் 2015 மார்ச் 24இல் ஒரு வருடத்தால் நீடித்திருந்தது. கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ இந்த ஆறு போர் விமானங்களினதும் சேவையை 2016 பெப்ரவரி 22 உடன் நிறுத்திகொள்ள தீர்மானித்துள்ளார். இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் ISIS தீவிரவாதிகளுக்கு எதிராக குண்டு போடுதல் ஒரு குறுகிய இடைக்கால வெற்றியை தரும். குண்டு போடுவதால் மட்டுமே ஒரு நீண்டகால நிரந்தர சமாதானத்தை உருவாக்க முடியாது. உள்ளூர் வாசிகளை பயிற்றுவித்து அவர்களுக்கு எதிரிகளுடன் போரிடும் திறமையை உருவாக்க வேண்டும் என்றார்.

இதற்காக அடுத்த மூன்று வருடங்களுக்கு $145 மில்லியனை பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகளில் உள்ளூர்வாசிகளுக்கு பயிற்சி அளிக்க கனடா செலவிட உள்ளது. இது மட்டுமல்லாமல் கனேடிய அரசு $840 மில்லியனை மனிதாபிமான உதவிகளுக்கு வழங்கவுள்ளது. மேலதிகமாக $270 மில்லியனை ஜோர்டான் மற்றும் லெபனான் போன்ற அயல் நாடுகளில் அகதிகளை குடியேற்ற உள்ளூர் கட்டிட வசதிகளை உருவாக்க முதலிட உள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக கனடா தனது இராணுவ உதவியாக 2017 மார்ச் 31 வரை $264 மில்லியனை ISIS இற்கு எதிராக போரிட அமெரிக்கக்கூட்டுப்படைக்கு உதவ திட்டமிட்டுள்ளது.

கனடா தனது ஆறு CF-18 போர் விமானங்களை 2016 பெப்ரவரி 22 உடன் திருப்பி அழைத்தாலும் தொடர்ந்தும் அமெரிக்க கூட்டு இராணுவ போர் விமானங்களுக்கு ஆகாயத்தில் எரிபொருள் நிரப்பும் உதவியை தனது CC-150 Polaris விமானத்தின் மூலம் வழங்கும். அதேபோல் இரண்டு கனேடிய CP-140 Aurora விமானங்கள் தொடர்ந்தும் வான்வழி கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு அமெரிக்க கூட்டுப்படைக்கு உதவி வழங்கும். இவற்றைவிட கனேடிய இராணுவ வீரர்கள் அமெரிக்க கூட்டுப் படைக்கு இலக்குகளை அடையாளம் காட்டுதல் போன்ற பல உதவிகளை நேரடி மோதலில் ஈடுபடாமல் தொடர்ந்தும் செய்து கொண்டிருப்பார்கள்.

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

Buying Selling Residential & Commercial
Sothees Means Service
SOTHEES Kathirgamathamby
Sales Representative
HOMELIFE / Miracle Realty LTD., Brokerage
*Independently Owned Operated
* Free visa
* Free lawyer fee
* Home Warranty
416.704.1179
Toll Free: 1855 SOTHEES

VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com


HOMES for Sale *Commercial*Investments
LISTING COMMISSION 999/-* !!
Harwood & Taunton
4 bm 4 wsrm home 729 k
Bayview/Elgin Mills
finished
Rossland /Harwood
695k
4 bm 4 wsrm basement finished -apartment
Scarbough
LARGER LOT 50 x 182
Bungalow House
SCARBOROUGH
$263,500
New Condo apartment
Mccowan and Kingston rd
STORE PLUS APT
389k
Investment rented for $3000
9th Line & Bur Oak
LUXURY
4 bedroom / 5 wsrm bsmnt apt
Steeles/Kennedy
4 bm 3 wsrm
Ontario north 224K
100+Ac
Vacant 100+ acre
Pharmacy/Lawrence
649K
COMMISSION NEGOTIABLE GUARANTEED SALE
Hall of Famer
14 years of service
Century 21
80 Corporate Dr. Suite 208 Toronto
416-290 1200
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
PAT WILL BEAT ANY DEAL*!!
NEW condos
VIP ACCESS
SAVE MONEY!
21 FREE services
Rental corner
2+1 condo apt 1650/-
1+1 condo apt 1400/-
studio apt 999/-
3 bm bangalow 1590/-


THINKING OF SELLING, BUYING OR INVESTING
Always committed to work in the client's best interest
Act with Market Conditions
Exposing Your Property to 1000's of Potential Buyers
Call me to find out how much your home worth.
Free Market Evaluation without any Obligations
TRUST
HONEST
GUARANTEE
We do sell Cottages & Recreational Properties
Muthiah Sivabalan
Sales Representative
Friendly and Confidential Service Just Call
Cell: 416.399.6640
msbalan78@gmail.com
HomeLife/GTA Realty Inc.
Higher Standards Agents... Higher Results!


Friends MATRIMONY
திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண பொருத்தம் பார்க்கப்படும்
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257

# ISISஇற்கு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ISIS இற்கு எதிரான போரில் கனடாவின் பங்களிப்பாக மேற்கூறிய நடவடிக்கைகள் எல்லாவற்றிற்குமாகச் சேர்த்து கனேடிய அரசு அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில் $1.6 பில்லியனை செலவிட உள்ளது. இத்துடன் இந்த நாடுகளில் கனடா தனது இராஜதந்திர நிலைப்பாட்டையும் வலுவடையச் செய்யும் முயற்சிகளிலும் ஈடுபட உள்ளது. இந்த ஊடகவியலாளர் மாநாட்டிற்கு கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ, பாதுகாப்பு அமைச்சர் ஹர்யித் சஜ்ஜின், வெளிநாட்டு விவகார அமைச்சர் ஸ்ரீபன் டியோன் மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மேரி - குளோட் பிபாவ் சகிதம் வந்திருந்தார்.

கனேடிய அரசு இராணுவப் பயிற்சி அளித்தல் மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான தனது நிதி உதவி வழங்குதலை அடுத்த மூன்று வருடங் களுக்கு தொடர உறுதியளித்தாலும் அமெரிக்க கூட்டுப்படைக்கு இராணுவ உதவி வழங்குதலை அடுத்த இரண்டு வருடங்களுக்கு மட்டுமே தொடர உறுதியளித்துள்ளது.

கனடாவின் ISIS இற்கு எதிரான போரின் பங்களிப்பு பற்றிய இந்த திட்டத்தை எதிர்வரும் பெப்ரவரி 16 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது தற்போதைய லிபரல் கட்சி அரசு அங்கு பிரேரித்து விவாதம் நடத்தி வாக்கெடுப்பிற்கு விடும் எனவும் கனேடிய பிரதமர் தெரிவித்தார்.

கனேடிய பிரதமரின் ISIS இற்கு எதிரான போரின் கனடாவின் பங்களிப்பு பற்றிய புதிய திட்டம் பற்றி விமர்சித்த எதிர்க்கட்சித்




தலைவி றோனா அம்புரோஸ் அமெரிக்க கூட்டுப்படைக்கு உதவி புரியும் கனேடிய போர் விமானங்களை திருப்பி அழைப்பதன் மூலம் ISIS இற்கு எதிரான போரில் கனடா ஒருபடி பின்னோக்கிச் செல்கின்ற வெட்கக் கேடான நிலையை கனேடிய பிரதமர் செய்கிறார் என்றார்.

புதிய ஜனநாயகக்கட்சியின் வெளிவிவகார விடயங்களுக்கு பொறுப்பான ஹெலீன் லாவடெரி தெரிவிக்கையில் மேலதிக கனேடிய இராணுவ வீரர்களை லிபரல் அரசு தற்போது ஆபத்தான போர்முனைக்கு அனுப்ப முயல்கிறது என குற்றம் சாட்டினார்.

கனேடிய பாதுகாப்பு அமைச்சர் பெப்ரவரி 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் Brussels இல் நடைபெறவுள்ள NATO அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கலந்து கொள்ள உள்ள மாநாட்டிற்கு புறப்பட தயாராகும் வேளை கனேடிய அரசின் ISIS இற்கு எதிரான போரின் இந்த புதிய திட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

கனேடிய பிரதமரது இந்த புதிய திட்டத்தை வரவேற்று பேசிய கனேடிய பாதுகாப்பு அதிகாரிகளின் தலைவரான (Canada's Chief of Defence Staff) JonathanVance தெரிவிக்கையில் கனேடிய அரசின் இந்த அறிவிப்புகள் மிகச் சரியான நேரத்திலேயே வெளியிடப்பட்டுள்ளது என்றார். கனேடிய போர் விமானங்களை களத்தில் இருந்து திருப்பி அழைக்க இதுவே சரியான தருணம் என்றார். கனேடிய இராணுவ விமானங்களின் எரிபொருள் நிரப்பும் உதவியுடனும், வான்வழி கண்காணிப்பு உதவிகளுடனும், மற்றும் இலக்குகளை அடையாளம் காட்டும் பணியுடனும் அமெரிக்க கூட்டுப்படையின் வான்வழித் தாக்குதல் தொடரும் என்றார். இதற்குப் போதியளவு போர் விமானங்கள் அமெரிக்க கூட்டுப்படையிடம் உள்ளன என்றார். கனடாவின் முன்னணி இராணுவப்பிரிவின் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் போர் முனைக்கு அருகிலேயே பயிற்சி அளிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் அவர்கள் எதிரிகளுடன் நேரடி யுத்ததில் ஈடுபடமாட்டார்கள் என்றார்.

கனேடிய பிரதமருடனான தொலைபேசி உரையாடலின்போது அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கனடாவின் ISIS இற்கு எதிரான போரின் இந்த புதிய திட்டத்தை வரவேற்றார். அமெரிக்க கூட்டுப்படைக்கு கனடாவின் இந்த புதிய உதவிகள் வலுச் சேர்க்கும் என்றார்.

அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் Ashto Carter கனேடிய அரசின் எரிபொருள் நிரப்பும் மற்றும் வான்வழி கண்காணிப்பு உதவிகள் அமெரிக்க கூட்டுப்படைக்கு அத்தியாவசியம் என்றார். பென்ரகனின்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்...



# காத்திருக்கும் கட்சிகள் கனவில் விஜயகாந்த்

## தமிழ்நாடு அரசியல்

திமுக, மக்கள் நலக் கூட்டணி, பாஜக, காங்கிரஸ், தமிழ் மாநில காங்கிரஸ் என அதிமுக தவிர அனைத்துத் தமிழக அரசியல் கட்சிகளும் விஜயகாந்தின் தேமுதிகவோடு அரசியல் கூட்டணிக்காக முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள் "சரி", "வேண்டாம்", "பிறகு பார்ப்போம்" என்பன உட்பட எந்தப் பதிலையும் சொல்லாமல் எல்லோருக்கும் தண்ணீர் காட்டிக் கொண்டிருக்கிறார் விஜயகாந்த். "இப்படி இவர் செய்வது பணப் பேரத்துக்காகத்தான்" என்று சென்ற தேர்தலில் தேமுதிகவோடு கூட்டணி அமைத்திருந்த அதிமுக விமர்சிக்கிறது. இந்நிலையில், கூட்டணி பற்றி பொதுக்குழுவில் தெரிவிப்பார் எனக் காத்திருந்தவர்களுக்கும் எந்த பதிலையும் சொல்லாமல், "அடுத்து மாநாட்டில் பார்ப்போம்" விளையாட்டை நீடிக்கிறார் விஜயகாந்த். சரி, ஏன் விஜயகாந்துக்கு இவ்வளவு கிராக்கி?

### மூன்றாவது பெரிய கட்சி!

2015இன் கடைசி மூன்று மாதங்களுக்கு முன்பு வரைக்கும் பேஸ்புக், வாட்ஸ்சப், டிவிட்டர் என இணையதளங்கள், சமூக வலைத்தளங்கள் முழுக்க விஜயகாந்த் மீம்ஸ்கள் தான் நிறைத்திருந்தன. "கோமாளி யாகச் சித்தரிக்கப்பட்ட அந்தப் பதிவு களால், விஜயகாந்த் பெயர் நிறையவே டேமேஜ் ஆகிவிட்டது. இனி அரசியலில் அவர் நிலை அவ்வளவுதான்" என்று பலரும் ஆரூடம் கணித்தனர். ஆனால், இப்போது நிலைமை தலைகீழாகி விட்டது. வரும் தமிழகச் சட்டசபைத் தேர்தல் முடிவைத் தீர்மானிக்கும் தனிப்பெரும் சக்தியாக தமிழக அரசியல் களத்தில் நிற்கிறார் விஜயகாந்த்.

2005ஆம் ஆண்டுச் செப்ரெம்பர் மாதம் தேமுதிகவை



ஆரம்பித்தார் விஜயகாந்த். தொடர்ந்து வந்த 2006 சட்டசபை தேர்தலில், "மக்களுடனும் கடவுளுடனும் மட்டுமே கூட்டணி" என்று கூறி 234 தொகுதிகளிலும் தனித்தே போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் விருத்தாசலம் தொகுதியில் போட்டியிட்ட விஜயகாந்த் மட்டும் தேமுதிக சார்பில் வெற்றி பெற்றார். அதற்கு அப்பகுதியைச் சேர்ந்த பண்ருட்டி ராமச்சந்திரன் முக்கிய காரணமாக் கூறப்பட்டாலும், தமிழகம் முழுக்கத் தேர்தல் முடிவுகளில் தேமுதிக, காங்கிரஸைப் பின்னுக்குத் தள்ளி மூன்றாவது பெரிய அரசியல் கட்சியாக வெளிப்பட்டது. 3 தொகுதிகளில் 20 சதவிகித வாக்குகளும், 8 தொகுதிகளிலும் 15 – 20 சதவிகித வாக்குகளும், 33 தொகுதிகளில் 10 – 15 சதவிகித வாக்குகளும், 48 தொகுதிகளில் 7 – 10 சதவிகித வாக்குகளும் பெற்றிருந்தது.

இதனால், அடுத்து வந்த 2009 நாடாளுமன்றத் தேர்தலில் தேன் கூட்டை தேனிகள் மொய்ப்பது போல் தேமுதிகவை மற்றக் கட்சிகள் கூட்டணிக்காக மொய்க்கத் தொடங்கின. அப்போதும், "மக்களுடனும் கடவுளுடனும் மட்டுமே கூட்டணி" என்று கூறி தனித்தே போட்டியிட்டார் விஜயகாந்த். 9 தொகுதிகளில் தலா ஒரு லட்சம் வாக்குகளும் மற்ற தொகுதிகளில் 50 – 70 ஆயிரம் வாக்குகளும் பெற்றது, தேமுதிக. '2006 தேர்தல் முடிவுகளுடன் ஒப்பிடும்போது இது ஒரு பின்னடைவுதான். அதிகார பலம் இல்லாத நிலையில் தேமுதிக வாக்கு வங்கி மேலும் சரிவை

**தொடர்ச்சி 14ஆம் பக்கம்...**




அம்மா நகை அடைவு மாடம்

**Amma Pawn Broker**



வர்த்தகத் துறையில் **20வது** ஆண்டுகளை நிறைவு செய்யும் முகமாக உங்கள் அபிமான **"அம்மா நகை மாடத்தின்"** சிறப்பு வட்டி வீதம்

* உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டியுடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்.

2425 Eglinton Ave. E
Scarborough, ON
(சங்கர் அன் கோவுக்கு அருகில்)

**416-757-0034**
**416-994-3861**
**Downtown 416-921-0034**
ammapawnbroker@gmail.com

**1.5%** முதல் **2%** வட்டி மட்டுமே (Month)

* நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்
* அம்மாவுக்கு நிகரான சேவை அம்மா நகை அடைவு மாடமே
* உங்கள் பழைய நகைகளை அதி உயர் பெறுமதிக்கு எம்மிடம் விற்றும் கொள்ளலாம்
* கனடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவு சேவை

MORTGAGE ALLIANCE
Lic # 10530
RIGHTBROKER = RIGHTMORTGAGE

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto

Brockerage Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா?



நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
வீடு வாங்க, விற்க வாடகைக்கு விட அல்லது
பெற்றுக்கொள்ள

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

"மோட்கேஜ் கிளினிக்"




உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

Mortgage in Any Situation

திங்கள்—வெள்ளி (call for an appointment)

வோக் இன் : திங்கள் - சனி 9.00 - 5.00

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9



Jayson Fowler BA (Law)
Mortgage Agent / Former Underwriter
FSCO Lic # M 15002593
416-613-2788 / 416-816-9011



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240



ஜெ (Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

# தமிழில் தேசிய கீதம்:

## நல்லிணக்க செயற்பாட்டின் ஒரு சிறுதுளி !





இலங்கையின் 68வது சுதந்திர தினத்தின் போது, தமிழில் தேசிய கீதம் இசைக்கப் பட்டமையானது இனங்களுக்கிடை யிலான நல்லிணக்க செயற்பாட்டின் ஒரு வெளிப் பாடாகவே அனைவராலும் நோக்கப் படுகின்றது. சர்வதேச சமூகமும் இதனைப் பாராட்டியுள்ளது. குறிப்பாக, இலங்கைக்கு வருகை தந்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரும் இதனை வரவேற்பதாக கூறியுள்ளார். இவ்வாறு தேசிய கீதம் இசைக்கபட்ட போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உணர்ச்சிவசத்தில் கண் கலங்கினார் எனவும் செய்திகள் வெளியாகின. வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாட்டப்பட்டதை வரவேற்றதுடன், யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த விகாரைக்கு சென்று வழிபாடும் நடத்தினார். சிங்கள மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து ஒரு அடி முன்னோக்கி நகர்வார்களேயானால் அதற்காக 10 அடி முன்னோக்கி வைக்க தமிழ் மக்கள் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 'நமோ நமோ மாதா' என்று ஆரம்பிக்கும் தேசிய கீதம் ஆனந்த சமரக்கோனினால் 1940களில் எழுதப்பட்டது. ஆனால், 1950ஆம் ஆண்டே இலங்கை அரசினால் அது அங்கீகரிக்கப்பட்டது.



'ஸ்ரீ லங்கா மாதா' என ஆரம்பிப்பதாக அப் பாடலில் சிறு மாற்றம் செய்யப்பட்டது. அதனை, புலவர் மு.நல்லதம்பி 1950ஆம் ஆண்டு தமிழில் மொழிபெயர்த்தார். 'ஸ்ரீ லங்கா தாயே- நம் சிறீ லங்கா நமோ நமோ நமோ நமோ தாயே' என்று தொடங்கும் அப் பாடல்.1949ஆம் ஆண்டு டி.எஸ்.சேனாநாயக தலைமையில் அன்று தமிழில் பாடப்பட்ட தேசிய கீதம் அதன் பிறகு 2016ஆம் ஆண்டு பாடப் பட்டுள்ளது. இத னால். இதனை சக லரும் வரவேற் பதும், பாராட்டுவதும் சரியா னதே. ஆனாலும், இது ஒரு ஆச்சரிய மான விடயம் அல்ல. இது தமிழ் மக்களுக்கு கிடைத்த வெற்றி என்று சொல்லப்படுவதும் மிகைப்படுத்தப்பட்ட கூற்றே. தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்று, தமிழ் பிரதேசங்கள் அப் போராளிகளின் கட்டுப்பாட்டிற்கு வருவதற்கு முன்னர், பல்வேறு தருணங்களில், பல்வேறு நிகழ்ச்சிகளில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதுண்டு. குறிப்பாக, பாடசாலை நிகழ்வுகளில் மாணவர்களால் 'ஸ்ரீ லங்கா தாயே' என தமிழில் பாடப்பட்டமை நினைவிற்கு வருகின்றது. தென்னிலங்கையிலுள்ள தமிழ் பாடசாலைகளில் மட்டுமன்றி, வடக்கு கிழக்கு பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளிலும் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டு வந்தது. தேசிய கீதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை நீக்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான அமைச்சரவை கலந்துரையாடல் ஒன்றை 2010ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடத்தியது. இதற்கு இலங்கை தமிழ் கட்சிகள் அனைத்தும் எதிர்ப்பு தெரிவித் தன. பின்னர், தமிழ் மொழி தேசிய கீதத்தை நீக்கும் உத்தேசம் இல்லை என மஹிந்த அரசு தரப்பில் ஊடகங்கள் வாயிலாக தெரிவிக்கப் பட்டது. ஆனாலும், இந்த சர்ச்சை சிங்கள கடும்போக்கு இனவாதிகளால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

2015 ஜனவரி மாதம் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர்- அதாவது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், தமிழில் தேசிய கீதம் பாடுவதைத் தடை செய்யப் போவதில்லை என அறி வித்தார். இதன் பின்னரே இதற்கான எதிர்ப்பு மேலும் அதிகரிக்கத் தொட ங்கியது. பொது பல சேனா போன்ற தீவிரவாத அமைப்புக்கள் இதனை கடுமையான எதிர்த்தமை ஒரு புற மிருக்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவும் இதற்கு கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தினார். இலங்கை ஜனாதிபதி யாக பதவி வகித்தவர்களில் மஹிந்த ராஜபக்ஸவே தமிழில் அடிக்கடி (சில வசனங்களை) உரையாற்றுபவராக இருந்து ள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவரே இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், "எதிர்காலத்தில் அரபு மொழியிலும் பாடக் கேட்பார்கள்.." எனக் கூறியுள்ளார். தேசிய கீதம் தமிழில் பாடுவது நாட்டின் இறைமையை பாதிக்கும் ஒரு நடவடி க்கையாகவும் சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரை செய்யப்பட்டது. இவ்வாறான எதிர்ப்புக்கள் முனைப்பு பெற்று வந்த நிலையில், இலங்கையின் 68வது தேசிய சுத்நதிர தினத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதை புதிய அரசாங்கத்தின் துணிச்சலான நடவடிக்கை யாகவே கொள்ளலாம். போராளிகளின் கட்டுப்பாட்டில் தமிழ் பிரதேசங்கள் வந்த போது, அப்பிரதேசங்களில், இலங்கை தேசிய கீதம் பாடப்படுவதும், இலங்கையின் தேசியக் கொடி ஏற்றப்படவதும் தடைசெய்யப்பட்டது. குறிப்பாக, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தமிழ் பிரசேங்கள் இருந்த காலத்தில் தமிழீழ தேசியக் கொடி, தமிழீழ தேசிய கீதம் என்பன அறிமுகப் படுத்தப்பட்டு சகல நிகழ்வுகளிலும் அதுவே நடைமுறையிலிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சுதந்திர தினத்தின் பின்னர், தமிழில் தேசிய கீதம் பாடப்பட்ட விடயம் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை அலுவலகமான சிறி கொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், "தமிழில் தேசிய கீதம் பாடியதன் மூலம் தமிழீழ தேசிய கீதம் பாடப்படுவதை நிறுத்தியுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.

"68ஆவது சுதந்திர தினத்தின் போது தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது தொடர்பில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் பல்வேறு விமர்சனங்களையும், குற்றச்சாட்டுக்களை தெரி வித்து வருகின்றனர் தமிழில் தேசிய கீதம் பாடி யதன் மூலம் வடக்கில் தமிழீழ கீதம் பாடப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. இது எமக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். அத்துடன் நாட்டில் சிறுபான்மை இனங்கள் மதிக்கப் படுவதில்லை என்ற குற்றச்சாட்டு கடந்த காலங்களில் சர்வதேச நாடுகளில் இருந்து வந்துள்ளது. தற்போது அந்த குற்றச் சாட்டுக்களும் இல்லாமல் செய்யப் பட்டுள்ளது" எனவும் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக- பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் எதிரணியினரின் பரப்புரைகளுக்கு பதிலளிக்கும் விதமாக கருத்துக்களை வெளியிட்டிருந்தார், "போர் நடை-பெற்ற காலத்தில் தமிழ் பிரதேசங்களில் இலங்கையின் தேசிய கீதத்தை பாடக்கூடாது என பிரபாகரன் தடை செய்திருந்தார். இப்போது சிங்கள இனவாதிகள் தமிழில் தமிழ் மக்கள் தேசிய கீதம் பாடக் கூடாது என்கிறார்கள் இது சரியானதா" என கேள்வி எழுப்பியிருந்தார்.

எனவே. இவ்வாறு ஒரு மாற்றம் ஏற்படுத்தப் பட்டமையினால் புதிய அரசாங்கத்திற்கு ஒரு சாதகமான நிலைமை தோன்றியுள்ளதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இலங்கை பிரித்தானியர்களின் ஆதிக்கத்திலிருந்து விடு தலை பெறுவதற்கு தமிழ் தலைவர்களும் பங்காற்றியிருக்கின்றார்கள். சுதந்திரம் கிடைத்த தன் பின்னர் நாடு இன ரீதியாக பிளவுபடாம லிருப்பதற்கு தமிழ் தலைவர்களே வழிவகுத்துக் கொடுத்தார்கள். இந்த வரலாறுகளையும் புதிய ஆட்சியாளர்கள் சிங்கள மக்களுக்கு கூற வேண்டும். இலங்கையில் அதிகாரங்களை கைப்பற்றவும் அதனைத் தக்கவைக்கவும் பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவு மிக அவசியமானது. அதற்கு இனவாதம் பேசுவதும், இனவாத த்தையே இயக்கமாகக் கொண்டு நடத்தும் அமைப்புக்களை ஊக்குவிப்பதும் இன்று ஒரு முக்கிய செயற்பாடாக மாறியுள்ளது. மஹிந்த ராஜபக்ஸ தனது ஆட்சி காலத்தில் இவ்விடயங்களையே கைக்கொண்டி ருந்தார். போரில் பெற்ற வெற்றியும் அவருக்கு பெரும் பலத்தைக் கொடுத்தது. இவ்வாறானதொரு நிலைமையில் இலங்கையில் ஒரு ஆட்சிமாற்றம் ஏற்பட்டுள்ளமை ஒரு கனவு போலவே உள்ளது. எனினும், இந்த ஆட்சியை கவிழ்ப்பதற்கு என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். தமிழ் மக்களுக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிவற்றை வழங்குவதைக்கூட இனவாதக் கண்ணோட்டத் தில் பார்க்கப்பட்டு, பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**- விகிர்தன் -**

தமிழ் மக்களுடைய வாழ்விடங்களை மீளளித்தல், இராணுவ ஆக்கிரமிப்பை விலக்குதல் என்பன தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் பரிசுகள் அல்ல, அது அரசாங்கம் செய்ய வேண்டிய கடமை யாகும். இது, நாட்டின் பாதுகாப்பிற்கு கெடுதல் என்றும், நாட்டின் இறைமைக்கு பாதிப்பானது எனவும் சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரை செய்யப்படுகின்றது. இவ்வாறு, நாட்டு மக்களிடையே இனங்கள்- சமூகங்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தி மீண்டும் ஆட்சிக்கு வர மஹிந்த தரப்பினர் பல்வேறு காரியங்களை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு தெரிந்தோ. தெரியாமலோ துணை போகும் செயல்பாடுகளில் தமிழ் மக்களோ, தமிழ் அரசியல் கட்சிகளோ நடந்து கொள்ளக் கூடாது. இன்று ஏற்பட்டுள்ள மாற்றத்தை ஊக்குவித்து மேலும் பல மாற்றங்கள் ஏற்படுவதற்கான வழிவகைகளை தமிழ் மக்களும் மேற்கொள்ள வேண்டும். இன்று, இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டுள்ளதை வரவேற்போம். ஆனால், இதில் உணர்ச்சி வசப்படுவதற்கும், கரைந்து போவதற்கும் எதுவும் இல்லை. புதிய அரசாங்க மும் இந்த செயற்பாட்டை நல்லிணக்கத்தின் ஒரு சிறு துளியாகவே கருத வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் கூறியிருப்பதைப் போல, உண்மையான, விசுவாசமான நல்லிணக்கம் என்பது தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றினை காண்பதன் மூலமே சாத்தியப்படும்.


**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்



Ontario's Drive Clean
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. - (குறள்)

எதற்கும் அஞ்சாத படை, குடிமக்கள், அள்ள அள்ளக் குறையாத செல்வம், மதிநுட்பம் வாய்ந்த அமைச்சர்கள், உண்மையான நண்பர்கள், பலம்மிக்க காவல் அரண்கள் ஆகிய ஆறையும் உடையவன் அரசர்கள் எல்லோருக்கும் அரசன் போல் (சிங்கம் போல) திகழ்வான். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இவ் ஆறையும் உடையவன் அரசர்களுக்குள் அரசனாக இருப்பது தவிர்க்க முடியாதது. இது வள்ளுவர் கூற்று, 2000 ஆண்டுகளுக்கு முன்னர் கூறப்பட்டது. தற்காலத்திலும் இக் குறளிற்கு ஏற்றால் போல் இவ் ஆறையும் கொண்டு தற்போது உலகிலுள்ள அரசர்களுக்கு (அரசாங்கங்களுக்கு) எல்லாம் அரசனாக இருக்கக் கூடிய அரசனை (ஜனாதிபதியை) அமெரிக்க மக்கள் இவ்வருடம் நவம்பர் மாதம் 08ஆம் திகதி தெரிவு செய்ய உள்ளார்கள். உலகிலேயே மிகவும் சக்திவாய்ந்த இந்தப் பதவியை வகிக்க இருப்பவரது தெரிவை அமெரிக்க மக்கள் மட்டும் அல்ல உலகில் உள்ள எல்லா மக்களும் கூர்ந்து அவதானித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஜனாதிபதியை அமெரிக்க மக்கள் எவ்வாறு தெரிவு செய்கிறார்கள் என்பதை விபரிப்பதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும். இந்த ஜனாதிபதி தெரிவு முறை 200வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க அரசியல் சாசனத்தில் எழுதப் பட்டதாகும். இதற்கு சில சிறிய திருத்தங்கள் பின்னர் செய்யப்பட்டிருந்தாலும் இந்த 200வருடத்திற்கு முன்னர் எழுதிய சிக்கலான முறையையே அமெரிக்க மக்கள் இன்றும் கடைப்பிடிக்கிறார்கள். அமெரிக்க ஜனாதிபதி தெரிவு கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும். நாலு வருடங்கள் பதவி வகிக்கப் போகும் ஜனாதிபதியை தெரிவு செய்ய 2 வருடங்கள் எடுக்கின்றன. அரசர்களுக்கு அரசனை தெரிவு செய்யும் தேர்தல் அல்லவா! தவறுகள் நடந்து விடக் கூடாது. இதனால் தான் இந்த சிக்கலான 2 வருடங்கள் எடுக்கும் தேர்தல் முறை.



இக்கட்டுரை 2004, 2008 இல் விளம்பரம் இதழில் பிரசுரமானது. 2016ஆம் ஆண்டிற்கான மேலதிக தகவல்களுடன் தற்போது பிரசுரிக்கப்படுகிறது.

## தேர்தல் முறை

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முறை நான்கு பெரும் பிரிவுகளை அடக்கியது. அவையாவன:-

1. Pre Nomination Phase :- ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய முந்திய காலப்பகுதி.

2. National Conventions:- தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதி வேட்பாளர்களை கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு ஆகும்.

3. General Election:_ இது தேர்தல் பிரசார காலமும் பொதுத்தேர்தலும் ஆகும். (அதாவது நவம்பர் 08, 2016 வரை)

4. Electoral College Phase:- இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலப் பகுதியாகும். (அதாவது நவம்பர் 09, 2016 இல் இருந்து ஜனவரி 20, 2017 வரை)

பெரும்பாலான நாடுகளை போல் அல்லாமல் அமெரிக்க தேர்தல் முறையில் ஒவ்வொரு சம்பவமும் நடைபெறும் திகதிகள் அரசியல் யாப்பிலேயே எழுதப்பட்டுள்ளன. (உதாரணம் ஜனாதிபதி தேர்தல் நான்கு வருடத்திற்கு ஒருமுறை நாலால் பிரிக்கும் போது மீதி வராத ஆண்டில், வரும் நவம்பர் மாதத்தின் முதலாவது திங்கள் கிழமைக்கு அடுத்து வரும் செவ்வாய்கிழமை நடைபெற வேண்டும் என்பது அமெரிக்க சட்ட விதியாகும்.)

## ஜனாதிபதியின் தகுதி

முதலில் யார்யாரெல்லாம் அமெரிக்க ஜனாதிபதியாக வரலாம் எனப் பார்ப்போம்.
அ. அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கோ அல்லது உப ஜனாதிபதிப் பதவிக்கோ போட்டியிடுபவர் ஐக்கிய அமெரிக்காவிலே (50 மாநிலங்கள், Distric of Columbia மற்றும் Guam, Puerto Rico, Virgin Island என்பவற்றில்) பிறந்தவராக இருக்கவேண்டும்.

ஆ. அவருக்கு குறைந்தது 35 வயதாவது இருக்கவேண்டும்.

இ. அவர் அமெரிக்காவில் (50 மாநிலங்கள், மற்றும் Distric of Columbia) குறைந்தது 14 வருடங்கள் வசித்திருக்க வேண்டும்.


இவற்றை விட ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்படுவர் இரண்டு முழுமையான காலப்பகுதிக்கு மேல் பதவி வகிக்க முடியாது. ஏதாவது ஒரு காரணத்திற்காக ஓர் உபஜனாதிபதி, ஜனாதிபதி பதவியை ஏற்று 2 வருடங்களுக்கு குறைந்த காலம் ஆட்சி செய்திருந்தால் அவர் திரும்பவும் இரண்டு முழுமையான காலப்பகுதிக்கு ஜனாதிபதியாக வரலாம்.

## 1. Pre Nomination Phase

இவ்வாறு ஜனாதிபதி பதவிக்கு வருவதற்குரிய தகுதி சுலபமாக இருப்பதால் பலர் ஒரு ஜனாதிபதி தெரிவின் தொடக்க காலத்தில் வேட்பாளராக தேசிய தேர்தல் திணைக்களத்தில் (Federal Election Commission) பதிவார்கள்.

அமெரிக்க தேர்தல் திணைக்களத்தின் விதிக்கமைய இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர்களாக பதிந்தவர்கள் பதிந்து 15 நாட்களிற்கு தேர்தல் விதிக்கமைய (Federal Election Campaign Act) $5,000 அமெரிக்க டொலர்களை தேர்தல் வேலைக்கு செலவு செய்திருக்க வேண்டும். (உதாரணமாக 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் முதலில் பதிவு செய்த 203 வேட்பாளர்களில் வெறும் 33 பேர்களே இந்த விதிக்கமைய தேர்தல் திணைக்களத்தால் வேட்பாளர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் ஆவர்.) இங்கு முக்கியமாக நோக்க வேண்டிய விடயம் என்னவென்றால் ஒருவர் இவ்வாறு வேட்பாளராக தேர்தல் திணைக்களத்தில் பதிந்த பிற்பாடு அவர் சேகரிக்கும் மற்றும் செலவு செய்யும் ஒவ்வொரு சதத்திற்கும் தேர்தல் திணைக் களத்திற்கு கணக்கு காட்ட வேண்டும்.

2016 ஆம் ஆண்டு நடைபெறப்போகும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக நிற்பதற்கு 2016 பெப்பிரவரி 10ஆம் திகதி வரை 1547 பேர்



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

MARCIL THANGARANI NINAIVU
UNIVERSITY SCHOLARSHIP



Direct Family Financial Support Canada Inc.
in association with Monsoon Journal
Offers Two University Scholarships [2016]

Students attending any University in Canada in the second year (3 year program) or third year (4/5 year program) who fulfill the following conditions are eligible to apply

1) Proficient in Tamil (Speaking and reading) and in English or French (A or B grade or above 60% marks in Grade 11 or 12)
2) A Good performance grade in the first or second year at the University (above 65%)
3) The Selection Board may consider participation in community or school activities

Send Bio data and copies of school and University records to
Direct family Financial Support Canada
38 Helene Cres, Waterloo ON N2L5E5
email- marcilfrancis@gmail.com
DFFS

# ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை வருகை!




**- ஆதித்தன் -**

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசெய்ன் நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை வந்து சென்றுள்ளார். இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர், இவரது வருகை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கருதப்படுகின்றது.

கடந்த 6ம் திகதி இலங்கை வந்த அவர், அடுத்த நாள் 7ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். அங்கு வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடினார்.





வலிகாமம் வடக்கிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாமிற்கு சென்று அம்மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தார். மீண்டும் அவர்கள் தங்களின் சொந்த இடங்களுக்கு செல்ல வேண்டும் என்பதை தாம் விரும்புவதாகவும், அடுத்தமுறை வரும்போது அம்மக்கள் தங்கள் சொந்த இடங்களில் வாழ்வதை பார்க்க விரும்புவதாகவும் கூறினார். காணாமல் போனவர்களின் உறவினர்களையும் சந்தித்தார். பிரச்சினைகளை அரசாங்கத்திடம் கூறி தீர்வு காண வேண்டிய கடமை தமக்குள்ள தென்பதையும் அங்கு குறிப்பிட்டார். வட மாகாண முதலமைச்சருடனான சந்திப்பின்போது வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவருக்கு விளக்கப்பட்டது. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் அவரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

ஆனால், அரசியல் கைதிகளை பொது மன்னிப்பில் விடுதலை செய்வது நடைமுறைச் சாத்தியமற்ற விடயம் எனவும், இவ்வாறு கைதிகளை பொதுமன்னிப்பில் விடுதலை செய்வது என்பதை சர்வதேச நடைமுறை ஏற்றுக்கொள்வதில்லை என்றும் ஆணையர் குறிப்பிட்டிருந்தார். இக்கருத்தானது, கைதிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் ஏமாற்றமளிக்கும் விதமாக அமைந்திருந்தாலும் கூட, வெளிப்படையாகவே அவர் தனது கருத்தினை வெளியிட்டிருந்தார் என்பதையே நாம் கருத்திலெடுக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தினூடாக கைது செய்யப்பட்டுள்ள அவர்களில் சிலர் 18 வருடங்களுக்கு மேலாகவும் சிறைகளில் வாடுகின்றனர். அவர்கள் மீது எவ்வித வழக்கு விசாரணைகளும் இதுவரை மேற்கொள்ளப்படாமலுள்ளது. தங்கள் வாழ்நாளின் நீண்ட காலத்தை அவர்கள் சிறையில் கழித்துள்ளனர். எனவே, இவர்களின் விடுதலையில் ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது முக்கியமானது. இது மனித உரிமைகள் ஆணையாளருக்கு தெரியாத ஒன்றல்ல. பொதுமன்னிப்பு இல்லாவிடினும், மாற்று நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்வதற்கான அழுத்தத்தினை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்.

சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் பொது மன்னிப்பு சாத்தியமற்றது என்பது ஆணையாளரின் கருத்தாகவுள்ளதெனினும், அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு வேறு பல ஒழுங்குகள் இருக்கின்றன என தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்கு முதல்வரின் சந்திப்பின் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினரை ஆணையாளர் கொழும்பில் வைத்து சந்தித்த போதும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவருக்கு மேலும் விளக்கப்பட்டது. நியாயமான, நிரந்தர அரசியல் தீர்வின் அவசியம்- ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில், நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முழுமையாக முறையாக அமுல் படுத்த வேண்டியது- காணிகள் விடுவிப்பு- தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை- காணாமல் போனோரின் விவகாரம் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் அவருக்கு எடுத்துரைக்கப்பட்டது. மனித உரிமைகள் ஆணையாளர் கிழக்கு மாகாணத்திற்கும் சென்று அங்குள்ள நிலைமைகளையும் ஆராய்ந்தார். கிழக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரையும் சந்தித்து கலந்து ரையாடினார். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

கண்டியில் அஸ்கிரிய மற்றும், மல்வத்து மாநாயக்கர்களையும் அவர் சந்தித்து தனது இலங்கைப் பயணத்தின் நோக்கம் குறித்து தெளிவு படுத்தினார். இதன்போது, வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறை அவசிய மில்லை என அவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனையும் அவர் செவிமடுத்தார். கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்த பின்னர், அவர் கொழும்பில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் பல விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக, பல்வேறுபட்ட தவறான எண்ணக் கருக்கள் இலங்கையில் காணப்படுவதாக அவர் தெரிவித்தார். இலங்கையின் இறையாண்மையிலும் சுதந்திரத்திலும் தலையிடும் முயற்சி அதுவல்ல எனவும், அந்தத் தீர்மானம் இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக் கூறலையும் மனித உரிமைகளையும் ஊக்குவிப்பதற்காகவே கொண்டு வரப்பட்டதாகத் தெரிவித்தார்.





மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை எனவும், இதன்போது அவர் உறுதிசெய்தார். அதேவேளை, பெண்கள் மீதும், சிறுமிகள் மீதும் பாலியல் வன்முறைகளும் துன்புறுத்தல்களும் மோசமாகக் கையாளப்பட்டததாகத் தெரிவித்த அவர், அக்குற்றங்களில் ஈடுபட்டவர்கள், இராணுவம் அல்லது பாதுகாப்புப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கும் போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் கலப்பு நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதையும் அவர் குறிப்பிட்டார். இந்த நடைமுறையை பின்பற்றினால் சிறப்பாக இருக்கும் எனவும் அவர் கூறினார். மனித உரிமைகள் தொடர்பான விசாரணையே நிகழ்த்தப்பட்டது, குற்றங்கள் தொடர்பான விசாரணை நிகழ்த் தப்படவில்லை.

எனினும், போர்க்குற்றங்கள் இடம்பெற்றதா என்பது தொடர்பில், நீதி மன்றத்தின் மூலமே தெரியவரும் எனவும் அவர் விளக்கினார். தனது இந்தப் பயணம், இதற்கு முன்னர் வருகை தந்த நவநீதம்பிள்ளையின் பயணத்தை விட கூட்டுறவுமிக்கதாகவும், வரவேற்பைத் தருவதாகவும் அமைந்திருந்த தைச் சுட்டிக்காட்டிய அவர், கடந்த ஆட்சியின்போது, அப்போதைய மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வந்தபோது, அவரது நற்பெயர் மீது மோசமான தாக்குதல் நடத்தப்பட்டமையை நினைவுபடுத்தினார். தற்போது, இலங்கையில் காணப்படும் புதிய சூழலில், சிவில் சமூகத்தில் மிதவாதக் குரல்கள் காணப்படக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ள தாகத் தெரிவித்த அவர், இருந்த போதிலும் சில வேளைகளில், வெறுப்பினதும், இன வெறியினதும் குரல்கள் இன்னமும் அதிக சத்தத்துடன் ஒலிப்பதாகவும், அதன் காரணமாக, அவை அதிகளவில் கேட்கப்படுவதாகவும் தெரிவித்தார். ஊடகவியலாளர்களுக்கான சுதந்திரம் தற்போது ஏற்பட்டுள்ளதையும் குறிப்பிட்டார். அச்சசூழல், கணிசமான அளவு இல்லாது போயுள்ளது என்றும், குறிப்பாக கொழும்பு உள்ளிட்ட தென்னிலங்கையில் அவ்வாறிருப்பினும், வடக்கிலும் கிழக்கிலும் நிலைமை கவலையளிப்பதாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தில், சிங்களத்திலும் தமிழிலும் தேசியகீதம் பாடப்பட்டமையையும், அதனைத் தொடர்ந்து, பௌத்த விகாரைக்கு வடமாகாண முதலமைச்சர் விஜயம் செய்தமையையும், தன்னைப் படுகொலை செய்ய முயன்ற நபரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிப்பளித்து விடுவித்தமையையும், அண்மைக்காலத்தின் சிறப்பான நிகழ்வுகளாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கு கிழக்கில் இராணுவம் தம்வசம் வைத்திருக்கின்ற பொதுமக்களின் காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும் என்றும், அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான வழிவகைகளை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் எனவும், அவர் கோரிக்கை விடுத்தார். குறிப்பாக, எஞ்சியுள்ள தடுப்புக் கைதிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யவோ அல்லது விடுவிக்கவோ அரசாங்கம், வழிவகையொன்றைக் காணவேண்டும் என அவர் வலியுறுத்தினார். காணாமல் போனவர்களில் யார் இன்னமும் உயிருடன் இருக்கின்றார்கள், எத்தனை பேர் இறந்துள்ளார்கள் அல்லது கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதை அடையாளம் காண்பதற்கான துரித நடவடிக்கையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அவர்களின் இறப்புத் தொடர்பில் சரியாக கணக்குக் காட்டப்பட வேண்டும், அத்தோடு, அவ்வுயிரிழப்புகள், சட்டத்துக்கு உட்பட்டவையா அல்லது இல்லையா என்பதும் கண்டறியப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசெய்ன் இலங்கையில் கழித்த நான்கு நாட்களும், பயனுள்ள வகையிலேயே அமைந்திருந்ததை இங்கு குறிப்பிட வேண்டும். அவர் மேற்கொண்ட சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள் அவற்றினூடாக அவரது அவதானிப்புக்கள் யாவும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் வெளியிட்ட கருத்துக்களின் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள விசாரணைப் பொறிமுறை குறித்து ஜனாதிபதி அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் கூட மக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்திருந்தது. ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளரின் வருகையின் பின்னர் அவ்வாறான குழப்பங்கள் தீரும் என நம்புவோம்.


விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன்
தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# அமெரிக்க...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

வேட்புமனுவை அமெரிக்க தேசிய தேர்தல் திணைக்களத்தில் தாக்கல் செய்துள்ளார்கள். இவர்களில் பலர் ஏற்கனவே விலகியுள்ளார்கள்.

இவ்வாறு பலர் தகுதியானவர்களாக இருந்தாலும் ஊடகங்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரையே அமெரிக்காவில் உள்ள இரண்டு பெரிய கட்சிகளான குடியரசுக் கட்சி (Republicans) மற்றும் ஜனநாயக கட்சியில் (Democrats) வேட்பாளராக வர தகுதி வாய்ந்தவர்களாக கருதி அவர்களைப்பற்றி அலசி ஆராய்வார்கள்.

இதுவரை ஜனநாயகக்கட்சியின் சார்பில் வேட்பாளர்களாக இருப்பவர்கள் இருவர். அவர்கள் Hillary Clinton உம் Bernie Sanders உம் ஆவார். இதுவரை குடியரசுக்கட்சியின் சார்பில் வேட்பாளர்களாக இருப்பவர்கள் ஏழு பேர் அவர்கள் Jeb Bush, Ben Carson, Ted Cruz, Jim Gilmore, John Kasich, Marco Rubio மற்றும் Donald Trump ஆவார்கள்.

தேர்தல் திணைக்களத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனாதிபதி வேட்பாளர்கள் சில ஒழுங்கு முறைக்கு அமைய ஒவ்வொரு மாநிலத்திலும் தமது செல்வாக்கை மாநில அரசுகளுக்கு நிரூபிக்க வேண்டும். இவ்வொழுங்கு முறை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். இவை முக்கியமாக இரண்டு வகைப்படும். அவையாவன:-


I. மாநிலத் தேர்தல் - (Primaries) இது மாநில அரசால் நடத்தப்படும் ஒரு தேர்தல். இதில் வாக்காளர்கள் தங்கள் பிரதிகளை (Delegates) நடைபெற இருக்கும் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் கட்சி தேசிய மாநாட்டிற்கு (National Conventions) தெரிவு செய்வார்கள். இம்மாநிலத்தேர்தல் இரண்டு வகைப்படும். ஒன்று 'திறந்த தேர்தல்' (Open Primary) இதில் மாநிலத்திலுள்ள எல்லா வாக்காளர்களும் இரண்டு கட்சிகளுக்குரிய தேசிய மாநாட்டிற்கான பிரதிநிதிகளை தெரிவு செய்வதாகும். ஆனால் ஒருவரால் ஒரு கட்சிக்கு மாத்திரமே வாக்களிக்க முடியும். மற்றது 'மூடிய தேர்தல்' (Closed Primary) இதில் அந்தந்த கட்சிக்குரிய அங்கத்தவர்கள் மட்டும் தங்கள் கட்சி தேசிய மாநாட்டிற்கான பிரிதிநிதிகளை தெரிவு செய்வதாகும்.

II. மாநில கட்சிமாநாடு:- (Caucuses) இது மாநிலத்தில் கட்சிகளால் நடத்தப்படும் ஒரு தேர்தல். இதில் கட்சி அங்கத்தவர்கள் தங்களது பிரதிநிதிகளை (Delegates), நடைபெற இருக்கும் (ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும்) தமது கட்சி தேசிய மாநாட்டிற்கு தெரிவு செய்வார்கள்.

இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் மக்கள் இத்தேர்தல்களில் நேரடியாக ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்வதில்லை. கட்சியின் தேசிய மாநாட்டிற்கு உரிய பிரதிநிதிகளையே தெரிவு செய்கிறார்கள். என்ன குழம்புகிறீர்களா?

இவ்வாறு தெரிவு செய்யப்படும் தேசிய மாநாட்டிற்கான பிரதிநிதிகளுக்கும் (Delegates) ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் என்ன தொடர்பு என்று நினைக்கிறீர்களா?

இவ்வாறு தெரிவு செய்யப்படும்




பிரதிநிதிக்கு நிற்பவர்கள் தாங்கள் எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்கிறோம் என்று முன்கூட்டியே கூற வேண்டும். சில பிரதிநிதிகள் தெரிவிற்கு நிற்பவர்கள் தாங்கள் சுயேச்சை ஆனவர்கள் (அதாவது தேசிய மாநாட்டிற்கு போய் அங்கு ஜனாதிபதி வேட்பாளர்கள் முன் வைக்கும் கொள்கை அடிப்படையில் தனது கட்சி ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்வோம்) என்று கூறுவதும் உண்டு.

## எத்தனை பிரதிநிதிகள் *(Delegates)* தேசிய மாநாட்டிற்கு தெரிவு செய்யப்படுவார்கள்?

ஜனநாயகக் கட்சி, மாநில சனத்தொகையிற்கும் கடந்த காலங்களில் அந்த மாநிலத்தில் இருந்து ஜனாதிபதி தேர்தலில் விழுந்த வாக்கு எண்ணிக்கைக்கும் ஏற்ப ஒரு சூத்திரத்தின் (Formula) மூலம் எத்தனை பிரதிநிதிகள் அந்த மாநிலத்தில் தெரிவு செய்யப்பட வேண்டும் என நிர்ணயிப்பார்கள். ஜனநாயகக்கட்சி இம்முறை 4,762 பிரதிநிதிகளை தேசிய மாநாட்டிற்கு தெரிவுசெய்கிறது. இவர்களிடமிருந்து 2,382 வாக்குகளைப் பெற்றவர் ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படுவர்.

குடியரசு கட்சி, ஒரு மாநிலத்திலுள்ள பாராளுமன்ற தேர்தல் தொகுதி ஒன்றிற்கு மூவர் என்றும் மாநிலத்திற்கு பொதுவாக ஆறு பேர் என்றும் பிரதிநிதிகளை தெரிவு செய்வார்கள். கடந்த காலங்களில் அந்த மாநிலத்தில் இருந்து ஜனாதிபதி தேர்தலில் விழுந்த வாக்கு எண்ணிக்கைக்கும் ஏற்ப மேலதிக பிரதிநிதிகளையும் அம்மாநிலத்திற்கு கொடுப்பார்கள். குடியரசுக்கட்சி இம்முறை 2,472 பிரதிநிதிகளை தேசிய மாநாட்டிற்கு தெரிவுசெய்கிறது. இவர்களிடமிருந்து குறைந்தது 1,237 வாக்குகளைப் பெற்றவர் குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படுவார்.

ஒரு மாநிலத்தில் தெரிவு செய்யப்படும் மொத்த பிரதிநிதிகளை ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பகிரும் விதம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். சில மாநிலங்கள் அம்மாநிலத்திற்குரிய பிரதிநிதிகளை ஜனாதிபதி வேட்பாளர் பெற்ற வாக்கு வீதத்திற்கு ஏற்ப பகிர்ந்து கொடுக்கும். சில மாநிலங்கள் அம்மாநிலத்திற்குரிய பிரதிநிதிகள் எல்லோரையும் அதிகூடிய வாக்குகளை பெற்ற ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்கே கொடுத்துவிடும். வேறு சில மாநிலங்கள் இரண்டும் கலந்த ஒரு முறையில் பிரதிநிதிகளை ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும்.

இவ்வாறான தேசிய மாநாட்டிற்கான பிரதிநிதிகள் தெரிவுசெய்தல் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் ஆண்டில் ஜனவரிக்கு ம் யூன் இற்கும் இடையில் நடைபெறும்.

இதுவரை பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் மாநில தேர்தல் Iowa மற்றும் New Hampshire மாநிலங்களில் மட்டுமே நடைபெற்றுள்ளது. இவ்விரண்டு மாநிலங்களிலும் சேர்த்து ஜனநாயகக் கட்சியில் Hillary Clinton 44 பிரதிநிதிகளையும் Bernie Sanders 36 பிரதிநிதிகளையும் பெற்றுள்ளனர். இவ்விரண்டு மாநிலங்களிலும் சேர்த்து குடியரசுக் கட்சியில் Donald Trump 17, Ted Cruz 11, Marco Rubio 10, John Kasich 5, Jeb Bush 4, Ben Carson 3 மற்றும் Jim Gilmore 0 பிரதிநிதிகளை பெற்றுள்ளனர்.

முற்காலத்தில் தேசிய மாநாட்டிற்கான பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் கட்சிகள் மாநில கட்சி மாநாடு (Caucuses) முறையை அதிகம் பயன்படுத்தின. இப்போது கட்சிகள் மாநில தேர்தல் (Primaries) முறையையே அதிகம் பயன்படுத்துகின்றன.

தேர்தல் திணைக்களத்தால் ஜனாதிபதி வேட்பாளர்களை ஏற்றுக்கொள்வதும் கட்சிகளின் தேசிய மாநாட்டிற்கு மாநிலங்களில் இருந்து பிரதிநிதிகளை (Delegates) தெரிவு செய்வதும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முறையில் உள்ள நான்கு பிரிவில் முதலாவது பிரிவான Pre Nomination Phase இல் அடங்கும்.

தொடரும்....


# ISISஇற்கு...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

பேச்சாளர் பீற்றர் குக் தெரிவிக்கையில் ருடோ அரசின் இந்த உதவிகள் அமெரிக்க கூட்டுப்படையின் ISIS இற்கு எதிரான போரிற்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளது என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் கனேடிய பாதுகாப்பு அமைச்சருடன் கனேடிய அரசின் இந்த உதவிகள் பற்றி மேலும் விரிவாக கலந்துரையாடல்களை Brussels இல் சந்திக்கும் போது நடத்துவார் என்றார்.




# அத்தனைக்கும் ஆசைப்படு!



## சத்குரு வாசுதேவ்

இருபது வயதைத் தாண்டிவிட்டாலே இளைஞர்களிடம், 'எப்போது திருமணச் சாப்பாடு போடப் போகிறாய்?' என்று கேட்பது ஒரு சடங்காகி விட்டது.

கல்வி போல, உத்தியோகத்தைப் போல, நம் சமூகத்தில் திருமணம் என்பதும் ஓர் அந்தஸ்தாகக் கருதப்படுகிறது.

திருமணம் என்பது தனக்கு அவசியமா, இல்லையா என்ற யோசனையே இல்லாமல், மற்றவர்கள் செய்து கொள்கிறார்களே என்று தானும் சிக்கிக் கொள்பவர்கள், மூன்றாம் நாளே பேயடித்தது போல் காணப்படுகிறார்கள்.

திருமணம் என்று மட்டும் இல்லை... நீங்கள் எந்தச் செயல் செய்தாலும்,


Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org


அதற்கான பின்விளைவுகள் வெள்ளம் போல் அடித்துக்கொண்டு வரும் என்பதை மறக்கக்கூடாது. அவற்றைச் சுணங்காமல் எதிர்கொள்ள உங்களைத் தயார் செய்து கொண்ட பிறகே, காரியத்தில் இறங்க வேண்டும்.

வயதில் மூத்தவர்கள், இளையவர்களுக்கு அப்பழுக்கில்லாத அன்பைச் செலுத்தச் சொல்லித் தருவதில்லை. ஆனால், பெண்களைப் பெற்ற பெரும்பாலானவர்கள், புகுந்த வீட்டு மனிதர்களை அனுசரித்துப் போகச் சொல்லி தங்கள் மகளுக்கு அறிவுரை தருவார்கள். இவர்கள் தங்கள் மகளைப் பற்றிய பொறுப்பை அடுத்தவர் தோள்களுக்கு மாற்றுவதாகவே நினைத்து, அவளுக்கான துணையைத் தேடுகிறார்கள்.

சங்கரன் பிள்ளையின் திருமணமாகாத மகள், திடீரென்று கர்ப்பமாகி வந்து நின்றாள். சங்கரன் பிள்ளை ஆத்திர மானார். அவளைத் தாறுமாறக அடித்து, அதற்குக் காரணம் யாரென்று உலுக்கினார்.

அவள் அழுதுகொண்டே அவன் பெயரைச் சொன்னாள்.

சங்கரன் பிள்ளை தன் துப்பாக்கியை எடுத்துக் கொண்டார். நேரே அவனைத் தேடிப் போனார். அரண்மனை போன்ற அந்த வீட்டின் கதவை உதைத்துத் திறந்தார். கட்டிலில் படுத்திருந்த அவனின் நெற்றிப் பொட்டில் துப்பாக்கிமுனையை வைத்தார்.

'அவசரப்படாதீர்கள். நாம் இதைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்' என்று அவன் கெஞ்சினான்.

'நீ ஊரிலேயே பெரிய பிஸினஸ்மேனாக இருக்கலாம். ஆனால், சின்னப்பெண்ணை ஏமாற்றியிருக்கிறாய். உனக்கு என் கையால்தான் சாவு' என்று உறுமினார் சங்கரன் பிள்ளை.

'ஐயா, உங்கள் மகளுக்குப் பெண்குழந்தை பிறந்தால் பத்து இலட்சம் தருவதாக இருக்கிறேன்!

'ஆண் குழந்தையாக இருந்தால்!

'இருபது இலட்சம் தருவேன்!

சங்கரன் பிள்ளை துப்பாக்கியை மடக்கிப் பையில் வைத்துக்கொண்டார். அவனுக் கெதிரில் மரியாதையாக நின்றார். நெளிந்த படி கேட்டார். 'ஒருவேளை கரு தங்காவிட்டால், என் மகளுக்கு இன்னொரு வாய்ப்புத் தருவீர்களா சார்?'

செல்வத்தையும் வசதிகளையும் மட்டுமே அளவுகோலாக வைத்துத் திருமணங்களை நிச்சயம் செய்பவர்களுக்கும் சங்கரன் பிள்ளைக்கும் அதிக வித்தியாசம் இல்லை.

ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி... வசதியான குடும்பம், கை நிறையச் சம்பளம் என்பவற்றையே வாழ்க்கைப் பொருத்தங்களாக நினைப்பது பரிதாபமல்லவா?

மனப்பொருத்தம் பற்றி யோசிக்காமல், மற்ற காரணங்களை உத்தேசித்து, இரண்டு பேரை ஒரு கட்டுக்குள் கொண்டு வருவது தான் பெரும்பாலான திருமணங்கள் கசப்பாகிப் போவதற்கான அடிப்படைக்காரணம்.

உங்கள் திருமண வாழ்வை எப்படிச் சந்தோஷமாக அமைத்துக் கொள்வது என்று சொல்லித்தர, நூற்றுக்கணக்கான புத்தகங்களை இன்று மேல்நாட்டில் எழுதித் தள்ளுகிறார்கள்.

'ஒரு நாளைக்கு இத்தனை தடவை 'ஐ லவ் யூ' என்று சொல், இத்தனை தடவையாவது தொட்டுப் பேசு, இத்தனை தடவையாவது முத்தம் கொடு' என்று கணக்கெல்லாம் சொல்லி விற்பனை செய்கிறார்கள். பிறந்த குழந்தைக்குத் தாய் எத்தனை முத்தம் கொடுக்க வேண்டும் என்று சொல்லித் தரக்கூட அங்கே ஆட்கள் இருக்கிறார்கள். அதையெல்லாம் படித்து ஒவ்வொன்றுக்கும் விரல்விட்டு எண்ணிக் கொண்டிருந்தால், ஒரு வாரத்துக்குள் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் போய்ச் சேர வேண்டியிருக்கும்.

உண்மையான அன்பிருந்தால், கட்டி அணைக்கவும் முத்தம் கொடுக்கவும் ஏற்ற நேரத்தை இதயமே தேர்ந்தெடுக்கும்.

ஒரு தம்பதியின் இருபத்தைந்தாவது திருமண நாள் கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடந்து கொண்டிருந்தன.

கணவனின் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்து கொண்டிருந்தது. மனைவி நெகிழ்ந்து போய், அவனைத் தன்மீது சாய்த்துக் கொண்டாள்.

'என்ன கண்ணா... என் மேல் அவ்வளவு பிரியமா? எதற்கு இவ்வளவு உணர்ச்சி வசப்படுகிறீர்கள்?'

கணவன் கண்ணீரை அடக்க முடியாமல் சொன்னான்.. 'நாம் காதலித்து, ஜாலியாகச் சுற்றிக் கொண்டிருந்த போது, உன் அப்பா நீதிபதியாக இருந்தாரே... நினைவிருக்கிறதா?'

'ஆமாம்!'

'நம் விடயம் தெரிந்து, அவர் என்னைத் தேடி வந்துவிட்டார். என் மகளைத் திருமணம் செய்யாமல் ஏமாற்றினாயோ, உன்னை இருபத்தைந்து வருடம் உள்ளே தூக்கிப் போட்டுவிடுவேன் என்று மிரட்டினார். அந்த மிரட்டலுக்கு மட்டும் நான் பயப்படாமல் இருந்திருந்தால், இன்றைக்கு நான் விடுதலையாகி இருக்க வேண்டிய நாள்!

திருமணம் என்றாலே இப்படி வேதனை தானா? இல்லவே இல்லை! இரண்டு உயிர்கள் ஒன்றை புரிந்துகொண்டு, வாழ்க்கையை ஆனந்தமாக்கிக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் அது. உண்மையான அன்பைப் பகிர்ந்துகொள்ளக் கிடைக்கும் ஓர் அற்புதமான வாய்ப்பு!

ஆனால் திருமணத்துக்கு அப்புறம் அடுத்தவரிடம் என்ன ஆதாயம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் கணவன்-மனைவி உறவு அமைந்தால், வாழ்க்கை கொந்தளிப்புகள் நிறைந்ததாகி விடும். கோர்ட் வரை போகாவிட்டாலும், குடும்ப அளவிலேயே திருமணம் தோற்றுவிடும். இருவருக்கிடையிலான உறவு இனிதாக இருக்க வேண்டுமானால், அங்கு ஆதாயக் கணக்குகளுக்கு இடம் இருக்கக்கூடாது. அன்பு மட்டும் தீவிரமாக மலர்ந்திருந்தால், வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் விழுந்தாலும் காயப்படாமல் சுகமாக மிதந்து பயணம் செய்யமுடியும்.


கனேடியச் செய்திகள் ... இலங்கைச் செய்திகள்...
சர்வதேசச் செய்திகள்.... விளையாட்டுச் செய்திகள்...
சினிமா செய்திகள்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com







## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

மரணத்துக்குப் பின் சொர்க்கம் போவேனா, நரகம் போவேனா?'

'இப்போது கிடைத்த வாழ்க்கையைச் சந்தோஷமாக வாழத் தெரியாமல் வருத்திக் கொள்பவர்கள்தான், எப்பாதோ கிடைக்கப் போகும் சொர்க்கத்துக்காகக் கவலைப்படுவார்கள்.

எல்லாம் முடிந்த பிறகு எங்கே போகிறீர்கள் என்பதா முக்கியம்? அங்கே உள்ள விதிகளைப் பற்றி உங்களுக்கென்ன தெரியும்?

ஒருவேளை அங்கே நரகமாயிருந்தால், இங்கே கிடைத்த சொர்க்கத்தையும் அல்லவா வாழாமல் கோட்டைவிட்டிருப்பீர்கள்?

இங்கே கிடைக்கும் ஒவ்வொரு கணத்தையும் அன்போடும் பிரியத்தோடும் செலவு செய்யுங்கள். ஒவ்வொரு மூச்சையும் ஒவ்வொரு செயலையும் முழுமையான ஈடுபாட்டுடன் அனுபவித்து வாழுங்கள்.

அதைவிட்டு விட்டு, இங்கே வாழ்க்கையை நரகமாக்கிக் கொண்டு, தெரியாத சொர்க்கத்துக்காகத் திட்டமிடுவதைப் போன்ற முட்டாள்தனம் வேறு எதுவுமில்லை!'

# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் 458

கடந்த பல வருடங்களில் நடைபெற்றது போலவே ஆதன வியாபாரத்தில் 2015 ஆம் ஆண்டும் ஒரு சாதனை ஆண்டாக நிறைவேறியுள்ளது. வருடா வருடம் ஆதன வியாபாரம் அதன் விலை பல காலமாக அதிகரித்தே வருகின்றது. ரொறொன்ரோ றியல் எஸ்ரேற் சம்மேளனத்தில் (Toronto Real Estate Board) 43,000 ஆதன முகவர்கள் அங்கத்தவராக உள்ளார்கள். 2015 இல் 101,299 ஆதனத்தை விற்று வாங்க கொடுத்துள்ளார்கள். இந்த எண்ணிக்கை 2014ஆம் ஆண்டைவிட 9.2% இனால் அதிகரித்துள்ளது. அத்துடன் ஆதனத்தின் சராசரி விலையும் இதற்கு முந்தின ஆண்டை விட (2014) 10% இனால் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு சராசரி விலை அதிகரிப்பே. சில பகுதிகளில் அதிகமாகவும் சில பகுதிகளில் குறைவாகவும் அதிகரித்துள்ளதனை கவனத்தில் கொள்ளவும்.

பல பொருளாதார ஆய்வாளர்களின் கருத்தின்படி, 2016ஆம் ஆண்டும் ஒரு வித்தியாசமான ஆண்டாகவே இருக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஜனவரி, பெப்ரவரி (2016) மாதங்களின் காலநிலையும் வியாபாரத்திற்கு ஏற்றமாதிரி அனுகூலமாகவே காணப்படுகின்றது.

GTA இல் வாழ்பவர்களிற்கு, முதல் வீடு வாங்குவது இலகுவாக இருக்க முடியாது. அதிக விலை அதிகரிப்பு அத்துடன் தனி வீடு, சேர்ந்த வீடுகளின் எண்ணிக்கை சந்தையில் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் அதிக போட்டி போட்டே நிர்மாணத்திற்கான செலவுகள் (Example: Development Charges) போன்றவை நிர்மாணம் செய்யும் நிறுவனங்களை மேலும் விலையை அதிகரிக்கவே செய்கின்றது. இதனால் அடுக்குமாடி மனைகளே எதிர்கால தீர்வாகலாம். அத்துடன் Echo Generationஉம், வயதானவர்களும் (Senior Citizen Generation) போன்றவர்களிற்கு அடுக்கு மாடி மனைகளே ஒரு தீர்வாகலாம்.

பொருளாதார நடுநிலைமையை உருவாக்க மூன்று மட்ட அரசுகளும் சேர்ந்து முடிவுகள் எடுக்கும் நேரம் வந்துள்ளது. புதிய மத்திய அரசு சாலைகள், தெருக்கள், வீதிகள், பாலங்களை.... இலகுவான முறையில் தொடர்ந்த ஆதனவிலை அதிகரிப்பு, அரசியல் வாதிகளை, ஒரு இறுக்கமான முடிவு எடுக்க வைக்கும் என எதிர்பார்க்கலாம். எவ்வளவு விரைவாக எடுக்க வைக்க வேண்டும் என்பதே கேள்வியாகும்.? எனினும் காலப்புலி ஒரு நாள் வந்தே தீரும்.



வாங்கவேண்டிய நிலையில் உள்ளது. இந்த போட்டியும் விலை அதிகரிப்புக்கு காரணமாகின்றது. அத்துடன் மிகக் குறைந்த வட்டி வீதமும் மேலதிக காரணமாகும். ஆதனம் நிர்மாணம் செய்வதற்கான நிலத்தின் (Land) விலை அதிகரிப்பு அரசாங்கங்களின் இறுக்கமான கொள்கைகள், அரசாங்கங்களின் அதீதமான பிரயாணம் செய்வதற்காக பல பில்லியன் பணத்தை செலவழிக்க இருப்பதாக கங்கணம் கட்டியுள்ளது. இந்நிலைமை ஏற்பட்டால் ஓரளவு நிவாரணம் ஏற்படலாம். எனினும் அதிக ஆதன விலை அதிகரிப்பு கனடிய மக்களை அதிக கடனாளிகளாக மாற்றுகிறது என்ற குற்றச்சாட்டு, சமுதாய நலன் விரும்பிகளால் தொடர்ந்து முன் வைக்கப்படும் குற்றச்சாட்டாகும்.

***Real Estate Facts***

1. GTA இன் வருடாந்த மக்கள் அதிகரிப்பு 100,000
2. புதிதாக உருவாகும் அடுக்குமாடி மனைகளின் அளவு (Size) குறைக்கப்படுகின்றது.
3. முதல் தடவை ஆதனம் வாங்குபவர்களின் முதல் தெரிவு அடுக்கு மாடி மனைகளாகவே காணப்படுகின்றது.
4. டிசம்பர் 2015 இல் அடுக்குமாடி மனைகளில் சராசரிவிலை $584/SF
5. சராசரி அடுக்குமாடி மனைகளின் அளவு 775 Sq.Ft. சதுரஅடி (முன்னையது 816 சதுரஅடி. விலை அதிகரிப்பால் அளவு குறைகின்றது.)
6. 2015 இல் நேரடியாக நிர்மாண நிறுவனங்களிடம் இருந்து வாங்கிய வீடு, மனைகள் : 41,295 (இவற்றில் 52% அடுக்கு மாடி மனைகள்) 2015இல் TREB இனால் கைமாறியவை - 101.299.
7. உலகிலே மூன்றாவது விலை கூடிய நகரம் வன்கூவர் கனடா.
8. ஆதன வியாபாரத்தின் விலை அதிகரிப்பிற்கு காரணங்கள் பல. அவற்றில் இவை குறிப்படக்கூடியவை. அதிகளவு உலக பணம் கனடாவிற்குள் வருவது, புதிய குடிவரவாளர்கள், குறைந்த வட்டி வீதம், கனடிய டொலரின் சரிவு வெளிநாட்டவர்களிற்கு அனுகூலமாக உள்ளது.


"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife / GTA Realty Inc.** Brokerage.*

**5215 Finch Ave, East. #203 Toronto, On. 416 315 9397**

* independently owned and operated



Raja Mahendran, P Eng

**HOTELS FOR SALE**

Prominent Hotels Available For Sale in & around GTA. Price starting from $4 million

**Sale /Lease**

GTA Square
Middlefield & Finch
Commercial /office space
Size Upto 1000 Sq. Ft.
2nd Floor, 2- Lockers
1-Underground Parking
Available immediately

**Retail space**

Middlefield &Finch
Retail space
Size Upto 430 Sq. Ft.
Main Floor, corner unit
1-Underground Parking
Price Reduced to $159K
( from $169K)

**BAKERY FOR RENT/SALE**

Well Established Bakery in East Scarborough
**Close to:** 10 Highrise condos/Appartments, Schools, TTC,Community Centre,Library and Church.
**Included**:Bakery Equipments,Coolers & other accessories
Availabe Immediately For Rent or Sale

# சர்க்கரை வியாதியை குணமாக்கலாம்

## பாகம் - 04

சர்க்கரை வியாதியை குணமாக்கலாம் (பாகம் 3) ஐ படித்த பின்னர் இந்தப் பதிவைப் படிக்கவும். என்றால்தான் தொடர்பு விட்டுப் போகாமல் புரியும்.

சென்ற பதிவில் நல்ல சர்க்கரை, கெட்ட சர்க்கரை என்பது பற்றிப் பார்த்தோம். அது எப்படி நம் உடலில் நடைபெறுகிறது என்பதையும் அதை எப்படி தடுக்கலாம் என்பதையும் இப்போது விபரமாக காணலாம். முதன் முதலில் நாம் சிறு வயதாக இருக்கும்போது நம் உடல் நல்ல ஒரு கருவியாக இருக்கிறது. அதில் இடும் எதையும் எந்த சூழ்நிலையிலும் நல்ல தரமான சர்க்கரையை உற்பத்தி செய்யும் வல்லமை உள்ளதாக இருக்கிறது. அது பின்னாளில் நம்மால் தான் கெடுக்கப்படுகிறது. எப்படி என்பதை ஓர் உதாரணத்துடன் பார்ப்போம்.

அடுப்பு ஒன்று இருக்கிறது. அதில் விறகிட்டு எரிக்க ஆரம்பிக்கும்போது முதலில் அதற்கு சிறு மென்மையான பொருட்கள் நெருப்பை ஆரம்பிக்க தேவைப்படுகிறது (தாள்கள், மரப் பட்டைகள், சிறு குச்சிகள்), பிறகு சற்று அதிக பருமனான குச்சிகள் தேவை. அதன் பின்தான் விறகுக் கட்டைகளை எரிக்கும் வல்லமை உள்ளதாகிறது நெருப்பு. இதிலேயே அதிக விறகுகளைத் திணித்தால் நெருப்பு அணைந்து புகைக்கிறது. பிறகு நெருப்பு அணைந்தும் விடுகிறது.

இப்படி அதிக காற்றும் (ஆக்ஸிஜன்) இல்லாமல், அதிக எரிபொருளும் இல்லாமல் மிதமான சரியான எரிப்பு எரிப்பதை ஆங்கிலத்தில் Stoichiometric Firing என்பார்கள். இப்படி எரிக்கப்படும் போதுதான் சரியான காற்று இருந்தால், கரியோ அல்லது எவ்விதமான எரிபொருளோ முழுவதுமாக எரிந்து கரியமில வாயுவாக (கார்பன் டை ஆக்சைடாக {CARBON DI OXIDE ($CO_2$) } மாறும்.

$C + O_2 \rightarrow CO_2$ இப்படி இல்லாமல் எரிக்கப்படும்போது அதிக காற்று உள்ளிருக்கும் வெப்பம் காற்றுடன் எடுத்துச் செல்லப்பட்டு அடுப்பு குளிர்ந்துவிடும். குறைவான எரிபொருள் இருந்தாலும் இதேநிலை தான். அதிக எரிபொருள் இருந்தாலும், குறைவான காற்று இருந்தாலும், கரியோ அல்லது எவ்விதமான எரிபொருளோ முழுவதுமாக எரிந்து கரியமில வாயுவாக (கார்பன் டை ஆக்சைடாக {CARBON DI OXIDE ($CO_2$)} மாறாமல், ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் பாதி மட்டுமே எரிந்து கார்பன் மோனாக்ஸைடாக (CARBON MONOXIDE {CO}) மாறுகிறது.

$C + O \rightarrow CO$ இந்த கார்பன் மோனாக்ஸைடு மிக கடும் விஷத் தன்மை கொண்டது. காரை நிறுத்தி வைத்துக் கொண்டு A/C போட்டுக் கொண்டு தூங்கியவர்கள் இறப்பது இந்த கார்பன் மோனாக்ஸைடினால் தான். இது போன்ற தொரு விஷமித்த நிலை வயிற்றில் ஏற்படுவதனால் தான் சர்க்கரை நோய் உருவாகிறது.

நம் நாட்டில் சாப்பாடு கிடைக்காமல் பட்டினியால் உயிர் விடுபவர்களை விட, அதிகம் சாப்பிட்டதனால் அதிக கொலஸ்ரால் + அதிக சர்க்கரை + அதிக உப்பு + அதிக எடை என்று அதிகரிப்பதனால் உயிர் விடுபவர்கள் அதிகம் பேர். மூன்று வேளையும் தவறாமல் வயிற்றில் கொட்டுவதை முதலில் நாம் நிறுத்த வேண்டும். மேலே தொடரும் முன் உணவு உண்ணுவதைப் பற்றி திரு வள்ளுவர் சொல்லியிருப்பதைப் பாருங்கள்.

திருவள்ளுவர் மருந்து என்ற அதிகாரத்தில் கூறியிருக்கும் பத்துக் குறளும் மருந்தைப் பற்றியே இருக்காது. மருந்தைப் பற்றியே சொல்லாமல் எதற்கு மருந்து என்ற தலைப்பை திருவள்ளுவர் வைத்தார். அவர் மருந்து அதிகாரத்தில் கூறியுள்ளபடி நடந்தால் மருந்து என்பதே தேவை யில்லை என்பதால் அப்படி வைத்துள்ளார்.

திருவள்ளுவர் காட்டும் மருந்து
குறள் 1 - மிகினுங் குறையினும் நோய் செய்யு நூலோர், வளிமுதலா வெண்ணிய மூன்று.
மருத்துவ நூலோர் எண்ணி ஏற்படுத்திய (1) வளியாகிய காற்று (வாதம்) (2) வன்னி என்ற நெருப்பு (பித்தம்) (3) நீர் (சிலேற்பனம்) ஆகிய மூன்றும் கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும். இது உணவின் மூலமோ அல்லது பழக்க வழக்கத்தினாலோ அல்லது சுற்றுப்புற சூழலினாலோ பாதிக்கப்பட்டால் நோய் உண்டாகும்.

குறள் 2 - மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய, தற்றது போற்றி யுணின்.
உடலுக்கு பொருந்தும் உணவு எது என்றும், பொருந்தாத உணவு எது என்றும் போற்றி உண்ணக் கூடியவருக்கு மருந்து என ஏதும் தேவையில்லை.

குறள் 3 - அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு, பெற்றா னெடிதுய்க்கு மாறு.
நமக்கு எவ்வளவு உணவு தேவை. அதை நம்மால் சீரணிக்க முடியுமா? நமக்கு அது தேவையா? என்று உணர்ந்து ருசிக்குச் சாப்பிடாமல் பசிக்குச் சாப்பிடுங்கள். அதுவே இந்த உடம்பு நெடு நாள் உயிர் வாழும் வழி. அதாவது தற்போதுள்ள நம் நாட்டு சூழ்நிலையில் சாப்பிட ஏதும் கிடைக்காமல் சாப்பிடாமல் உயிர் விடுபவர்களைவிட, அதிக உணவு சாப்பிட்டு அதனால் உயிர் விடுபவர்களே அதிகம். (கொலஸ்ட்ரால், சர்க்கரை இவை எல்லாம்




அதிகம் சாப்பிடுவதால் வருபவை)

குறள் 4 - அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல, துய்க்க துவரப் பசித்து.
முன் சாப்பிட்டது வயிற்றில் இல்லாமல் காலியாகி விட்டதை அறிந்து, பின் மிக்க பசியெடுத்த பின் உண்ணும் போது உடலுக்கு வாத, பித்த, சிலேற்பனம் முதலான முக்குற்றங்களை உண்டாக்காத மாறுபாடில்லாத உணவுகளை உண்டால் நோய் வராது. மருந்து தேவையில்லை.

குறள் 5 - மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி, னூறுபா டில்லை யுயிர்க்கு.
மேலே சொன்ன(வளி) வாதமாகிய காற்று முதலாகியவற்றை மாறுபாடு செய்யாத உணவுகளை மட்டும் உண்டு, மாறுபாடு செய்பவைகளை மறுத்துண்டால் ஊறுபாடு என்பது உயிருக்கு வரவே வராது. இப்படி உண்ணக் கூடியவருக்கு மருந்து என ஏதும் தேவையில்லை.

குறள் 6 -இழிவறிந் துண்பான்க ணின்பம்போ நிற்கும், கழிபே ரிரையான்க ணோய்.
மிகக் குறைவாக உண்பானிடத்தில் இன்பமும் அதிகமாக உண்பவனிடத்தில் துன்பத்தை உண்டாக்கும் நோயும் நிலை பெறும். அதாவது ஒரு பொழுதுண்பவன் யோகி. இரு பொழுதுண்பவன் போகி. மூன்று பொழுதுண்பவன் ரோகி (பெரும் வியாதியஸ்தன்). நான்கு பொழுதுண்பவன் துரோகி (தன்னுடலுக்கு துரோகம் செய்பவன்).

குறள் 7 - தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி, னோயள வின்றிப் படும்.
வயிற்றில் இருக்கும் ஜடராக்கினியாக இருக்கும் உணவைச் செரிக்கும் தீக்குப் (நெருப்பு) பங்கமில்லாமல், அதாவது அணைந்து போகுமளவிற்கு தெரியாமல் பெரிதும் உண்பவனுக்கு நோய் அளவின்றி உண்டாகும்.

குறள் 8 - நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும், வாய்நாடி வாய்ப்பச் செயல்.
வைத்தியர் தான் அறிந்த எல்லா வைத்திய சாத்திரங்களையும், கால பேதவியல்புகளையும் அதனால் உடலில் ஏற்படும் மாறுபாடுகளையும் வைத்து நோயின் அறிகுறிகளை அணுகி, அதன் முதலான ஆரம்பம் எதில் துவங்கியது என்று அதன் வேரோடு கிள்ளி எறியும் வழியைத் தேடி அதன் வழியே சென்று நோயைப் போக்க வேண்டும்.

குறள் 9 - உற்றா னளவும் பிணியளவுங் காலமுங், கற்றான் கருதிச் செயல்.
வைத்தியர் தான் அறிந்த எல்லா வைத்திய சாத்திரங்களையும், கால பேதவியல்பு களையும் அதனால் உடலில் ஏற்படும் மாறு பாடுகளையும் கருத்தில் கொண்டு பிணி யுற்றவனுடைய பிணியளவும், பிணியுற்ற காலத்தையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

குறள் 10 - உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென், றப்பானாற் கூற்றே மருந்து.
உற்றவனான (வைத்தியனை இங்கே நெருங்கியவன் என்ற பொருள்பட அழைக்கிறார் வள்ளுவர்) மருத்துவனிடம் வரும் நோயாளன் நான்கு விடயங்களைக் கொண்டவனாக இருக்க வேண்டும். அவையாவன பொருளுடைமை, மருத்துவன் கூறும் வழி நிற்றல், நோய் நிலையை உணர்ந்து உணர்த்தும் தன்மை, மருந்துத் துன்பம் பொறுத்தல் ஆகிய நான்கு குணங்கள் ஆகும்.

மேற்கண்ட இணைப்பில் கூறியிருப்பதை சாப்பிடுவதில் கடைப்பிடித்தால் உங்களுக்கு சர்க்கரை நோய் வராது. இருந்தாலும் அது குணமாகும்.
மேலே சொன்னவாறு அடுப்பில் நெருப்பு எரிப்பதைப் போலத்தான் நம் வயிற்றில் உள்ள ஜடராக்கினியும் செயல்படுகிறது (ஹைட்ரோ குளோரிக் அமிலம் {HYDROCHLORIC ACID (H CL) }. உணவைக் கரைக்கும் அக்கினியான ஜடராக்கினியும் சாதாரண நெருப்பு எரியும் விதத்தை ஒத்ததே என்பதை முதலில் இங்கே சொல்லிக் கொள்ளுகிறேன்.

நாம் பிறந்தவுடன் ஜடராக்கினி கிளர்ந்து எழுந்து பசி என்ற உணர்வைக் கொடுக்கிறது. குழந்தையாக இருக்கும் போது பசியால் அழுகிறோம். தாயும் நம் பசி உணர்ந்து பால் கொடுக்கிறார். இது நெருப்புக்கு மென்மையான காகிதம் போன்று நம் ஜடராக்கினியை நன்கு தொடங்கி எரிய உதவுகிறது. பின்பு சிறுவயதாக இருக்கும்போது சிறு, சிறு உணவுகளை மசித்து கொடுக்கிறோம். அவை சிறு குச்சிகள் போல ஜடராக்கினி வளர உதவுகிறது.

இவை எல்லாம் நம்மிடம் முறையாக நல்ல சர்க்கரை உற்பத்தியாக உதவியாக இருந்தது. நல்ல சர்க்கரை என்றால் என்ன? உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை நல்ல சர்க்கரையாக இருந்தால் நம் உடலில்



**Premi. S**
Natural Medicine Practitioner ©
647.278.3100

தொடர்ச்சி 13ஆம் பக்கம்...

**LAW OFFICE**
**STEFANO FORTINI**
B.A., LL.B., Barrister & Solicitor
*3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4*
*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

# சர்க்கரை...

உள்ள கணையம் அதனை சோதனையிட்டு ஒரு இன்சுலினை கையில் கொடுத்து அனுப்புகிறது. இதுவே நல்ல சர்க்கரை. இன்சுலின் கையில் இல்லாத சர்க்கரை கெட்ட சர்க்கரை. இதனையே சிறுநீரகம் நம் உடலை விட்டு சிறுநீர் மூலமாக வெளியேற்றுகிறது. இது கழிவே தவிர நல்ல சர்க்கரை அல்ல. அது சத்துமல்ல.

நம்முடலில் உள்ள எல்லா செல் அணுக்களும், சோடியம், பொட்டாசியம் போன்ற எல்லா தாதுக்களையும் தாமே எடுத்துக் கொள்ளும். ஆனால் சர்க்கரையை மட்டும் இன்சுலினுடன் இருந்தால் மட்டுமே நல்ல சர்க்கரை என்று எடுத்துக் கொண்டு தனக்குள் எடுத்துக் கொள்ளும். எடுத்துக் காட்டாக நம்மிடம் சிறு குழந்தையாய் இருக்கும் இந்த வேளையில் வாயில் உமிழ் நீர் நன்றாக சுரக்கப்பட்டு, இரை நன்கு அரைக்கப்பட்டு, உள்ளே அனுப்பப்பட்டு இரைப்பையும் ஜீரண உறுப்புக்களும் சேர்ந்து 600 நல்ல சர்க்கரை அணுக்களை உற்பத்தி செய்கின்றன என்று வைத்துக் கொண்டால் அப்போதைய நம் உடலுக்கு தேவையான சர்க்கரை 50 சர்க்கரை அணுக்கள் என்று கொண்டால் அவை நம் செல்களின் உபயோகத்திற்கு உபயோகம் ஆனது போக மீதம் உற்பத்தி ஆன 550 நல்ல சர்க்கரையும் செறிவூட்டப்பட்ட சர்க்கரையாக (கிளைக்கோஜனாக) மாற்றப் பட்டு பிற்கால தேவைக்காக சேமித்து வைக்கப்படுகிறது.

அடுத்து அம்மா பிள்ளைக்கு ஊட்ட அல்லது திணிக்க முற்படும்போது அந்தக் குழந்தை உணவை உமிழ் நீருடன் கலந்து மென்று தின்னாமல் விழுங்க முற்படுகிறது, விக்கும் போது தண்ணீரை ஊற்றி உள்ளே திணித்து அனுப்பி விடுவோம். இங்கேதான் சர்க்கரை நோய் உட்பட அனைத்து வியாதிகளுக்கும் மூல காரணமான பிரச்சினை ஆரம்பிக்கிறது. நமது எச்சிலில் சுண்ணாம்புச் சத்து உள்ளது. அது இரையை வாயில் மெல்லும் போது, சுவை மறையும் நேரம், அந்தச் சுவையை நாக்கு சுவை வாரியாக பிரித்து அந்தந்த சுவைக்குரிய ராஜ உறுப்புகளுக்கு அனுப்புகிறது. அந்த உறுப்புக்களும் உள்ளே வரும் உணவின் தன்மையை பொறுத்து சீரண நீர்களை சுரந்து உணவை இரைப்பையில் வரவேற்க தயாராக இருக்கின்றன. எடுத்துக் காட்டாக கொழுப்புப் பொருட்களை நாம் சாப்பிடும்போது பித்தப் பையில் இருந்து பித்தம் சுரந்து கொழுப்பை சீரணிக்க தயாராக வயிற்றை தயார் நிலையில் வைத்திருக்கிறது.

அவ்வாறன்றி நாம் அரை குறையாக மென்று விழுங்கும்போது, எச்சில் சரியாக சுரக்காமல், உணவு இரைப் பாதையில் வழுக்கிச் செல்லாமல் ஆங்காங்கே தேங்குவதால் நமக்கு விக்கி, நெஞ்சடைப்பு வருவது போன்ற உணர்வு ஏற்படுகிறது. உடனே எச்சிலுக்குப் பதிலாக தண்ணீரை குடித்து உணவை உள்ளே தள்ளுகிறோம். இதனால் என்ன? உணவு உள்ளே போய் விழுந்தால் போதுமல்லவா? என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

அதை அடுத்த பதிவில் காணலாம்.

# அல்லலுறும் கிழக்கு மாகாண மக்களுக்கு அன்புடன் ஆதரவளிக்க முன்வாருங்கள்!

## கனடா வந்துள்ள திரு. வியாழசுந்தரம் எம்.பி. வேண்டுகோள்

"கிழக்கு மாகாண மக்கள் இன்று வறுமை, பட்டினி, நோய், வேலை வாய்ப்பின்மை, கல்வி கற்க செல்லமுடியாத அவல நிலை, சமூகச் சீரழிவு போன்ற பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகித் தவித்துக் கொண்டிருக்கின்றனர். திருமணமான பெண்களின் கணவன்மார் கடத்தப்பட்டும், காணாமல் போயும் உள்ளனர். அதனால் பெண்கள் மறு மணம் செய்ய முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கணவனை இழந்த பெண்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தி ஐயாயிரமாக அதிகரித்துள்ளது. கொடிய வறுமையின் காரணமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆண்களும், கணவனை இழந்த பெண்களும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு கூலி வேலை செய்வதற்காகச் சென்றார்கள். ஆனால் அவர்கள் வருத்தத்துக்கு உள்ளாகி நாடு திரும்பி உள்ளார்கள். அவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண் டிருந்த நான் அரசியலில் ஈடுபட முடிவு செய்தேன். தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு அதிக வாக்குகளுடன் வெற்றி ஈட்டினேன். ஆனால் எம்.பி. யாக வந்தும் தேர்தல் வாக்குறுதிகளின்படி எமது மக்களுக்கு உதவி செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளேன். அதனால் வெளிநாட்டில் வாழுகின்ற நீங்கள் தான் பெருமனதுடன் அவர்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டுமென பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்".



கனடா வாழ் மட்டக்களப்பு மக்கள் தமது மக்களுக்கு எவ்வகையில் உதவி செய்யலாம் என திரு.வியாழசுந்தரம் எம்.பி. யுடன் கலந்தாலோசிக்கும் வண்ணம் 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை பிராம்டனில் உள்ள "பாடும் மீன்" உணவுச் சாலையில் சந்திப்பு நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தனர். தமது உடன்பிறப்புக் களுக்கு உதவி

தொடர்ச்சி 15ஆம் பக்கம்


## மூட்டு வலி விரைவில் குணமாக...
## - சித்த வர்ம எண்ணெய் சிகிச்சை -
## பிரகதி சித்தா மூட்டு வலி மூலிகைத் தைலம்

எப்படி தயாராகிறது எனப்பார்ப்போம்! இந்த மூட்டு வலித் தைலத்தில் அத்திப்பால், சிற்றாமுட்டி, விராலி, மயிலாடுங் குறும்பை, கண்பலா மரப்பட்டை, பேராமுட்டி, மூக்கிரட்டை வேர், கோரைக் கிழங்கு, பிரண்டை, வேலி பருத்தி, வாதநாராயணன், வாதமடக்கி, முடக்கறுத்தான், மற்றும் பல அரிய வகை மூலிகைகளைச் சேர்த்து எண்ணெயாக காய்ச்சி எடுக்கப்படுகிறது.

இந்த மூட்டு வலி தைலம், மூட்டு வலிக்காக மட்டுமல்ல,
மூட்டுக்கள் பூட்டு விட்டுப் போதல் (**DISLOCATION**), இரத்தத்தில் எலும்புகளைத் தேய்க்கும் காரணிகளால் எலும்புகளிலும், எலும்பு மூட்டுக்களிலும் ஏற்படும் தேய்மானம் (**DEGENERATIVE OSTEOARTHRITIS OF THE JOINTS**), எலும்பு முறிவு (**FRACTURE** ), மூட்டுக்களில் சவ்வு கிழிந்து போதல் (**LIGAMENT TEAR**), இரத்தக் கட்டு, கீழ் முதுகு வலி, பக்க வாதம் (**SINGLE SIDE AND DOUBLE SIDE PARALYSIS**) போன்ற பல வியாதிகளைத் தீர்க்கும்.

இதை மேற்பூச்சாகப் பூசி வர இதிலுள்ள அத்திப் பால் எலும்பை என்றும் ஒடியாத இரும்பாக்கும். எலும்பு முறிவு (**FRACTURE**), மூட்டுக்களில் சவ்வு கிழிந்து போதல் (**LIGAMENT TEAR**), மூட்டுக்களில் மசகு இல்லாமல் சடசட எனச் சத்தத்துடன் வலி வருதல், தசைப் பிடிப்பு (**MUSCLE CRAM**), நரம்பு வலி(**PAIN IN MOTOR VEINS**), நரம்பு இசிவு (**INFLAMMATION IN MOTOR VEINS**) , நரம்புகள் சுருண்டு கொள்ளுதல், சுழுக்கு மற்றும் வாதக் கோளாறுகள்(**LOCO MOTOR DISORDERS** ), கழுத்தெலும்புத் தேய்வு (**CERVICAL SPONDYLOSIS** ), முதுகுத் தண்டு தட்டுக்கள் நழுவுதல் ,போன்ற பல வியாதிகளை குணமாக்கும். மேலும் **SCI-ATICA** என்னும் பேராசன நரம்பு அழற்சி, ஒரு பக்க பக்க வாதம், இரு பக்க வாதம், குறை பக்க வாதம், ஆண்குறி வாதம் போன்றவற்றில் எந்தப் பாகம் செயல்படவில்லையோ அந்தப் பாகத்தை செயல்பட வைக்கும். ஆர்த்ரைடிஸ் எனப்படும் எலும்பு தேய்மான நோய்களால் உண்டாகும் கழுத்து வலி கழுத்து எலும்பு தேய்வால்,கழுத்தில் காலர் போட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்ற மற்றைய மாற்று மருத்துவ தத்துவத்திலிருந்து விடுதலை கிடைக்கும்., மற்றும் இடுப்பு வலி, அதனால் உண்டாகும் பல்வேறு உடல் மற்றும் மன ரீதியான இறுக்கங்கள், போன்ற அனைத்து வகை வேதனைகளையும் இந்த மூட்டு வலி தைலத்தை தடவி, சில மணி நேரம் கழித்து வெந்நீரில் கழுவி, கொல்லிமலை முடவாட்டுக் கால் கிழங்கு Soup சூடாக அருந்தி வர, மூட்டுவலி, மூட்டுத் தேய்மானம், இடுப்பு வலி, முதுகுத் தண்டு வலி,கழுத்து வலி இவைகளுக்கு சிறந்த நிவாரணம் அளிக்கும்.

Pragati Sidda Herbal Clinic - 647 278 3100
3850 Finch Ave. East. Scarborough, ON. M1T 3TS

# காத்திருக்கும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

நோக்கிச் சென்றால் கட்சிக்காரர்கள் வெளியேறிவிட வாய்ப்புண்டு' எனக் கருதிய விஜயகாந்த், 2011 சட்ட சபைத் தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி சேர்ந்தார். 41 தொகுதிகளில் போட்டியிட்டு 29 தொகுதிகளில் தேமுதிக வெற்றி பெற்றது. திமுகவைப் பின்னுக்குத் தள்ளி விஜயகாந்த் எதிர்க்கட்சித் தலைவரானார்.

ஆனால், அடுத்தடுத்து நடந்த மோதல் களால், அதிமுக - தேமுதிக கூட்டணி சில மாதங்களில் உடைந்தது. 2014 நாடாளுமன்றத் தேர்தலில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்ந்து தேமுதிக 14 இடங்களில் போட்டியிட்டது. இக்கூட்டணியில் இடம் பெற்றிருந்த பாஜக, பாமக தலா ஒரு தொகுதியில் வெற்றி பெற்றது. தேமுதிக போட்டியிட்ட அனைத்து இடங்களில் தோல்வியடைந்தது. தேமுதிகவின் வாக்கு வங்கி ஐந்து சதவிகிதமாகக் குறைந்தது.

ஆனாலும், இன்றும் தமிழகத்தின் மூன்றாவது பெரிய கட்சி தேமுதிகதான். இதுதான் கோயம்பேடு கல்யாண மண்டபத்தை நோக்கி அனைத்துக் கட்சியினரும் படையெடுக்கக் காரணம்.

## காத்திருக்கும் மக்கள் நலக் கூட்டணி

மதிமுக, விடுதலைச் சிறுத்தைகள், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து உருவாகியுள்ள மக்கள் நலக் கூட்டணி தலைவர்கள், அதிமுக – திமுகவுக்கு மாற்றாக மூன்றாவது அணியை அமைக்கும் முயற்சியில் மும்முரமாக உள்ளனர்.

கருணாநிதிக்குப் பிறகு வை. கோபால்சாமி தான் திமுக தலைவர் என்றொரு காலம் இருந்தது. இந்நிலையில், அவர் மீது கொலைப்பழி சுமத்தப்பட்டு கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டார். 'கொலைப்பழி ஒரு காரணம்தான். எதிர்காலத்தில் தனது மகன் ஸ்டாலினை திமுக தலைவ ராக்க வை. கோபால்சாமி தடையாக இருப்பார் என கருணாநிதி நயவஞ்சகமாக வைகோவை வெளியேற்றி விட்டார்' என்று அப்போது திமுகவினரே விமர்சித்தனர். 10க்கும் மேற்பட்ட திமுக மாவட்டச் செயலாளர்கள் வைகோவுடன் வர ம.தி.மு.க. உதயமானது. தமிழகம் முழுக்கச் சென்று, 'மகனை முன்னிறுத்த என் மீது கொலைப்பழி சுமத்துகிறார்' என்று கர்ஜித்தார் வைகோ. தொடர்ந்து அ.தி.மு.க.வை எதிர்த்தும் கன்னியாகுமரி தொடங்கிச் சென்னை வரை நடை பயணம் மேற்கொண்டார். அதிமுக, திமுக இரண்டுக்கும் மாற்றான சக்தியாக பலராலும் கணிக்கப்பட்டார். ஆனால், அதன்பின்னர் தி.மு.க., அதிமுக இரண்டு கட்சிகளுடனும் மாறிமாறி கூட்டணி வைத்துக்கொண்டார். இதுவே தனது பின்னடைவுக்குக் காரணம் என இப்போது உணரும் வைகோ, தான் ஆரம்பித்த புள்ளிக்கே திரும்பி வந்து நிற்கிறார். திமுக, அதிமுக இரண்டு கட்சிகளுக்கும் மாற்றான சக்தியாகத் தன்னை நிலை நிறுத்த இதுவே சரியான தருணம் என நினைக்கிறார்.

மேலும், தி.மு.கவின் முதல்வர் வேட்பாளர் என அறிவிக்கப்படவில்லை என்றாலும், ஸ்டாலின்தான் முதல்வர் வேட்பாளர் என்பதாகவே கிட்டத்தட்ட திமுக நடவடிக்கைகள் உள்ளன. எனவே, தனது அரசியல் எதிர்காலத்துக்காக ஸ்டாலின் முதல்வராவதைத் தடுப்பதும் வைகோவுக்கு முக்கியமாக இருக்கிறது. 'ஸ்டாலினை வீழ்த்தவே வியூகம் வகுத்து மக்கள் நலக் கூட்டணியை வைகோ உருவாக்கினார். ஒருவேளை கருணாநிதிதான் அடுத்த முதல்வர் என்ற நிலை இருந்திருந்தால் மக்கள் கூட்டணியை வைகோ அமைத்திருக்கச் சாத்தியமில்லை. ஆட்சியைக் கைப்பற்றுவது அல்ல தி.மு.க. ஆட்சியில் அமர்ந்துவிடக் கூடாது என்பது தான் வைகோ நோக்கம்' என்று சில அரசி யல் நோக்கர்கள் சொல்கிறார்கள்.

வைகோவுடன் இருக்கும் இடதுசாரிகள், திருமாவள வனுக்கும்கூட முதல் நோக்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது அல்ல. அதிமுக, திமுகவுடன் சேராமல்



- சிவதாணு -

தனித்து நிற்பதன் மூலம்தான், திமுக, அதிமுகவுக்கு மாற்றாகத் தங்கள் கட்சியை வலுப்படுத்த முடியும் என இவர்கள் நினைக்கிறார்கள். தங்களுடன் தே.மு.தி.க, த.மா.க. கட்சிகள் இணைந்தால் குறைந்த பட்சம் 15% வாக்குகளை உறுதி செய்ய முடியும். இதனுடன் அ.தி.மு.க., திமுக இரு கட்சிகளுக்கும் இயல்பாக இருக்கும் எதிர்ப்பு வாக்குகளும் பலமான அணியான தங்களுக்குக் கிடைக்கும் என்பதால், இரண்டாவது இடத்தைப் பெற முடியும் என்பது இவர்கள் கணக்கு.

தமாகா தலைவர் ஜி.கே. வாசனும், அதிமுக - திமுக இரண்டு கட்சிகளையும் விமர்சித்து வருகிறார். மூன்றாவது பெரிய கட்சியான தேமுதிக எதில் சேர்கிறதோ அதில் சேர்வதுதான் அவரது கூட்டணி முடிவு. இதனால், தேமுதிகவைக் கூட்டணிக்குள் கொண்டுவந்துவிட்டால், அதனாலேயே ஜிகே வாசன் போன்ற மற்ற சிறு கட்சிகளையும் ஈர்க்க முடியும் என மக்கள் நலக் கூட்டணியினர் கணிக்கிறார்கள்.

அதேநேரம், தேமுதிக தங்கள் பக்கம் வராமல் திமுக பக்கம் போய்விட்டால், அதனாலேயே இருக்கும் கூட்டணி சிதறிவிடவும் வாய்ப்புண்டு என்பதும் இவர்களுக்குத் தெரியும். எனவே, இருக்கும் கட்சிகளைத் தக்கவைத்துக் கொள்ளவும் புதிய கட்சிகளை ஈர்க்கவும், மக்கள் நலக் கூட்டணியினருக்குத் தேமுதிக தேவைப்படுகிறது.

எனவேதான் வைகோ, திருமாவளவன், ஜி.ராமகிருஷ்ணன், இரா.முத்தரசன் நால்வரும் முதலில் தனித்தனியாகவும் பிறகு சேர்ந்தும் கோயம்பேடு சென்று, கூட்டணி பற்றி முடிவெடுக்கும்படி விஜயகாந்துக்கு நெருக்குதல் கொடுத்தார்கள். "திமுக, அதிமுகவிற்கு மாற்றாகத் தேமுதிகவை மக்கள் பார்க்கிறார்கள். ஏற்கனவே, அதிமுகவிடம் சேர்ந்ததால்தான் உங்களது வாக்குச் சதவீதம் குறைந்தது. இப்போது திமுகவிடம் சேர்ந்து உங்கள் வாக்கு வங்கியை மேலும் குறைத்துக் கொள்ளாதீர்கள். நாங்கள் இவ்வளவு காலமும் செய்துவந்த அதே தவறை நீங்களும் செய்யாதீர்கள். உங்களை முதல்வர் வேட்பாளராக நாங்கள் அறிவிக்கிறோம்... எங்கள் கூட்டணிக்கு வந்துவிடுங்கள். இன்று இல்லையென்றாலும் உங்கள் எதிர்கால அரசியல் வாழ்க்கை பிரகாசமாக இருக்கும்" என்பது இவர்கள் வாதம்.

"மாற்று அணி தேவை என்பது மக்கள் விருப்பம். நீங்கள் வாருங்கள். மக்கள் நம்மை நிச்சயம் ஆதரிப்பார்கள்" என நம்பிக்கையும் கொடுத்துள்ளார்கள். ஆனால், சுமார் 70 நிமிடங்கள் நடைபெற்ற தலைவர்கள் சந்திப்பில், உறுதியான, நம்பிக்கையான வார்த்தைகள் எதையும் விஜய காந்த் தெரிவிக்கவில்லையாம். அவர் வருவாரா மாட்டாரா எனத் தெரியாமல் காத்திருக்கிறது நால்வர் அணி.

## திமுக: ஒரே கல்லில் இரண்டு மாங்காய்


தேர்தல் நெருங்கி வரும் சூழ்நிலையிலும் ஆளுங்கட்சி மீதான எதிர்ப்பலைகள் பெரிதாக உருவாகாததாலும், கூட்டணி அழைப்புகளை எந்தக் கட்சியும் பொருட் படுத்தாததாலும் துவண்டிருந்த திமுகவுக்கு, கன மழை ஒரு வாய்ப்பை வழங்கியது. செயல்படாத நிர்வாகம் என்ற அரசு மீதான தங்கள் விமர்சனத்தை மழை வெளிச்ச மிட்டுக் காட்டிவிட்டதில் உற்சாகமாகி விட்டார்கள், திமுகவினர். கூடுதலாக 'ஸ்டிக்கர்' விவகாரமும் சேர்ந்து கொண்டதில், தனித்து நின்றே தங்களால் வெற்றிபெற முடியும் என்ற அதீத நம்பிக்கைக்கே வந்துவிட்டார்கள். இப்போது, பழ. கருப்பையா வேறு பாயிண்டுகளை எடுத்துக்கொடுத்திருக்கிறார்.

தற்போது திமுகக் கூட்டணியில் புதிய தமிழகம், முஸ்லீம் லீக் ஆகிய இரண்டு கட்சிகளும் உள்ளன. ஆனாலும், தேமுதிக மீதுதான் திமுகவுக்கு கண். தேமுதிக தங்கள் அணிக்கு வந்தால் வெற்றி உறுதி யாகிவிடும் என்பது திமுகத் தலைவர் கணக்கு.

தேமுதிக, மக்கள் நலக் கூட்டணிக்கோ பாஜகவுடனோ சென்று பலமுனை போட்டி ஏற்பட்டால், ஆளுங்கட்சி எதிர்ப்பு ஓட்டுகள் சிதறி தங்களுக்கு இழப்பாகிவிடும் என்ப தானாலும், தேமுதிகவைக் கூட்டணிக்குள் கொண்டுவரும் வேலையில் மும்முரமாக இருக்கிறார் ஸ்டாலின். தே.மு.தி.க. வந்தால், அதைக்காட்டியே, மக்கள் நலக் கூட்டணியில் ஊசலாட்டத்தில் இருக்கும் விடுதலைச் சிறுத்தைகளை அழைத்து வருவதும் சுலபமாகிவிடும். இதன்மூலம் வைகோவின் அரசியல் எதிர்காலத்தையும் கேள்விக்குள்ளாக்கிவிடலாம் என்பது ஸ்டாலின் கணிப்பு. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.

இவை நிகழ்ந்தால், நிச்சயம் 2016இல் ஆட்சி அதிகாரம் நமக்கே என்ற தெம்புடன் இருக்கிறார்கள் திமுகவினர். எனவே, அவர்களும் விஜயகாந்தை நோக்கி படை யெடுக்கிறார்கள். மக்கள் நலக் கூட்டணித் தலைவர்கள் – விஜயகாந்த் சந்திப்பு நிகழ்ந்த ஒரு மணி நேரத்தில், விஜயகாந்தை கூட்டணிக்கு அழைக்கிறார் கருணாநிதி.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# தமிழ் மரபுத் திங்களுக்கான சின்னமும், கொடியும் உருவாக்கப்பட வேண்டும்!

கனடாவில் தமிழ் மரபுத் திங்கள் தினத்தை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு அதற்கான சின்னமும், கொடியும் உருவாக்கப்பட வேண்டுமென ஆலோசனைக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



தமிழ் மரபுத் திங்களை கனடாவில் வருடா வருடம் விமரிசையாகக் கொண்டாடுவது பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் கல்விச் சபை உறுப்பினரான திரு. நீதன் சான் தலைமையில் நடைபெற்றது. ஸ்காபுறோ விலுள்ள "பிரின்செஸ் பாங்குவெற்" மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தமிழ் மரபுத் திங்களை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஆலோசனைகளை முன்வைக்குமாறு திரு. நீதன் சான் கேட்டுக் கொண்டார். கொண்டாடுவதில் அக்கறை கொண்ட ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் பலர் கலந்து கொண்டு தமது ஆலோசனை களை தெரிவித்தனர். அவர்களுள் ஒருவரான காலாநிதி வசந்தகுமார், "தமிழ் மரபு தினத்துக்கான சின்னம் ஒன்று உருவாக்கப் பட்டு அவை பொது இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். அத்துடன் அத்தினத்தை முதலில் கனடா மத்திய அரசினால் அங்கீகரிக்க செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு



- வீரகேசரி மூர்த்தி -

அங்கீகரிக்க செய்து விட்டால் நாம் ஒன்ராறியோ மாகாணத்தில் மாத்திரமன்றி தமிழ் மக்கள் அதிகமாக வாழும் மொன்றியல், வன்கூவர், ஹலிபெக்ஸ் ஆகிய இடங்களிலும் தமிழ் மரபுத் திங்கள் தினத்தை கொண்டாட முடியும். அத்துடன் ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ் மரபுத் திங்களை கொண்டாடுவதற்கும் அங்குள்ள தமிழ் அமைப்புக்களின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்குள்ள தமிழ் அமைப்புக்கள் யாவும் ஒன்றிணைந்து கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார்.

அவரது கருத்துக்கள் சிறப்பானவை என்பதனை ஏற்றுக்கொண்ட திரு. நீதன் சான் ஒட்டாவா நாடாளுமன்றத்தில் பொங்கல் தினத்தை கொண்டாடுவது பற்றி எமது தமிழ் முதல் எம்.பி. ராதிகா சிற்சபைசன் முன்னர் தனிப்பட்ட பிரேரணை ஒன்றை கொண்டு வந்திருந்தார். தற்போதைய எம்.பி. திரு. ஹரி ஆனந்தசங்கரியும் அதனைச் செய்தார். அதேபோன்று நாமும் தமிழ் மரபுத் திங்கள் தினத்தை சட்டரீதியாக அங்கீகரிக்க செய்வதற்கான நடவடிக்கையினை மேற் கொள்வோம் எனக் கூறினார்.

தமிழ் கலாச்சார விவகாரங்களில் அதிகளவு அக்கறையும், ஈடுபாடும் கொண்டவரான முன்னாள் கல்விச் சபை உறுப்பினர் கருத்து தெரிவித்தபோது தமிழ் மரபுத் திங்கள் கொண்டாட்டம் பற்றி நாம் மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் எடுத்துக் கூறி வருகின்றோம். தமிழ் மரபுத் திங்கள் தினத்துக்குரிய ஒரு சின்னம் உருவாக்கப்பட வேண்டும் என டாக்டர் வசந்தகுமார் கூறினார். அதே போன்று அதற்கென ஒரு கொடியும் உருவாக்கப்பட வேண்டும். கடந்த வருடம் பிக்கெறிங்கில் நடைபெற்ற தமிழ் மரபுத் திங்கள் வைபவத்தின் போது ஒரு கொடி ஏற்றப்பட்டது. அது வரவேற்கத்தக்க விடயம். ஆனால் யார் அதனை செய்தார் கள்? எந்த அடிப்படையில் அக்கொடி உருவாக்கப்பட்டது என்பதனை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் அனைவரும் அதுபற்றி கலந்தாலோசித்து சகல இடங்களிலும் பாவிக்கக் கூடிய பொதுவான ஒரு சின்னத்தை கொண்ட கொடியினை உருவாக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

திரு. குமார் புனிதவேல் கருத்து தெரிவித்த போது தமிழ் மரபுத் திங்கள் விழாவினைக் கொண்டாடும்போது கணினி திரையில் (Power Point) தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுக் கலைகள், கலாசாரங்களை பிரதி-பலிக்கும் காட்சிகளை ஆங்கிலக் குறிப்பு களுடன் ஓட விடுவது நல்லதெனக் கூறினார்.

"தளிர்" சஞ்சிகை ஆசிரியர் திரு. சிவமோகன் கருத்து தெரிவித்தபோது தமிழ் மரபுத் திங்கள் கொண்டாட்டங்களில் இளம் தலைமுறையினரான மாணவர்களை அதிக-ளவில் ஈடுபடுத்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் அடுத்த தலைமுறைக்கும் அதனை எடுத்துச் செல்வார்கள் எனக் கூறினார். கவிஞர் கழகத்தலைவர் "மாவிலி மைந்தன்" திரு. சி.சண்முகராஜா கருத்து தெரிவித்த போது ஊடகத் துறையினர் தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வு பற்றிய செய்திகள், கட்டுரைகளை பிரசுரித்து அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். மற்றும் பலரும் பல்வேறு ஆலோசனைகளை தெரிவித்தனர். இறுதியில் திரு. நீதன் சான் கருத்து தெரிவித்தபோது தமிழ் மரபுத் திங்கள் விழா நிகழ்ச்சிகளில் தமிழ் இனத்தவர்களோடு சம்பந்தப்பட்ட பாரம்பரிய விளையாட்டுக்கள், விவசாயம், சோதிடம் போன்ற கலைகள், தொழில்நுட்பம், அரசியல் ஆகியவற்றினை உள்ளடக்குவது சிறப்பாக இருக்கும் எனக் கூறினார். அத்துடன் இந்நிகழ்ச்சிக்கான செலவுகளை சமாளிக்க நிதியும் திரட்ட வேண்டும். அதற்கு பொது மக்களாகிய நீங்கள் நிதியுதவி செய்தால் பேருதவியாக இருக்கும். ஐம்பது, நூறு டொலர் வீதம் நிதி திரட்டுவதற்கான குழு ஒன்றினையும் தெரிவு செய்ய விரும்பும் தாராள மனம் கொண்ட பல பிரமுகர்களும், பத்திரி கையாளர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன் வைத்தனர். வடக்கு, கிழக்கு என்ற பேதமின்றி தாராள மனதுடன் உதவி செய்ய விரும்பிய பல அன்பர்கள் கலந்து கொண்டு எம்.பி.யின் வேண்டுகோளுக் கமைய உதவி செய்யக் காத்திருப்பதாகத் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் திரு. டேவிட் பூபாலபிள்ளை, டாக்டர் சந்திரன், திருவாளர்கள் பாபு, லிங்கன், ஓய்வு பெற்ற இலங்கை மத்திய வங்கி அதிகாரி திரு. தங்கராஜா, பிராம்டனில் கிறீன் கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட்ட சமூக சேவையாளர் திருமதி. கார்த்திகா கோபிநாத் ஆகியோருட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டு தமது அபிப்பிராயங்களையும், ஆதரவினையும் வழங்கினார்கள்.

# அல்லலுறும்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி



திரு.வியாழசுந்தரம் எம்.பி. தொடர்ந்து உரையாற்றியபோது "கிழக்கு மாகாணம் திட்டமிடப்பட்டு சீரழிக்கப்பட்டு வருகின்றது. பாடசாலைகளுக்கு பஸ் போக்கு வரத்து சேவைகள் எதுவும் இல்லாததினால் ஆசிரியர்கள் பணிக்குச் செல்ல முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. மாவலி ஆறு பாடசாலைக்கு போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால் ஆசிரியைகள் சேறு சகதிகளுக்கு ஊடாக நடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்து வருகின்றது. அதனால் அவர்கள் அழுக்கடையும் சேலையை மாற்றுவதற்காக மற்றுமொரு சேலையையும் கொண்டு செல்கின்றனர். விவேகானந்த வித்தியாசாலையின் விடுதி போதிய வசதிகள் எதுவுமின்றி அகதி முகாம் போன்று காட்சி அளிக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவு திறமை சித்தியுடைய மாணவர்களை உருவாக்கி வந்த வின்சன் கல்லூரி இன்று மிக மோசமான நிலையில் உள்ளது. இதற்கு கனடாவிலுள்ள மக்களிடம் இருந்து உதவி பெறுவது பற்றி எனது நண்பரும், "தளிர்" சஞ்சிகை ஆசிரியருமான திரு. சிவமோகனுடன் கலந்துரையாடினேன். அவர் அதற்கு ஆவன செய்வதாகக் கூறியுள்ளார். பல்கலைக்கழகம் செல்வதற்குத் தெரிவாகியும் போக்கு வரத்து செலவுக்கு பணவசதி இல்லாத காரணத்தினால் பல்கலைக்கழகத்துக்கு செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளான பதினைந்து மாணவர்களுக்கு தாம் ஏற்கனவே 15 சைக்கிள் வாங்கிக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதற்கு கிழக்கு மாகாண மக்கள் மாத்திரமல்ல வடபகுதி மக்களும் உதவி செய்துள்ளதாகவும் கூறினார். அதேபோன்று விபுலானந்த கழகத்தினர் 35 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வாங்க உதவி செய்ததாகவும், கதிரொளி இல்லத்துக்கு கறவை மாடுகள் வாங்க உதவி செய்துள்ளதாகவும் அறிந்தேன். அதுமாத்திரமன்றி கனடாவில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் அனைவரும் பாரபட்சமின்றி கிழக்கு மாகாண மக்களின் துன்பங்களை நீக்கும் வகையில் பல்வேறு வகையான உதவித் திட்டங்களை செயற்படுத்தி வருவதற்கு எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.

**- வீரகேசரி மூர்த்தி -**


TUTORING

KEEN TUTORING CENTRE

உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு

By Qualified & Experienced Tutors

- CHEMISTRY, PHYSICS, BIOLOGY
- FUNCTIONS, ADV. FUNCTIONS
- CALCULUS & VECTORS, DATA MGT
- SCIENCE, MATH, ENGLISH

GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"

✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6

Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

# காத்திருக்கும்...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

## திக்கும் திசையும் தெரியாமல் பாஜக

இத்தனை களேபரங்களுக்கு நடுவே, மத்தியில் ஆளும்கட்சியாக இருந்தும் பரிதாபமாகத் தனித்து நிற்கிறது பா.ஜ.க. அதிமுகவுடன் கூட்டணி அமைப்பதுதான் பாஜகவின் முதல் திட்டம். ஆனால் பிரதமர் நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் அருண் ஜேட்லி, வெங்கையா நாயுடு என முக்கிய பாஜக தலைவர்கள் எல்லாம் வீடு தேடிச் சென்று பேசியும் பிடிகொடுக்காமல் இருக்கிறார் ஜெயலலிதா.

2014 நாடாளுமன்றத் தேர்தல் போல் பலமுனை போட்டியை உருவாக்கி, தனித்து நின்று அறுவடை செய்துவிடலாம் எனக் கண்ட கனவை கனமழை அடித்துச் சென்று விட்டாலும், பாஜகவைச் சேர்த்துக் கொள்ளும் நிலையில் ஜெயலலிதா இல்லை என்றே தெரிகிறது. 'பாஜகவுடன் கூட்டணி வைப்பதால் தனக்கு லாபம் கிடையாது. அதேநேரம் முஸ்லீம், கிறிஸ்தவர்கள் ஓட்டுகளை இழக்க வேண்டியிருக்கும்' என்பது அவர் கணக்கு. மேலும், பாஜகவை வெளியே வைத்திருப்பதன் மூலம்தான் அவர்கள் தேமுதிகவுடன் கூட்டணி அமைப்பதற்கான வாசலைத் திறந்து வைத்து, பலமுனை போட்டியை உருவாக்க முடியும் என அவர் நினைக்கிறார்.

பல முயற்சிகளுக்குப் பிறகு அதிமுகவுடன் கூட்டணி சாத்தியமில்லை என்னும் நிலையில்தான், "ச்சீ ச்சீ இந்தப் பழம் புளிக்கும்" கதையாக ஆளும்கட்சியை விமர்சித்துக்கொண்டே தங்கள் பழைய கூட்டணியைப் புதுப்பிக்க முயற்சித்து வருகிறார்கள், தமிழகப் பாஜக தலைவர்கள். இதனடிப்படையில்தான் பா.ம.க.வின் முதல்வர் வேட்பாளர் அன்புமணி ராமதாஸை யும் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தையும் பா.ஜ.க. தலைவர்கள் அடுத்தடுத்துச் சந்தித்துப் பேசிப் பார்த்தனர்.

ஆனால், "கடந்த 2014ம் ஆண்டு மக்களவை தேர்தலில் பாரதிய ஜனதாவுடன் தங்களுக்குத் தொகுதி உடன்பாடு மட்டுமே இருந்தது. தேர்தலுக்குப் பின்னர் நேசம், பாசம், உறவு எல்லாம் முடிந்துவிட்டது" என்று அதிரடியாக அறிவித்தார் பாமக நிறுவனர் ராமதாஸ். விஜயகாந்தும், "தற்போது நாங்கள் யாருடனும் கூட்டணி யில் இல்லை" என்று அறிவித்துவிட்டார். ஆனாலும், "பாமகவும் தேமுதிகவும் எங்களுடன் கூட்டணியில்தான் உள்ளனர்" என அலுக்காமல் பேசி வரும் பாஜக தலைவர்கள் மீண்டும் பேச்சுவார்த்தை படையெடுத்தார்கள்.

"நான்தான் முதல்வர் வேட்பாளர் பா.ம.க. தலைமையில்தான் கூட்டணி தி.மு.க.- அ.தி.மு.க. தவிர இதர கட்சிகள் வரலாம்" எனக் கறாராகக் கூறிவிட்டாராம் அன்புமணி. விஜயகாந்தோ, "நானே முதல்வர் வேட்பாளர் எனது தலைமையில் கூட்டணி பா.ம.க. வரக்கூடாது" என்ற அதிரடி நிபந்தனை விதிக்க, மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன், தமிழிசை சவுந்தரராஜன், மோகன்ராஜுலு கொண்ட பேச்சுவார்த்தைக் குழு அதிர்ந்துவிட்டதாம்.

ஆனாலும் நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள் பாஜகவினர்.

முதல்வர் கனவில் விஜயகாந்த்

தே.மு.தி.க. செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் சென்னை பெரம்பலூரில் நடைபெற்றது. இதில் பேசிய விஜயகாந்த், ''அடுத்த மாதம் தே.மு.தி.க. மாநில மாநாடு நடத்தி அதில் கட்சித் தொண்டர்களின் கருத்தை அறிந்து தேர்தல் கூட்டணி பற்றி முடிவு எடுக்கப்படும். கூட்டணியை நான் பார்த்துக் கொள்கிறேன் கட்சிப் பணிகளை நீங்கள் பார்த்து கொள்ளுங்கள்'' என்றார். ஆனால், அதன்முன்னர் பேசிய தே.மு.தி.க. மூத்த நிர்வாகிகள், "தே.மு.தி.க. தலைமையில்தான் கூட்டணி அமைய வேண்டும். விஜயகாந்த்தை முதல்வராக ஏற்பவர்களுடன் நாம் கூட்டணி சேரலாம். 2011 தேர்தலில் அ.தி.மு.க.வை ஆதரித்து தி.மு.க.வை தோற்கடித்தோம். ஒரு கட்சியை வீழ்த்தி, இன்னொரு கட்சி ஆட்சியைப் பிடிக்க வைக்கும் அதே தவறை இந்த தடவை நாம் மீண்டும் செய்யக் கூடாது'' என்றனர்.



இதன்மூலம் தே.மு.தி.க. தேர்தலுக்காக அணிவிட்டு அணி மாறும் கட்சி அல்ல என்ற செல்வாக்கை தக்க வைத்து கொள்ளலாம். தே.மு.தி.க.வின் செல்வாக்கும் மக்களிடம் அதிகரிக்கும். தி.மு.க.–அ.தி.மு.க. எதிர்ப்பு ஓட்டுகள் தே.மு.தி.க.வுக்குதான் கிடைக்கும். குறிப்பிட்ட அளவு தொகுதிகளை கைப்பற்ற முடியும் என்ற கருத்தையும் நிர்வாகிகள் பதிவு செய்துள்ளனர்.

"தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து 2016 தேர்தலை விஜயகாந்த் சந்திப்பார் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற துணை முதல்வர் பதவி மற்றும் 70 இடங்கள் வரை அவர் பேரம் பேசி வருவதாக" சொல்லப்பட்டு வந்த நிலையில், பெரம்பலூர் பொதுக்குழு விஜயகாந்த், தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க விரும்பவில்லை என்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தே.மு.தி.க. நிர்வாகிகளின் பேச்சு விஜயகாந்தின் மன ஓட்டத்தின் வெளிப்பாடுதான் என அரசியல் நோக்கர்கள் கணிக்கிறார்கள்.

ஏற்கெனவே, விஜயகாந்தை முதல் – அமைச்சர் வேட்பாளராக ஏற்க பா.ஜ.க. தரப்பில் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தே.மு.தி.க. - பா.ஜ.க. கூட்டணி உருவாகும் வாய்ப்புள்ளதாக கணிக்கப்படுகிறது. நாடாளுமன்ற தேர்தலின்போது பா.ஜ.க., தே.மு.தி.க., ம.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள் கொண்ட மெகா கூட்டணியை பா.ஜ.க. உருவாக்கியது. அந்தக் கூட்டணிக்கு 16 சதவீத ஓட்டுகள் கிடைத்தது. மீண்டும் அத்தகைய வலுவான கூட்டணியை உருவாக்க பா.ஜ.க. விரும்புகிறது. மக்கள் நலக் கூட்டணியில் மதிமுக இடம்பெற்றிருப்பதால், அதற்குப் பதிலாக ஜி.கே. வாசனின் தமிழ் மாநில காங்கிரஸைச் சேர்த்துக்கொள்ளலாம் என்பது பாஜக திட்டம். இதற்காக, அன்புமணியை முதல்வர் வேட்பாளராக அறிவித்துள்ள பாமகவைச் சமரசம் செய்யும் முயற்சியில் பா.ஜ.க. ஈடுபட்டுள்ளது.

அதேநேரம், "அதிமுக, திமுகவுக்கு மாற்றான ஒரு தலைமையை மக்கள் விரும்புகிறார்கள் என்று பரவலாகப் பேசப்பட்டாலும், அவர்கள் எத்தனை சதவிகிதம் என்ற தயக்கம் விஜயகாந்துக்கும் பிரேமலதாவுக்கும் உள்ளது. இதுவரை மூன்றாவது அணி முயற்சிகள் எதுவும் வெற்றிபெற்றதில்லை என்பதுடன், அதனை அனுபவபூர்வமாகவும் அவர்கள் உணர்ந்துள்ளார்கள். 2014 நடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான அணியில் தே.மு.தி.க., ம.தி.மு.க., பா.ம.க. கட்சிகள் இடம்பெற்றிருந்தன. இந்த அணி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. மேலும், நாடு முழுவதும் மோடி அலை வீசியது. ஆனால், 2 தொகுதிகளில்தான் இக்கூட்டணி வெற்றிபெற்றது. அதுவும் தேமுதிகவால் பா.ஜ.க., பா.ம.க. பலன் அடைந்தனவே தவிர தே.மு.தி.க.வுக்கு எந்த வெற்றியும் கிடைக்கவில்லை.

எனவே, மூன்றாவது அணிக்குத் தலைமை தாங்கும் முடிவை விஜயகாந்த் எடுக்கமாட்டார். பாஜக பக்கம் போனாலோ, மக்கள் நலக் கூட்டணி பக்கம் போனாலோ விஜயகாந்துக்கு, முதல்வர் வேட்பாளர் அந்தஸ்து கிடைக்கலாம். ஆனால், வெற்றி வாய்ப்பு, கேள்விக்குறியாகிவிடும். மக்கள் நலக் கூட்டணி, பாஜகவுடன் சேர்வதுபோல் போக்குக்காட்டிக் கொண்டிருப்பதன் மூலம், திமுகவிடம் இருந்து அதிகமான தொகுதிகள் பெறவே முயற்சிப்பார். தேர்தல் செலவுகளையும் ஏற்றுக்கொள்ளச் செய்யலாம். மேலும், கூட்டணி ஆட்சிக்கு திமுகவை சம்மதிக்க வைக்க முடிந்தால் தேமுதிக பெரிய கட்சியாக வளர வாய்ப்பு கிடைக்கும் என்பதுதான் அவர் திட்டம். கூட்டணி முடிவை அறிவிக்காமல் இருப்பது பேரம் பேசும் வலிமையைக் கூட்டத்தான்" என்றும் சொல்லப்படுகிறது.

சூழ்நிலையைப் பொறுத்து கூட்டணி பற்றி முடிவு எடுப்பேன் என அறிவித்த ஜெயலலிதா உட்பட, தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் விஜயகாந்த் முடிவுக்காக காத்திருக்கிறார்கள். அடுத்த மாதம்தான் தேர்தல் தேதி அறிவிக்கப்படும். எனவே, அதுவரை காத்திருப்பவர்களுடன் கண்ணாமூச்சி விளையாட விஜயகாந்துக்கும் வாய்ப்புள்ளது என்பதால், பெப்ரவரி 20ஆம் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெறும் தேமுதிக மாநில மாநாட்டில் கூட்டணி பற்றி அறிவிப்பாரா என்பதுதான் இப்போது அனைவரின் கேள்வியும்.






# கவிஞர் கந்தவனத்தின் கவின்மிகு கவிதைகள்

இரசிகமணி கனக. செந்திநாதன்

1. முன்னுரை

'பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ' என்ற பாடலை மேல்வரிச் சட்டமாகக் கொண்டு ஒருசில பழம் நூல்களையே படித்துவிட்டு மற்றவற்றைத் தொடாமலேயே இருக்கும் கற்றறிந்தோர் ஒரு சிலர் இந்நாட்டில் உள்ளனர். பிற்காலத்தில் எழுந்த சிறுகதை, நாடகம் ஆகியவற்றை மட்டுமே படித்துவிட்டுப் பழைய இலக்கியங்கள் எல்லாம் எமக்குப் பெரும் சுமையாக இருக்கின்றன என்று சொல்லித் திரிகின்ற புதுமை எழுத்தாளர்களும் காணப்படுகின்றனர். இவ்விருவகைப்பட்டவர் களுக்கும் பதில் சொல்வதைப்போல, 'உங்களுக்கு ஆழமாகத் தெரியாத ஒன்றைப் பற்றி அபிப்பிராயம் சொல்லாதீர்கள் -

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்'

என்ற குறளை முன்வைக்கின்றார் வள்ளுவப் பெருந்தகை. இதையே பாரதியாரும் 'தாஜ்மகால் புதியது என்பதற்காக அதன் அழகைக் குறைத்து மதிப்பதுமில்லை, எங்கள் அப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக அதன் உப்புநீரை நாம் புகழ்ந்து குடிப்பதுமில்லை' எனக் கூறியுள்ளார்.

இப்படியான ஒரு சமநோக்கை என் மனத்தில் வரித்துக்கொண்டு சென்ற முப்பத்தெட்டு வருடங்களாகப் பழையனவற்றைப் பற்றியும் புதியனவற்றைப் பற்றியும் படித்தறிந்து நான் இரசித்தவற்றை இரசிக உலகுக்கு அறிமுகம் செய்திருக்கின்றேன். முக்கியமாக எங்கள் நாட்டுக் கவிஞர்களையும் எழுத்தாளர்களை யும் அவர்களது எழுத்துக்களையும் மக்கள் முன் வைத்திருக்கின்றேன். இவற்றை வெறும் இரசனை விமர்சனம் அல்லது கட்டுரை களென எள்ளி நகையாடியோரும் இங்கு இருக்கின்றனர். இவர்களுக்குக் கலையைப் பற்றிய எண்ணப்பிறழ்வு இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

கலை பொதுவாக, அறிவுக் கலை என்றும் அழகுக்கலை என்றும் இருவகைப்படும். அறிவுக்கலை தந்தையைப் போன்றது. அழகுக்கலை தாயைப் போன்றது. அறிவுக் கலை வாழ்க்கைக்கு வசதிகளை வகுக்க, அழகுக்கலை இன்பத்தை வழங்குகின்றது. இன்பத்தை அடையச்செய்யும் எதுவும் இரசனையின்பாற் பட்டது. கேட்பவரையும் அதே இரசனையில் மூழ்கச் செய்தல் வேண்டும். இந்தத் திறமை உள்ளவனே இக்காலத்துக்குத் தேவைப்படுகின்றான்.

இந்த இரசானுபாவக் கொள்கையை விளக்க ஒரு பூவை எடுத்துக்கொள்வோம். ஒரு பூவை ஒரு விஞ்ஞானி பார்க்கிறான். அவனது கண்ணோட்டம் பூவை இதழ் இதழாகப் பிரித்து வகுத்துப் பார்க்கும் பகுத்தறிவுப் பார்வையாகும். ஒரு தோட்டக்காரன் அதே பூவைப் பார்க்கிறான். அவனுக்கு அதுவெறும் மலராகவே படுகிறது. அத்தர் செய்யும் வியாபாரி அதைப் பார்க்கும்போது, அதிலிருந்து எவ்வளவு வாசனைத் தைலம் எடுக்கலாம் என்று யோசிக்கிறான். ஒரு பக்தன் அதைக் கண்டவுடன், 'வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர்' என்று எண்ணுகின்றான். ஒரு யோகியோ அதற்குள் கடவுள் இருப்பதாகவே எண்ணி அதனைப் பறிக்கவே தயங்குகின்றான். ஆனால் கலை யுணர்வு படைத்த ஒரு கவிஞனோ பரவசமான நிலையில் மலரைப் பற்றி யாரும் சிந்திக்க முடியாத அளவுக்குக் கற்பனையில் மூழ்கிவிடுகிறான். அவனது கற்பனை இப்படி விரிகிறது:

அள்ளற் பழனத்து அரக்காம்பல் வாய்நெகிழ
வெள்ளம்தீப் பட்ட தெனவெர்இ -
புள்ளினந்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை
உடைத்தரோ
நற்சிலைவேல் கோக்கோதை நாடு.

இதில் பூக்கள் விரிந்த காட்சி புலவனுக்கு வெள்ளத்திலே தீப்பட்டதைப் போன்ற, இயற்கைக்கு மாறான காட்சியைக்கூடக் காட்டுகின்றது. நாமும் அவன் பாட்டில் மயங்கி நிற்கின்றோம்.

இதிலிருந்து மற்றவர் காணும் காட்சிக்கும் புலவன் காணும் காட்சிக்குமுள்ள பேதத்தைக் காண்கிறீர்கள். புலவன் காணும் காட்சியை நாமும் காணவேண்டு மானால் அவனது இரசானுபாவத்தில் நாமும் தோய் தல் வேண்டும். இந்த இரசானுபாவத்தால் ஒழுக்கமும் பண்பாடும் கெடாமற் பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார் பண்டிதமணி.

'இரசத்தின் வெளிப்பாடே இலக்கியம் என்பர். இரசம் - சுவை. நற்பாத்திரங்களின் ஒழுக்கலாறுகளே சுவைக்கத் தக்கவை. இலக்கியங்களில் தீய பாத்திரங்களின் இயல்புகளை எடுத்து வருணிக்கும் சந்தர்ப் பங்களும் உண்டு. அச்சந்தர்ப்பங்களில் அந்தப் பாத்திரங்களைத் தீண்டாமல் நல்ல பாத்திரங்களின் போக்கு எப்படி இருக்கும் என்பதைச் சிந்திக்க வைத்துச் செல்வது இலக்கியத்தின் தனித்த மாண்பாயிருக்கும். ஒரு கூனியை, சகுனியை, கைகேயியைக் கட்டித்தழுவச் செய்வது புலமையாகாது. பரிசுத்த பாத்திரங்களின் தூய ஒழுக்கலாறு களே சுவைக்கத் தக்கவை. அவை அன்பு செய்வதற் குரியவையாய் அமையும்போது அவற்றின் இலக்கிய எல்லையைக் கடந்ததா யிருக்கும்.' இது கீழைநாட்டு விமர்சகர்களால் போற்றி வளர்க்கப்பட்டுவரும் ஒரு பண்பாகும். அவர்களுக்கு இந்தப் பண்பைக் கொடுத்தது கீழைநாட்டு இலக்கியங்களிற் பேணப்படும் 'உயிர்களிடத்து அன்பு வேண்டும்' என்கின்ற பரந்த நோக்கமாகும்.

எமது நாட்டிலும் ஈழத்துப் பூதந்தேவனார் தொடங்கிப் புலவர்மணி சோ. இளமுருகனார் வரை பல கவிஞர்கள் இந்தப் பரந்த நோக்கத்தின் அடிப்படையில் அரிய பல படைப்புக்களைத் தந்துள்ளனர். அவர்களிற் சிலர் சிவனொளிபாதம் போன்று பெருமைக் குரியவர்களாகவும் சிலர் குளிர்மைதரும் பசுஞ்சோலைகளாகவும் சிலர் சலசலவெனப் பாயும் அருவியைப் போன்றவர்களாகவும் சிலர் கீரிமலை நீரூற்றை ஒத்தவர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்களைப் போலவே இப்போதுள்ள ஈழத்துக் கவிஞர்களிலே பலர்


தொடர்ச்சி 39ஆம் பக்கம்


NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்கள், சுப்பர் விசாவில் உள்ளவர்களும் பெறலாம்.
• விபத்துக்களில் இறந்தால், நான்கு மடங்கு காப்புறுதித் தொகை கிடைக்கும்.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.

**Nimal Subramaniam**
Cell: 416.816.7994
Email: neel900@hotmail.com

Assumption Life | INDUSTRIAL ALLIANCE | La Capitale

•Life Insurance •Critical Illness Insurance •Disability Insurance •Mortgage Insurance •RRSP •RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# தலைச்சுற்றலுக்கு தீர்வு காண்போம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## VERTIGO

தலைச்சுற்றல் என்பது நனவு நிலையில் சிறிது சீர்குலைவு ஏற்பட்டு உடல் சமநிலையிழந்து தடுமாறும் நிலையாகும். மயக்கம், தடுமாற்றம் என்றும் இதனைக் குறிப்பீடுவர். அதன் அறிகுறிகள் மூன்று.

(1) உடல் அல்லது தலை சுற்றுவது போன்ற உணர்வு

(2) தன்னை சுற்றியுள்ள பொருட்கள் சுற்றுவது போன்ற உணர்வு

(3) தள்ளாடுவது போன்றும் கால்கள் இரண்டும் தடுமாறுவது போன்றும் உணர்வது

உடலின் சமநிலை பலவகை காரணங்களால் பாதிக்கப்படு கிறது. காதுகளும் அவை சார்ந்த நரம்புகளும் சமநிலையை பெற உதவுகின்றன. அத்துடன் மூளையின் கீழ்ப்பகுதி, கண்கள், மனம், தலையின் பின்பகுதி என்பவற்றில் ஏற்படும் பாதிப்புக்கள் தலைசுற்றலையும் மயக்கத்தையும் உண்டாக்குகின்றன. வேகமாக ஆடுவது, சுற்றுவது, திடீரென உயரச்செல்வது, இரைச்சல், அதிர்வுகள், துர்நாற்றம் போன்ற புற சூழ்நிலைகளாலும் தலைசுற்றல் வரலாம்.

தலைசுற்றல் ஒரு நோயல்ல. அது ஒரு நோய்க்குண்டான அறிகுறியே. நாம் சமநிலையாக இருப்பதற்கு நான்கு




முக்கிய உறுப்புக்கள் தேவை. அவை கண், காது, சிறுமூளை மற்றும் முதுகுத்தண்டு நரம்புகள். இவை ஒன்றோடொன்று சேர்ந்து செயல்படுவதால் நாம் நினைத்தவாறு அசைகிறோம். இவற்றில் ஒன்றின் செயல்திறன் குறைந்தால் தலைச்சுற்றல் உண்டாகின்றது. பொதுவாக மயக்கம் வருதல், தலைக்கனம், மந்தத்தன்மை, தலை எடையில்லாது நிலை தடுமாற்றம், சோர்வு என்பனவற்றை நம்மவர்கள் தலைசுற்றல் என்று பொதுப்படையாகக் கூறுகின்றனர். நாம் சமநிலையாக இருப்பதற்குரிய உறுப்பு காதின் உட்பகுதியில் உள்ளது. இதனை காது சம்பந்தமான மருத்துவர்களினால் நன்கு அறிய முடியும். பொதுவாக தலைசுற்றல் என்பது வயது போகப்போக கூடுதலாக வரும். இதனை நாம் மிகுந்த கவனத்துடன் கண்டறிய வேண்டும்.



தலைசுற்றல் எதனால் வருகின்றது?, இதன் காரணம் என்ன?, இதனை எவ்வாறு தவிர்ப்பது? வயது வந்தவர்களில் 100 பேருக்கு 5 பேராவது தலைசுற்றல் நிலையால் பாதிக்கப்படுவதாக மருத்துவ அறிக்கை கூறுகின்றது. நாம் நடமாடும்போது காது, கண், கை, கால் என்பன நமது சிறு மூளைக்கும் பெருமூளைக்கும் கம்பியூட்டரைப்போல எப்போதும் விபரத்தை சொல்லிக் கொண்டே இருக்கின்றது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட விபரங்கள் சிறுமூளையிலிருந்து பெருமூளைக்கு கொண்டு செல்லப்பட்டு அவற்றிலிருந்து செயல்வடிவமாக எடுத்துவரப்படுகின்றது. இந்த செயலில் சீர்கேடு வரும்போதும் தவறான (Signal) மூளைக்குச் செல்லும்போதும் நமக்கு தலைசுற்றல் வருகின்றது.

### உடற்பயிற்சிகள்

எல்லா வகையான உடற்பயிற்சிகளும் இரத்த ஓட்டத்தை சீர்செய்து தலைசுற்றலை குறைக்க உதவும். இருந்த போதிலும் யோகாசனப் பயிற்சியுடன் கூடிய பிராணாயாமம் என்னும் மூச்சுப் பயிற்சிதான் இதற்கு முழுமையான தீர்வைக் கொடுக்கும். இவற்றுள் சித்தாசி, கபாலபாதி மற்றும் நாடிசுத்தி என்பன பெரிதும் பலன் தருபவையாகும்.

### மனநிலை பயிற்சி

உடலும் உள்ளமும் ஒன்று சேர்ந்து செயல்பட்டால்தான் வாழ்க்கை இன்பந்தரும். உடல்நிலை சீர்கெட்டால் மனம் பாதிப்படையும். மனம் குன்றினால் உடல் வலுவிழந்து போகும். தலைசுற்றல் வந்து ஆறு மாதங்களுக்குள் நோயாளிகளுக்கு மன ரீதியான சோர்வு ஏற்படுகின்றது எனக் கணக்கிட்டுள்ளனர். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தனியாக வெளியிடங்களுக்குச் செல்ல பயப்படுகின்றனர். இருட்டைக் கண்டு அச்சமடைகின்றனர். எனவே தைா-ியத்தை ஊக்குவிக்க வேண்டும். தினமும் காலையிலும் மாலையிலும் குறைந்தது பத்து நிமிடமாவது தியானப் பயிற்சி (Meditation) மேற்கொள்ள வேண்டும்.

### மருந்துகள்

தகுந்த மாத்திரைகளை சாப்பிடும்போது தலைசுற்றல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றது. ஆனால் காதுகளை சீர்கெடுக்கும் மாத்திரைகளை உட்கொள்ளக்கூடாது.

### அறுவைசிகிச்சை

சிலசமயங்களில் மிகக் கடுமையாக தலைசுற்றல் ஏற்படும்போது காதில் அறுவை சிகிச்சை செய்தும் இதனை குணப்படுத்தலாம். இதனை முடிந்தவரை தவிர்ப்பதுதான் சிறந்தது.

### உணவு

தலைசுற்றல் உள்ளவர்கள் நீர்ச்சத்து அதிகமாகவுள்ள காய்கறிகள், பழங்கள் உட்கொள்ளுதல் நல்லது. கடல் மீன், மாமிசம், ஊறுகாய் என்பனவற்றை தவிர்ப்பது சிறந்தது. ஒரேநேரத்தில் அதிக உணவு உட்கொள்வதை நிறுத்த வேண்டும்.

படுக்கும்போது தலையணையின்றிப் படுத்துக்கொள்வது சிறந்த பலனை தரும். கண்களை மூடியபடி ஒரு திசையிலும் திரும்பாமல் படுத்திருக்க வேண்டும். பின்பு மெதுவாக எந்த திசையில் திரும்பினால் தலைசுற்றல் அதிகமாக உள்ளதோ ஓரிரு நாட்களில் அந்த திசையில் திரும்ப முயற்சிக்க வேண்டும். தலைசுற்றலால் பயப்படும் அளவுக்கு பிரச்சினை இருந்தால் காது E.N.T மருத்துவரை அணுகி ஆலோசனை



ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721




ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat



Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

TBC Toronto Business College
கணக்கியில் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



JOB READY
DIPLOMA PROGRAMS
ACCOUNTING & PAYROLL ADMIN.
Jobs available in plenty
Earn good salary
FOOD SERVICE WORKER (FSW)
Work in Hospitals, Schools, Senior Homes
PERSONAL SUPPORT WORKER(PSW)
Immediate Job Opportunities
Work in Hospitals, Long Term Care, Senior Homes
*Programs start February 16th*

SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation up to $28000
visit www.secondcareerontario.com

PART TIME COURSES
Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting & Accpac 2012
Workshops
Food Handler Certification
First Aid & CPR

PSW Graduates Wanted
Email Resume to
info@tbcollege.com

416- 451- 6680 / 416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# குடும்ப நாள்



உண்ண, உறங்க, உரையாட நேரமின்றி
இரவுபகலாய் ஓடிஓடி உழைத்தவர்கள்
குடும்பமாய் ஒன்று கூடி இருந்து யாபேரும்
குதூகலமாய் கொண்டாட உகந்த ஒரு நாள்
விடுமுறையோடு கூடிய இந்தக் குடும்பநாள்

குடும்பத்தில் தினம் தினம் நடைபெறுகின்ற குறைநிறைதனை
கேட்டறிந்து ஒருவருக்கொருவர் வாய்விட்டுப்பேசி
நல்ல வழிமுறைகளைக் கண்டறியும் தகுந்த
நடவடிக்கை மேற்கொண்டு நல்ல தீர்வுகாணவும்
உகந்தநாள் இந்தக் குடும்பநாள்


உற்றார், உறவினர், நண்பர்கள் ஒன்றுகூடி இருந்து
உண்டு அருந்தி அகமகிழ்ந்து கொண்டாடவும்
முதியோரும், இளையோரும் ஒன்றுகூடி நின்று
ஆடியும், பாடியும் கொண்டாட உன்னதநாள்
இந்தக்குடும்பநாள்

அன்னிய தேசத்தில் வாழும் உறவினர் நண்பர்களோடு
அடிக்கடி தொடர்பு கொள்ள முடியாதவர்களும்
தொலைபேசியில் தொடர்பு கொண்டு குசலம் வினவவும்
விடுமுறையோடு கூடிய ஒருநாள் இந்த
குடும்பநாள்



கவிநாதம் பரந்தாமன்

# நாம் வாழும் பூமியும் ஒரு நந்தவனம்



வண்ண வண்ண அழகு மலர்கள்
வசந்தத்தை தெளித்த வண்ணம்
பல்வேறு நிறங்களை கொண்டு
வகையாய் பல வடிவங்கள் தாங்கி
நறுமணத்தை பரப்பியவாறு
வானவில்லின் கோலம் தாங்கி
பசுஞ்சோலையாய் காட்சி தந்து
எங்கும் பூத்துக் குலுங்குதே
மனதையும் கொள்ளை கொள்ளுதே
அழகான இந்த நந்தவனம்
நம் சிந்தையையும் ரசிக்க வைக்குதே
நம் வாழும் பூமியும் ஒரு
வண்ணச்சோலையே

நாடுகள் பல்வேறு இப்பூமியில் இருந்தாலும்
நாட்டவர்கள் பலவகையில் வேறுபட்டாலும்
இனங்கள் இணங்காது முரண்பட்டு போனாலும்
மதங்களில் பல பிரிவினைகள் இருந்தாலும்
வழிபாடு ஒருவனுக்கே என்பதையும் மறந்தாலும்
நீ வேறு நான் வேறு என்று தான் ஆனாலும்
நிறங்களில் பல சாயங்கள் கண்டாலும்
அழகிய பூந்தோட்டத்தை
நாமே நம்மை அறியாமல் உருவாக்கி விட்டோம்
நாம் வாழும் நம் பூமியை
நாமே சிறப்பிக்கின்றோம் என்பதையும்
ஏனோ மறந்துவிட்டோம்



மீரா குகன்
ஜேர்மனி

# வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம்

## இயற்கையின் இரகசியங்கள்

### யாவருக்குமான அறிவியல்

சென்ற தடவையில் அளவைகளின் இரண்டு அடிப்படையில் பேரண்டத்தின் பொருட்களை வகைப்படுத்துவது பற்றிப் பார்த்தோம். ஒன்று எத்தனை என அளப்பது மற்றது எவ்வளவு என அளப்பது.

ஒளியும் இந்தக் கேள்விகளின் அடிப்படையில் பார்க்கப்பட்டது. ஒளி, இவ்வளவு எனக் கருதப்படும் சக்தியின் அடிப்படையில் பார்க்கப்பட்ட போதிலும் இவ்வளவு துண்டுகளா என்ற கேள்வியும் எப்படியோ அக்கால அறிவியலாளர்கள் சிலரின் மனதில் எழுந்து விட்டது. அதனால் ஒளி தனித்தனிக் கூறுகளால் ஆனதா இல்லை தொடர்ச்சித் தன்மையானதா? என்ற வாதம் எழுந்து விட்டது. இது, ஒளி சக்தியா அல்லது சடமா எனக் கேட்பது போன்றது. இதனால் ஒளி எனும் சக்தியை ஏதாவது சடங்கள் காவி வருகின்றனவா? தொலைவில் உள்ள விண்மீன்களில் இருந்தெல்லாம் வெளிச்சம் எங்களது கண்களை வந்தடைகிறதே! எப்படி வருகிறது? பல தனித்தனிக் கூறுகள் ஒன்று திரண்டு வருகின்றனவா இல்லை எங்களுக்குத் தெரிந்த சத்தம் (ஒலி) போன்று தொடர்ச்சியாக, அலை வடிவில் வருகிறதா?

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இந்நிலையில் அறிவியலாளர்களுக்கு இன்னொரு கேள்வியும் கூடவே எழுந்தது. எப்படியெனில், சக்தியின் வடிவமான ஒலியானது காற்று, நீர், இரும்பு போன்ற ஏதாவது ஒன்றின் ஊடாக அலைவடிவில் வருகின்றது என்பதனை அக்காலத்தில் அறிஞர்கள் அறிந்திருந்தார்கள். அந்த ஒலி வருகிற பொருளை பொதுப்படையாக ஊடகம் என்றும் கூறினார்கள். எனவே சக்தியின் இன்னொரு வடிவமான ஒளியும் அலை வடிவில்தான் எங்களது கண்களுக்கு வருகிறதோ என்ற நியாயமான ஐயப்பாடும் எழுந்தது. இதற்கான ஊடகமாகக் காற்று இருக்கலாம் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார்கள். ஆனால் விண்மீன்களில் இருந்தும் வெளிச்சம் பயணப்பட்டு வருகின்றதோ, விண்வெளியில் காற்று இல்லையே. அப்படியாயின் விண்மீன்களில் இருந்து வருகிற வெளிச்சம் எப்படிப் புவிக்கு வந்து சேர்கிறது? என்றொரு கேள்வியையும் அன்று எழுப்பினார்கள். அப்படியாயின் அண்டவெளியில் காற்று இல்லாத இன்னொரு ஒளி புகுந்து செல்லக் கூடியதான ஊடகம் உள்ளதோ என்றும் சிலர் ஐயம் கொண்டார்கள்.

சக்தியின் ஒரு வடிவமான ஒளி விண்மீன்களில் இருந்து எப்படி எங்களை வந்தடைகிறது என்பது அந்நாட்களில் இருந்த அறிவியற் சிக்கல்களில் முக்கியமான ஒன்றாக இருந்தது. இவை இப்படியிருக்க, அந்நாட்களில் ஒளியின் சில சிறப்பான இயல்புகளையும் அறிந்து விட்டார்கள். ஒளியானது நேரான பாதையில் தான் செல்லும் என்பதனையும். இதனாலேயே பொருட்களின் நிழல்கள் உண்டாகின்றன என்பதனையும் அறிந்து கொண்டார்கள். மேலும், ஒளியானது கற்கள் போன்ற சில பொருட்களிற் பட்டுத் தெறிப்படையக் கூடியதாக இருக்கிறது, சில பொருட்களின் ஊடாகச் செல்லாது, ஆனால் தண்ணீர் போன்ற வேறு சில பொருட்களின் ஊடாகச் செல்லும் வல்லமை கொண்டது, ஒளி செல்கையில் ஒரு ஊடகத்தில் இருந்து இன்னொரு ஊடகத்துள் நுழையும் போது ஊடகங்களைப் பிரிக்கும் இடத்தில் முறிவடைந்து தன்பாதையை மாற்றுகிறது, என்பவற்றையும் தெரிந்து கொண்டார்கள். இப்படியான, ஒளியின் இயல்புகளைக் கொண்டு ஒளியினைப் பற்றி அறிந்து கொள்ள முற்பட்டது அந்நாளின் அறிவியல் உலகம்.

இந்த உலகத்தில் நடைபெறுகின்ற சம்பவங்களுக்குத் தர்க்க முறையில் விளக்கத்தை முதலில் தேடியவர்களாகக் கிரேக்கர்களைக் கூறுகின்றார்கள். அறிவியலின் சகல கதவுகளையும் முழுமையாகத் திறந்து விடாது விடினும் அவற்றை உலகிற்கு இனம் காட்டியவர்கள் கிரேக்கர்கள்தான். இவர்களும் ஒளியினைப் பற்றிய ஆரம்பப் புதிர்களையும் தெரிந்து கொள்ள முயன்றிருக்கின்றார்கள். உலகின் பல பாகங்களுக்கும் சென்று அறிவியல் விடயங்களைத் திரட்டியவர்கள் தேடினார்கள். ஆனாலும் தம்மொழியின் செழிப்புப் பற்றி வீம்பான எண்ணங்கள் கொண்டிருந்த தினால் சில அரிய விடயங்களைத் தவற விட்டவர்கள் என்ற பெயரும் உண்டு.

எடுத்துக் காட்டாக, சுழியத்தைப் (பூச்சியத்தைப்) பற்றி அறிந்து கொண்டும் அது தங்களது எண்கள் அமைப்புத் திட்டத்தில் இல்லாதபடியினால் அதனைத் தவிர்த்து விட்டார்கள். ஒருவேளை கிரேக்கர்களினது அறிவியல் வளர்ச்சி இன்னமும் வளர்ச்சியடையாததற்கு இந்தப் பூச்சியம் என்பதன் பாவனை இல்லாமையும் ஒரு காரணியாக இருந்திருக்கலாம். அந்நாட்களின் அறிவியல் விருத்தியில் பூச்சியத்தின் பங்கு அதிகம் இல்லாது இருந்தது போலத் தெரிந்ததினாலோ அல்லது கிரேக்கர்கள் தங்களது தனித்துவத்தைப் பேண வேண்டும் என்ற எண்ணத்தினாலோ தெரியவில்லை, அறிவியல் உலகின் மிகவும் முக்கியமான சுழியத்தை அவர்கள் அறிந்திருந்தும் கண்டு கொள்ளவில்லை. ஆனாலும் கிரேக்கர்களின் அறிவியல் வளர்ச்சியில் அதிக செல்வாக்கைக் காட்டிய பாபிலோனியர்கள் பூச்சியத்தைப் பாவித்திருந்தார்கள் எனத் தற்கால ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். பூச்சியத்தினை உலகினருக்கு அறிமுகப் படுத்தியவர்கள் நாங்கள் தான் (இந்தியர்கள்) என்ற உண்மை ஆழ் அறிவு ஆய்வாவாளர்களினால் கூறப்படுவதை நாங்கள் அறிவோம். இந்நாட்களில் இது பெரும்பாலான அறிஞர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

யுகிளிட் என்ற கிரேக்கக் கணித விற்பன்னரைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். கிறிஸ்துவிற்கு முன்னரே கிரேக்கத்தில் வாழ்ந்த கணித விற்பன்னர். ஆச்சரியப்படும் விதத்திலான கணித முடிவுகளைக் கேத்திர கணிதத்தில் தந்தவர். பிரமானங்கள் பற்றிய தெளிவினை முதன் முதலில் தெளிவு படுத்தியவர் இவர்தான் எனக் கூறினால் அது மிகையாகாது என்பார்கள் கணித வியலாளர்கள். பொருட்களின் வடிவங்கள் பற்றியும், அவ்வடிவங்களின் தன்மைகள் பற்றியும் அளப்பரிய விளக்கங்கள் கொண்டவர். இன்றுள்ள ஆரம்பநிலைக் கணிதவியலாளர்களையும் விடப் பல மடங்கு மூளை வலுக் கொண்டவர். அவர்தான் ஒளியினது இயல்புகளை முதலில் தெரிந்து கொள்ள முயற்சித்தவர் என்கிறார்கள். ஒளி செல்லும் பாதை எப்போதும் நேரானது, ஒரு ஊடகத்தில் இருந்து இன்னொரு ஊடகத்துள் நுழைகையில் நுழையும் இடத்தில்




முறிவடைந்து இரண்டாவது ஊடகத்துள் இன்னொரு பாதையில் செல்லக் கூடியது என்பவற்றை எல்லாம் தெரிந்து கொண்டவராக இருந்திருக்கின்றார்.

இவையெல்லாம் வெளிச்சத்தை வெளிச்சம் போட்டுக் காட்டப் போதியவையாக இருக்கவில்லை. எனவே ஒளியின் இரகசியத்தை அறிய இன்னமும் மும்மரமாக இயற்பியல்வாதிகள், தொழிற்பாட்டாளர்கள், கால ஓட்டத்துடன் முன்னவர்கள் காட்டிய வழிகளிலே வெளிச்சத்திற்கான பார்வை இன்னமும் நிரம்ப வரும்


**- கனி -**
416.261.1348
leptons@hotmail.ca







**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

**வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2016**

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மார்ச் மாதம் 06ஆம் திகதி (March 06, 2016) ஞாயிற்றுக்கிழமை காலை 11:00 மணி முதல் பி.ப 3:00 மணிவரை 3600 Kingston Rd, Scarborough இல் அமைந்துள்ள Scarborough Village Recreation Centre மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திரு. சி. இளஞ்செழியன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் முக்கிய நிகழ்வாக புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெறவுள்ளதுடன் வழமைபோல் மதிய உணவும் வழங்கப்படவுள்ளது. சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தொடர்புகட்கு: செழியன் (416-949-7795) சிவா (416-562-4141) சிறீதரன் (416-661-3494)




# விசாரணை - திரை விமர்சனம்

தனுஷ் - வெற்றிமாறன் கூட்டணித் தயாரிப்பில், 'காக்கா முட்டை'ஐத் தொடர்ந்து, உலக அரங்கில் தமிழ்த் திரையை தலை நிமிர்ந்து நிற்கச் செய்யும் மற்றொரு படம். செயற்கை பூச்சுக்கள், சமரசங்கள் இல்லாமல், நேர்மையுடனும் அறத்துடனும் நிஜத்தைப் பதிவு செய்யும் ஒரு படைப்பு விசாரணை.

போலி மோதல் கொலை உட்பட, காவல்துறையின் அத்தனை மனித உரிமை மீறல்களையும், கதாநாயகர்களுடன் இணைத்து கொண்டாடும் கௌதம் மேனனின் வகையறா திரைப்படங்களே, தமிழ் திரையில் இதுவரை காவல்துறை பற்றிய பதிவுகளாக இருந்துள்ளது. அதில் பெரும் உடைப்பை ஏற்படுத்தியிருக்கிறது இப்படம். காவல் துறையின் அத்தனை மனித உரிமை அத்துமீறல்களையும், அதில் சாமானி யர்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும், மனதை உலுக்கும் நிஜமாக இப்படம் நம்முன் காட்சிப்படுத்துகிறது. இது யாருக்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம் என்ற உண்மையே இப்படத்தின் ஆன்ம பலம்.

'அட்டகத்தி' தினேஷ் ஆந்திரப் பிரதேசம், குண்டூரில் ஒரு மளிகைக் கடையில் வேலை பார்க்கிறார். 'ஆடுகளம்' முருகதாஸ் உள்ளிட்ட தினேஷின் மூன்று நண்பர்களும் அங்கேயே சில்லறை வேலைகள் செய்து பிழைக்கிறார்கள். வாடகை வீடு எடுத்துத் தங்கும் அளவுக்கு வருமானம் இல்லாததால், ஊரின் பொதுப் பூங்காவில் இந்த நால்வரும் தூங்குகிறார்கள். தாமுண்டு தம் வேலையுண்டு என்றிருக்கும் இந்த அப்பாவிகள் நான்கு பேரையும் ஓர் அதிகாலையில் திடீரென ஆந்திர காவல்துறை கைது செய்து அழைத்துச் செல்கிறது. காவல் நிலையத்தில் ஏன், எதற்கு என்று தெரியாமலேயே, உயிர்த்துளி வரை ஊடுருவி நடுங்கவைக்கும் சித்திரவதைக்கு ஆளாகிறார்கள். ஒரு வழக்கில் இவர்களைக் குற்றவாளிகளாக்க, குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்ளச் சொல்கிறார்கள் ஆந்திரா காவலர்கள். தங்கள் கைதுக்கான காரணம் தெரிந்து, அதிர்ந்து, சூழ்ந்திருக்கும் இக்கட்டு உணர்ந்து, அடுத்து என்ன ஆகும் எனத் தெரியாமல் தவித்துத் தத்தளிக்கிறார்கள் நால்வரும்.



இறுதியாக நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படும் நிலையில் எதிர்பாராத திருப்பமாக அவர்கள் முன் ஒரு கருணை கரம் நீள்கிறது. அதே நீதிமன்றத்தில் சரணடைய வரும் பிரபல அரசியல் தரகரான 'ஆடுகளம்'

தொடர்ச்சி 40ஆம் பக்கம்




COMING SOON !
Another New Project
by Tridel ...
TRIDEL®
BUILT FOR LIFE
Hwy 404/Sheppard
It's sweet, chic, and utterly delicious.
PARFAIT@ATRIA
Special Package for :
Gold Members &
HomeLife / GTA Realty Sales Team
HomeLife /GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. East, #203 Toronto, ON.
416 - 321 6969
*Independently Owned & Operated
HOMELIFE
HIGHER STANDARDS

# JRS AUTO TECH

**OPEN 24 HOURS
7 DAYS A WEEK**

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

VISA



- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash

SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

**TIRE SPECIALS**
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35

**FREE OIL CHANGE WITH RUST PROOFING**
$99 Car
$120 SUV

**BRAKE JOB**
STARTING FROM
$159

**WATER PUMP TIMING BELT & LABOR**
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

**TRANSMISSION FLUSH**
*Starting From…*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

**ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS**
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

**CALL SUBAS DIRECT → 416-206-9489**

**Tel: 416-628-4399**

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.


10ஆம் ஆண்டில் மிகவும்
பிரமாண்டமாக... கனடா முழுவதும்...
MAHAJANAN CONTEST 2016
மாதிரி வினா கைநூல் !
BRAIN BOOSTER
BRAIN BOOSTER
BRAIN BOOSTER
MAHAJANAN CONTEST 2016
Students from Grade 1 to 12 are eligible to enter the Math & General Knowledge contests. Winners will receive Gold, Silver & Bronze medals and
SPECIAL PRIZES
For all Grades, Contestants who win first place in both subjects will receive
The registration fee should be paid at the registration desk on the day of the contest. ($ 25.00 for a single student & $ 60.00 for a family with 3 or more students.)
Web link for registration :
http://contest.mahajanan.org
For further information :
416 451 8427, 647 989 6477, 416 671 6447 and 647 547 7096
Sunday, March 06, 2016. 9.00 am
Sir John A.Macdonald Collegiate Institute,
2300 Pharmacy Ave, Scarborough, Ontario.
MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா
(Registered as a non profit organization in Canada, No: 001100556)


MOTOR VEHICLE
ACCIDENT
TRAFFIC TICKETS
SK THEESAN
தீசன்
416-803-5296
SKT Paralegal Service

# வாழ்க்கைப் பயணங்கள் - 11

தொடர்கதை ……….

மறுநாள் இரவு பிரயாணம். வரவேண்டிய வர்கள் எல்லோரும் வந்து அமலாவை வழியனுப்ப வந்து போய் விட்டார்கள். அமலா அப்பா, அம்மாவுடன் காலையில் கோயிலுக்குப் போய் வந்தாள். சுதாகரனின் அண்ணி தாங்கள் பியேர்சன் விமான நிலையம் வருவதாகக் கூறி பிளைற் நேரம் போன்ற விபரங்களைப் பெற்றுக் கொண்டாள்.

அப்பா, அம்மாவை விட்டுப் பிரியும் துயரம் அவளை வாட்டி வதைத்தது. மறுபுறம் ஒருவிதமான மகிழ்ச்சி, எவ்வளவோ கனவுகள் அலைமோதின. நேரம் விரைவாக ஓடிக் கொண்டிருந்தது. சரியான நேரத்துக்கு வீட்டில் இருந்து புறப்பட்டு அப்பா, அம்மாவுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தாள்.

விமானநிலையத்தில் அப்பா, அம்மாவைப் பார்த்துப் பார்த்து அமலா விம்மி விம்மி அழுதாள். ஒருமுறை "எனக்கு ஒன்றும் வேண்டாம். உங்களோடையே இருந்திடறன்" என்றும் அமலா சொன்னாள். நடா "மனதைத் திடப்படுத்திக்கொள் அமலா" என்று சமாதானப்படுத்தினார். அப்பிடிக் கூறி விட்டு அவரும் அழத் தொடங்கி விட்டார். அவர்களுடன் சென்ற உறவினர் அவர் களைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார் கள். வழியனுப்பச் சென்ற எல்லோரும் பார்த்தபடி நிற்க மெல்ல மெல்ல அரை மனதுடன் அவர்களை விட்டு நீங்கி தனது பைகளை சுங்கப் பகுதியினருக்கு திறந்து காட்டி விட்டு பைகளை திரும்பவும் பூட்டி எடுத்துக் கொண்டு பைகளை கையளித்துப் போடிங் பாஸ் பெற்றுக் கொள்ளச் சென்று வரிசையில் நின்றபடி பெற்றோரை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்.

அமலாவின் பெற்றோருக்கும் பார்த்து பார்த்து வளர்த்த பிள்ளையை யாரிடமோ பறிகொடுக்கும் உணர்வு ஒரு புறம். ஒரு பெண்பிள்ளையை கரை சேர்க்கும் காலம் நெருங்கி வருவதை எண்ணிய உணர்வு. இந்த இரண்டு துன்பம், இன்பம் இடையில் தவிப்பு. தூரமாகப் பிரயாணித்து தனித்து செல்கின்றாளே எங்கள் செல்லம் என்ற உணர்வு எனப் பலதையும் சிந்தித்துத் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

அமலா பைகளை கையளித்து விட்டுக் கையசைத்து விட்டு உட்சென்றாள். அதன் பின்னரும் அமலாவின் பெற்றோர் விமான நிலையத்திலேயே அமலாவின் தொலைபேசி அழைப்பை எதிர்பார்த்தபடி காத்திருந்தார்கள்.

அழுது கொண்டிருந்த அமலாவின் அம்மா ராணியை கூட வந்தவர்கள் தேற்றிக் கொண்டிருந்தார்கள். பதினைந்து நிமிடம் கழித்து அமலா தான் உள்ளுக்குப் போய் விட்டதாக தொலைபேசியில் கூறினாள். அதன்பின்பு எல்லோரும் வீடு நோக்கிப் பிரயாணம் செய்தார்கள்.

அமலா ஏறிய விமானம் டுபாயை நோக்கிப் பறந்தது. அமலாவுக்கு இது இரண்டாவது விமானப் பிரயாணம். சில மாதங்களுக்கு முன்னர் ஒருமுறை அப்பா, அம்மாவைக் கூட்டிக் கொண்டு இந்தியாவுக்குச் சுற்றுலா சென்றிருந்தாள். அப்பா முகம், அம்மா முகம், சுதாகரனின் முகம் என மூவரின் தோற்றங்களும் அமலாவின் மனத்திரையில் மாறி மாறித் தோன்றின. நேரம் செல்லச் செல்ல பெற்றோரின் நினைவுகள் மேலோங்கி மனதை வாட்டவும் செய்தது. விமானத்தில் அவளால் தூங்கவே முடியவில்லை.

******

விமான நிலையத்தில் இருந்து வீட்டுக்குத் திரும்பிய அமலாவின் பெற்றோர் நடாவும், ராணியும் நடைப்பிணமாகக் காணப்பட்டனர். இடைக்கிடை ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் படுத்திக் கொண்டனர். வீட்டில் எங்கு பார்த்தாலும் அமலா நிற்பதுபோலான பிரமை. அவளின் செல்லப் பேச்சு அவர்களின் காதில் கேட்பது போலான பிரமை. தங்கள் பெண்பிள்ளை மாப்பிள்ளை யிடம் போய்விட்டாள் என்ற மகிழ்ச்சி மனதில் ஒருபுறம் இருந்தாலும் அந்த உணர்வை மீறி அவளின் பிரிவுத் துயரம் அவர்களை வாட்டியது. அவர்கள் உணவும் அருந்தவில்லை. அப்படியே தூங்கி விட்டார்கள்.

காலை 6 மணிக்கு ரெலிபோன் அடித்தது. வதனா பேசினாள். "மாமா அமலாவை வழியனுப்பி விட்டு என்ன நேரம் வந்தனீங்கள்? நித்திரைக்கு போயிருப்பீர்கள் என்று நாங்கள் குழப்பவில்லை. அதுதான் இப்ப எடுத்தனாங்கள். அமலாவை வீட்டை கூட்டிக் கொண்டு வந்ததும் நாங்கள் போன் பண்ணுறம்" என்று சொன்னாள்".

"சரி பிள்ளை உங்கள் ஹோலைத்தான் பார்த்துக்கொண்டு இருப்பம் " என்று குரல் தழும்பச் சொன்னார் நடா. ராணியும் ஓடி வந்து "எங்கள் செல்லத்தை உங்களிடம் அனுப்பியிருக்கிறம். அவள் நல்ல பிள்ளை. அவளை வடிவாகக் கவனியுங்கோ பிள்ளை" என்று சொல்லிக் கொண்டாள்.

"நீங்கள் ஒன்றுக்கும் யோசியாதீங்கோ மாமி. நான் அப்ப பிறகு கதைக்கிறன்" என்று கூறி வதனா ரெலிபோனைத் துண்டித்தாள்.

சுதாகரனின் தந்தையும் போன்பண்ணி விமானநிலையம் போனது பற்றி நடாவிடம் விசாரித்துக் கொண்டார்.

நடாவுக்கும் ராணிக்கும் ஒவ்வொரு மணித்துளியும் ஒரு யுகமாக இருந்தது. சில உறவினர்கள், நண்பர்கள் ரெலிபோன் பண்ணி விமானநிலையம் சென்று அமல- ாவை அனுப்பி விட்டு வந்தமை பற்றி விசாரித்துக் கொண்டார்கள். சிலர் அவர்களின் மனநிலையை அறிந்து அவர்களைத் தேற்றினார்கள்.

நடா ஹோலில் ரெலிபோனுக்கு அருகில் இருந்த சோபாவில் சாய்ந்தார். ராணியை உள்ளே போய்ப் படுக்குமாறு சொல்ல அவர் மறுத்து விட்டு அவரும் சோபாவில் சாய்ந்தார். முதல் நாள் நித்திரை சரியாய் கொள்ளாததால் ராணி சோபாவில் தூங்கி விட்டார். நடாவால் நித்திரை கொள்ள முடியவில்லை. அவரின் மனதில் அமலா வின் நினைவு அலைகள் புரண்டு கொண்டிருந்தன.

அமலா பிறந்த பொழுது பிரசவத்தில் ராணி மிகவும் கஸ்டப்பட்டிட்டா. ராணியின் உயிருக்கு ஆபத்து என்றும் பயந்தார்கள். "இதனால் எங்களுக்கு ஒரு பிள்ளை போதும்" என்ற முடிவோடு நடாவும், ராணியும் வாழ்ந்து விட்டார்கள்.

"முதலாம் பேர்த்டே தொடக்கம் அவளின் எல்லா பேர்த்டேக்கும் எப்படியாவது ஒரு கேக் வெட்டி கொண்டாடுவம். இனிமேல் தான் அவள் பேர்த்டேக்களையும் மிஸ் பண்ணப்போறம். அவள் சின்ன வயதில் இருந்து மிகவும் திறமையும், நல்ல பழக்கமும் கொண்டவளாய் இருந்தாள். அவள் எங்களுக்கு எந்த கஸ்டமும் தந்ததில்லை. "நடா தனக்குள்ளே எண்ணிக்கொண்டார்.

"அமலாவின் சாமத்திய வீடெல்லாம் நாங்கள் பெரிதாய் செய்ததில்லை. இப்ப அவள் கலியாணத்தையும் இங்கை நடத்த முடியவில்லையே" நடா புலம்பினார்.

"கண்ணுக்குள்ளேயே வைத்து வளர்த்த பிள்ளை கடல் கடந்து போகிறா. அவளை வடிவாய் வைத்திருப்பார்களா? அவள் மென்மையான மனம் கொண்டவள். கடும் சொல் தாங்கவே மாட்டாளே" என்றெல்லாம் ஒவ்வொரு விடயத்தையும் எண்ணிப் பயந்து கொண்டிருந்தார் நடா.

"எனக்கே அமலாவை விட்டுப் பிரிந்து இருப்பது சிரமமாக இருக்கும் போலுள்ளது. ராணி எப்படித்தான் தாங்கப் போறாளோ தெரியவில்லை" என்று தனக்குள்ளே நினைத்துக் கவலைப்பட்டார்.

(யாவும் கற்பனை) (தொடரும்…..)




- அகணி -

akanisuresh@gmail.com



MOHAN

HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan

D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems

HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210

At Middle Field, Scarborough, M1S 4Z4





# நுரையீரல் புற்றுநோய்


## LUNG CANCER

உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளும் சுவாசித்துக் கொண்டே உயிர் வாழ்கின்றன. மனித இனமும் அதற்கு விதிவிலக்கல்ல. கருப்பையில் உள்ள சிசு சுவாசித்துக் கொண்டே வாழ்கிறது. குழந்தை பிறந்ததும் எவ்வளவு அற்புதமாக சுவாசிப்பதாக அதற்குத்தான் தெரியும். அது தன் அழகான மூக்குத்துவாரத்தினூடாக விசையாக மூச்சுவிடத் தொடங்கி விடும். நாம் இறக்கும் வரைக்கும் இறுதி மூச்சு விடும் வரைக்கும் நுரையீரல் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது. மூச்சினை செயல்படுத்துவது தான் நுரையீரலின் முக்கிய பணியாகும்.

மார்புப் பகுதியில் வலது இடது என இரண்டாக பிரிந்து இருதயத்திற்கு அண்மையில் நுரையீல் அமைந்துள்ளது. தேன்கூடு அல்லது திராட்சை குலை போலக் காணப்படும். இவ் உறுப்பு காற்று நிரப்பப்பட்ட ஓர் உறுப்பாகும். மூச்சுக்குழல் (Treche) வழியாக உட்செல்லும் காற்று சிறிய இரண்டு குழாய்கள் (Bronchus) ஊடாக உள்ளே செல்கிறது. உள்பகுதியல் மேலும் நுண்குழாய்கள் (Bronchiles) பகுதியில் Alveoli எனப்படும் சிறிய காற்றுப்பைகள் காணப்படும். கோடிக் கணக்கில் இக்காற்றுப்பைகள் உள்ளன.

பிராணவாயுவை உள்ளே பெற்று கரியமில வாயுவாக வெளியேற்றுவதே இதன் முக்கிய செயற்பாடாகும். ஒரு நாளில் சராசரி 231,040 தடவை நாம் சுவாசிக்கின்றோம். ஒவ்வொரு சுவாசத்தின் போதும் மூன்று லீற்றருக்கு மேல் காற்று உள்ளெடுக்கப் படுகின்றது. இதற்கு ஏதாவது இடையூறு வந்தால் நாம் தவித்துப் போகிறோம். இந்த மூச்சுக்குத்தான் எவ்வளவு வலிமை!

நுரையீரலில் உருவாகும் நோய்கள் எண்ணற்றவை. புகைப்பதால் வருவது 'Chronic Obstructive Pulmonary Disease (COPD)' ஆகும். Alveoli எனப்படும் காற்றுப்பைகள் சேதமடைந்தால் வருவது "Emphysema" என்பதாகும். பரம்பரை ரீதியில் ஏற்படுவது ஆஸ்த்மா (Asthma) எனப்படும் இழுப்பு நோயாகும். பெரும் பாலான சிறுவர்களையும் முதியோர் களையும் இந்நோய் வருத்துகிறது. ஒவ்வாமை காரணமாக அதிகமாக இந்நோய் வருகின்றது. புகைப்பதால் வரும் இன்னொரு நோய் 'chronic bronchitis' ஆகும். வைரஸ் தொற்று நோய்களால் வருவது 'Pneumonia' ஆகும். நுரையீரல் இறுக்கமடைவதால் ஏற்படுவது 'Pulmonary fibrosis' எனலாம். மூச்சுவிடுவதில் ஏற்படும் பிரச்சனைகளால் 'Sarcoidosis' என்னும் நோய் ஏற்படுகின்றது. நுரையீரல் அழற்சியால் 'Pleural fibrosis', புகைப் பிடிப்பதால் நுரையீரல் புற்றுநோய் (Lung Cancer), பக்ரீரியாவால் காசநோய் (Tuber Closis), வைரஸ் கிருமிகளால் 'Influenza' எனப்படும் நோய், அஸ்பெஸ்டஸ் சுவாசிப்பு மூலம் 'Mesothelioma', உயர் இரத்த அழுத்தத்தால் Pulmonary Hypertension', இரத்தம் தடைப்படுவதால் 'Pulmonary Embolism', வைரஸ் மூலம் ஏற்படுவதால் 'Severe Acute Respiratory Syndrome (SARS)' என பல நோய்கள் நுரையீரலை தாக்குகின்றன. இறுதிவரை எம்முடன் போராடிக் கொண்டிருக்கும் உறுப்பு இதுவேயாகும்.




நுரையீரல் புற்றுநோய் மிகவும் ஆபத்தான-தொன்றாகும். ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் நுரையீரல் புற்று நோய்க்கு முக்கிய காரணி புகைப்பிடிப்பதே ஆகும். இங்கு பெண்களும் புகைப்பதால் எந்தவித வேறுபாடுமின்றி பல மரணங்கள் ஏற்படுகின்றன. குடல், புறெஸ்றேற், கருப்பை, மார்பக புற்றுநோய்களை விட புகைப்பதால் ஏற்படும் நுரையீரல் புற்று நோயே முதன்மை பெறுகிறது. எவ்வளவு சிகரெட்டுக்களை எவ்வளவு காலம் பாவித்துள்ளனர் என்பதனைப் பொறுத்தே இப்புற்றுநோய் ஏற்படுகின்றது. எவ்வளவு விரைவில் புகைப்பதனை விடுகிறார்களோ இப் பிரச்சனையும் பிற்போடப்படலாம்.

நுரையீரல் புற்றுநோய் ஆரம்பத்தில் குணம் குறிகளை காட்டுவதில்லை. நன்றாக நோய் முற்றிய பின்னரே சில அறிகுறிகள் தெரிய வரும். புதியதாக இருமல் ஏற்படும். ஆனால் அது மாறமாட்டாது. அது கடுமையான இருமலாக மாறும். இதனை புகை பிடிப்போர் இருமல் 'Smoker's cough' எனலாம். இருமும்போது சளியுடன் இரத்தம் வரும். சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும். நெஞ்சுவலியும், இழுப்பும் (Wheezing) இருக்கும். தொண்டைக்குள் கரகரப்பாக இருக்கும். உடற்பாரம் குறைவடைவதுடன் எலும்பு நோவும், தலையிடியும் ஏற்படலாம். நரம்பு பலவீனம், உடலில் விறைப்பு தன்மை, சமநிலைப் பிரச்சினை ஏற்படும்.

நுரையீரல் புற்று நோயை இரு பிரதான பிரிவுகளாக வகுத்துள்ளனர். முதலாவது வகை சிறிய கல் நுரையீரல் புற்றுநோய் எனப்படும். இந்த வகை புற்றுநோய் மிகவும் கடுமையாக புகைபிடிப்போருக்கே ஏற்படுகிறது. புகைபிடிக்காதோர் மத்தியில் இது குறைவாகும்.

அடுத்த பிரிவு சிறிய செல் அற்ற நுரையீரல் புற்றுநோய் ஆகும். இது வெவ்வேறு காரணிகளால் ஏற்படும். இந்த பிரிவில் ஸ்குவமோஸ் செல் கர்சினோமா (Squamous cell carcinoma) அடினோ கர்சினோமா (Adeno carcinoma) பெரிய கல கர்சினோமா (Large cell carcinoma) என பல பிரிவுகள் உள.

பொதுவாக நுரையீரல் புற்றுநோய்க்கு பல ஆபத்தான காரணிகள் (Risk factors) உள. முதலாவது காரணி புகை பிடிப்ப தாகும். உண்மையில் இதனை மட்டும் கட்டுப்படுத்தலாம். ஆனால், ஏனைய வற்றினை கட்டுப்படுத்த முடியாது. சாதாரணமாக ஒருவர் 48 மணி நேரம் புகைபிடிப்பதனை நிறுத்தினாலே அதன் பலனை காண முடியும். சுவாசிப்பது இலகுவாகும்.

72 மணிநேரம் புகை பிடிப்பதனை நிறுத்தினால் மூச்சுக்குழாய் நல்ல ஓய்வாகிறது. இரத்தம் அடைப்பது குறைகிறது. 2 கிழமை முதல் 3 மாதங்கள் புகைபிடிப்பதனை நிறுத்தினால் நுரையீரல் திறன் 30 வீதம் கூடுகிறது. இதனால் உடல் பயிற்சி செய்வது இலகுவாகிறது. 1-9 மாதங்கள் புகைபிடிப்பதனை விட்டு விட்டால் இருமல், இழுப்பு, சைனஸ் எல்லாம் மாறத் தொடங்குகிறது. மொத்தமான உடற்பலம் கூடுகிறது. நுரையீரல் துப்பரவு பெறுகிறது. அங்குள்ள சளித்தன்மை குறைகிறது. தொற்று நோய் குறைகிறது. ஒருவருடம் புகைபிடிக்காது விட்டால் இதய நோய் பாதியாக குறைகிறது. 2 வருடத்திற்கு மாரடைப்பு நோய் தள்ளிப் போகிறது. 5 வருடங்கள் புகை பிடிக்காது விட்டால் நுரையீரல் புற்று நோய் சரி பாதியாக குறைந்து விடலாம். இதிலிருந்து பார்க்கும்போது புகை பிடிப்பதனை நிறுத்தும் எவருக்கும் இந்நோயிலிருந்து தப்பிக்க முடிகிறது.

அடுத்துள்ள காரணி 'Radon gas' மூலம் ஏற்படுவதாகும். யுரேனியம் உள்ள மண் பகுதிகளில் சுவாசிப்பதால் ஏற்படும் புற்று நோய் இதுவாகும். கட்டிடங்கள் வீடுகளில் கூட கீழ்பகுதியில் காணப்படலாம். வீடு அபிவிருத்திக்காக வாங்கப்படும் பொருட் கள் சிலவற்றில் ஆர்சனிக், குரோமியம், நிக்கல் போன்றவை இருக்கலாம். இதனை சுவாசிப்பதாலும் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புண்டு.


ஒருவரின் குடும்ப வரலாறு கூட புற்று நோய்க்கு காரணமாகலாம். பெற்றோர், சகோதரங்கள் மூலமும் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புணடு. இவ்வாறான புற்று நோய் ஏனைய காரணங்களுடன் ஒப்பிடும்போது குறைவாகும். எனினும் அதுவும் ஒரு துணைக்காரணியாகும். புகை பிடிக்காதவர் களுக்கு கூட புற்றுநோய் வருவதற்கு காரணம் புகை பிடிப்பவர்களுடன் பழகுவதால் அல்லது சிகரட் புகையை சுவாசிப்பதால் ஏற்படுவதாகும். சிகரட்டில் நிக்கொட்டின் உட்பட பல ரசாயன பொருட்கள் உள. இதனை நீண்டகாலம் சுவாசிப்பவர்களுக்கும் இப்பிரச்சினை ஏற்பட வாய்ப்புண்டு. உட்செல்லும் புகையானது நுரையீரல் கலங்களை சேதமாக்கி விடுகின்றது. ஆரம்பத்தில் நுரையீரல் அதனை சரி செய்தாலும் நாளடைவில் அதனால் ஒன்றும் செய்ய முடியாமல் போய் விடுகிறது. படிப்படியாக கலங்கள் சேதமுற்று புற்றுநோய் ஏற்பட்டு விடுகின்றது.


புற்றுநோய் ஏற்படும் போது நுரையீரலை சுற்றி திரவம் ஏற்பட்டு விடுகிறது. இது நுரையீரலை சற்று கடினமாக்கி விடுகின் றது. இதனால் நுரையீரல் விரிவடைய கஷ்டப்படுகிறது. இந்த நிலையில் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம்.சிலருக்கு சுவாசக் குழாயில் இரத்தக் கசிவு ஏற்படலாம். இதனை 'Hemoptysis' எனலாம். புற்று நோய்க் கலங்கள் ஏனைய பகுதிகளுக்கும் பரவினால் எலும்பு நோவு ஏற்படும். சிலருக்கு மார்புப் பகுதியில்



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 32ஆம் பக்கம்...


**YOGA - MEDITATION CLASSESS**
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்
**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# வாங்கிய வீடுகளில் பாதிப்புகளை உருவாக்கும் முன்னைய உரிமையாளரின் தவறுகள்!

## தீர்வினை காட்டும் நீதிமன்ற தீர்ப்பு!

## கனடிய தகவல் தொடர் 243

வீடுகள் என்ற மிகபெரிய சொத்துக்களை வைத்திருக்கும் உரிமையாளர்கள் எதிர் கொள்ளும் பாதிப்புகள், சட்டப்பிரச்சினை கள், நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகள், இவை யாவற்றிலும் இருந்து நாம் படிக்கும் பாடங்கள் என்பன மிக பெரிய பட்டறிவு பெட்டகம் என்பதில் நம்மவர்கள் எவருக்கும் சந்தேகம் இருக்காது.

றியல் எஸ்ரேட் வழக்குகள், பிரச்சினைகள் பலவற்றின் நீதிமன்ற வழக்குகளில் சமூகமளிக்கும் ரொறொன்ரோ நகரின் பிரபல்யமான வக்கீல் திரு. போப் ஆரண் (Mr. Bob Aaron) அவர்கள் தமது ஒவ்வொரு அனுபவங்களையும் தொகுத்து 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் எழுதிவரும் கட்டுரைகள் மிக விபரமானவை. தமிழில் நான் வரையும் கட்டுரைகளுக்கு சட்டத்துறையில் அறிவியல், அனுபவங்கள் நிறைந்த அவரது கட்டுரைக்களே உசாத்துணையாக அமைகிறது.

அண்மையில் முன்னைய உரிமையாளரின் தவறுகளினால் பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளரின் அனுபவத்தினை பின்வரு மாறு விபரிக்கின்றார்.

ஒரு நீதிமன்ற வழக்கினை ஆதாரமாக காட்டி எழுதப்பட்ட கட்டுரைத் தொடரில் வீடு வாங்கிய உரிமையாளர்கள் எதிர் கொள்ளும் பொதுவான பிரச்சினைகள், சட்ட சிக்கல்கள், நீதிமன்ற முடிவுகள், அவதானமாக இருக்க வேண்டிய விடயங் கள், அறிவுரைகள் என பல தகவல்களைத் தமது கட்டுரையில் வலியுறுத்துகின்றார்.

இந்த வழக்கின் சம்பவம் இதுதான்!
ஒரு தம்பதி ஏற்கனவே சற்று புனரமைக்கப் பட்ட வீடு ஒன்றினை சில வருடங்களின் முன்பு ரொறொன்ரோவில் வாங்கியிருந்தனர் வாங்கிய வீட்டினை சட்ட ரீதியாக பதியும்போது அவர்களின் வக்கீல் 'உரிமை காப்புறுதி' (Title Insurance) என்னும் உரிமைகள் தொடர்பான பாதுகாப்பினை வழங்கும் காப்புறுதி ஒப்பந்தத்தினையும் செய்து கொடுத்திருந்தார். வீடு வாங்கி சில வருடங்களின் பின்பே வாங்கிய வீட்டின் பிரச்சினைகள் அவர்களுக்கு தெரியத் தொடங்கியது.

இரண்டாவது மாடியின் பாரம் தாங்கும் சுவர் புனரமைப்பின் போது நகரசபையின் அங்கீகாரமில்லாது அகற்றப்பட்டதால் அது ஆட்டம் காண தொடங்கி வீட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை உருவாக்கு வது கண்டு பிடிக்கப்பட்டது. (Load Bearing walls had been removed) இங்கு வீடு வாங்கும்போது எங்கு தவறு நடந்துள்ளது? அதனையும் வக்கீல் திரு. போப் ஆரண் பின்வருமாறு தெளிவு பண்ணுகின்றார்.


• முறையாக அனுமதிபத்திரம் பெற்ற கம்பனியின் பரிசோதனையோடு அவர்கள் அந்த வீட்டினை வாங்கியிருக்க வேண்டும். (Buy with home Inspection report)

• முன்னாள் உரிமையாளரினால் புனரமைக் கப்பட்ட வேலைகள் நகரசபையின் அங்கீகாரத்துடன் செய்யப்பட்டதா? என்பது வீடு வாங்கும்போது பரிசீலனை செய்திருக்க வேண்டும்.

வீடுகள் பரிசோதனை செய்யும் கம்பனியின் தவறுகள், அல்லது நகரசபையின் அங்கீகாரங்களில் தவறுகள் நடந்தால் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து அவர்களின் காப்புறுதி திட்டங்களிலிருந்து நட்டஈடு கோரியிருக்கலாம். ஆனால் இவர்கள் அவசரமாக பாதுகாப்பு கருதி திருத்த வேலைகளை சொந்த செலவில் முடித்துவிட்டு செலவழித்த பணத்தினை 'உரிமை காப்புறுதி' மூலம் மீளப்பெற முயற்சித்தார்கள்.
இந்த குறிப்பிட்ட பாதிப்பில் கம்பனி மறுப்புத்தெரிவித்ததால் அது நீதிமன்றத்தின் தீர்ப்பில் வழங்கவேண்டும்.

**'உரிமை காப்புறுதி'** (Title Insurance) **எப்படி ஒரு வீடு என்ற சொத்தினை பாதுகாக்கின்றது?**

'ஒன்ராரியோ நிதியியல் சேவைகள் சபை' (Financial Services Commission of Ontario) உரிமைக் காப்புறுதி தொடர்பான



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

CUSTOM BUILD HOME
Build Your Personalized Custom Build Home
Starting From $139 / sq ft
Quality ! Price !! Peace of Mind !!!



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு
அனுபவம் நிறைந்த, நாணயமான ,
தரமான கட்டிட நிபுணர்கள்
Industrial Buildings from $85 / sq ft
TAMB CANADA (647) 877-8262 (TAMB)

# BASEMENT RENT

**VICTORIA PARK & LAWRENCE**
2 bedroom walk-out bsmt apt. for rent. Cable television, internet, parking. Close to TTC, Wexford Swimming Pool & Wexford High school, Temples & Churches. Avail. immediately. தொடர்புகளுக்கு: **416.288.9575 / 647.866.9575**

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Single person or couple preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: **647.774.0884**

**VICTORIA PARK & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to Mall, School, ect. Avail. March 01. 2016. No Pet, No Smoking. Avail. immediately. தொடர்புகளுக்கு: **416.443.1374 / 416.431.6507**

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet, utilities. Close all facilities. Single person only men. Avail. March 01. 2016. தொடர்புகளுக்கு: **416.554.0759 (after 5 Pm)**

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom new walkout bsmt for rent. Parking, laundry. Close to TTC, New spiceland & all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: **647.855.0339**

**FINCH & PHARMACY**
2 Bedroom newly renovated walk-out bsmt for rent. Kitchen, living room, laundry, parking. Close to hospital, schools, 3 minutes walk to TTC, SUBWAY. தொடர்புகளுக்கு: **416.491.2723 / 647.330.7221 / 416.457.8206**

**PHARMACY & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, unlimited internet, utilities include. 5 minutes walk to TTC. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: **416.201.1222**

**KENNEDY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. No smoking & No drink. Avail. immediately. தொடர்புகளுக்கு: **416.285.7014/ 416.454.3931**

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet, utilities. Close to all facilities. Avail. immediately. **416.754.2927/647.919.2927**

**MORNINGSIDE & MCNICOLL**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry cable. Internet. utilities. Close to TTC, school, party hall, grocery stores. Family preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: **647.588.7865**

**TAPSCOTT & FINCH**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet, kitchen. Close to TTC 1 min. walk & all facilities. Avail. March 01, 2016. Couple preferred. No smoking, no pets. தொடர்புகளுக்கு: **416.837.1860**

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt apartment for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately. Family / couples preferred. தொடர்புகளுக்கு: **416.897.4839**

**MIDDLEFIELD & STEELES**
1 Bedroom bsmt apartment for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: **416.844.0565/416.847.5014**

**MEADOWVALE & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, Mall, Scarborough University. பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: **647.344.0585**

**BRIMLEY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. **416.543.5068 / 647.523.6390**

**KENNEDY & FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, large living room with windows above ground, Sep. laundry. Close to TTC, school. No pets & No smoking. Avail. immediately. Couple or small family preferred. **416.574.5663 / 416.332.3781**

**MEADOWVALE & SHEPPARD**
1 Bedroom bsmt Apt. for rent. Sept. entrance. Parking, laundry, cable. Avail. immediately. Close to bus, school, stores. Couple preferred. தொடர்புகளுக்கு: **647.704.3731**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom bsmt Apt. for rent. Parking. Close to TTC, school & 10 Minutes walk to Era super market. Avail. immediately. Family preferred. **416.792.9410 / 647.898.1521**

**WARDEN & HIGHWAY 401**
1 Bedroom bsmt Apt. for rent. Parking, Living room, laundry, internet. Avail. immediately. Close to bus, school, Hwy 401. Single or Students girls preferred. **416.291.0117 / 647.657.8826**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom for rent in 2 bedroom bsmt. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Ladies preferred. Avail. March 01, 2016. தொடர்புகளுக்கு: **416.505.4449**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: **416.283.5448 (After 5:00pm)**

**14TH AVE. & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to School ,TTC. Avail. immediately. No Smoking & No Pets. **416.289.6076/416.558.4929**

**VICTORIA PARK & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, internet, cable, utilities. Light cooking. No smoke. No alcohol. Ladies preferred. Close to TTC, parkway mall. Rent $500. Avail. immediately. தொடர்புகளுக்கு: **416.420.9394**

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt apartment for rent. தொடர்புகளுக்கு: **416.917.0557**

**MARKHAM & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to School ,plaza. Avail. immediately. Family preferred. **416.887.3707 / 416.837.4984**

**WARDEN & MCNICOLL**
1& 2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry,cable,internet. Close to TTC & all facilities. Avail. immediately. Family preferred. தொடர்புகளுக்கு: **647.219.7223**

**WARDEN & HWY 401**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking. 24 hrs TTC, Close to 401, school and all facilities. Avail. immediately. Family preferred. தொடர்புகளுக்கு: **416.386.2297**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Sep. laundry, Parking. Close to TTC & YRT, school, stores. Avail. March 01, 2016. **416. 268.1739 / 647.716.1131**

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு: **647.893.1449**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, utilities. Family, Couple, & students Preferred. No Pets. Close to TTC, walmart, school, shopping. Avail.immediately. **647.761.5599 / 905.479.5599**

எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலம்தொகுத் தோனே போக்கறு பனுவல்"

என்னும் பாவினாலும் தமிழ் பற்றித் தெளிவாக எடுத்துக் கையாளும் பாங்கு தமிழ் மொழி திரிபடையாத செம்மை சான்றதாக அமைகின்றது என்பது வெளிப்படை. இவ்விதமே "தமிழென் கிளவியும்" "செந்தமிழ் நிலத்து", "செந்தமிழ் சேர்ந்த" என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளமையை நோக்கும் போது தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துக்காட்டுவதற்காகப் பயன்படுத்தியுள்ளமை தெளிவாகி ன்றது. இன்று இதன்வழி தமிழுக்கான அடைமொழிகள் ஏராளமாகப் பாவனைக்கு வந்துள்ளன எனின் அதற்கு தொல்காப்பியரும் பனம்பாரனாரும் அத்திவாரம் இட்டு வளர்த்தார்கள் என்று உறுதியாகக் கூறலாம். தமிழ் என்பது பல்வேறு அடைமொழிகளைக் கொண்டதாக இருப்பதற்கு அதன் தனித்தன்மையே காரணமாகும். மொழியியல் பேராசிரியர் செ.வை. சண்முகசுந்தரம் அவர்கள் பின்வரு மாறு குறிப்பிடுகின்றார். "செம்மை என்னும் அடைச் சொல்லைப் பெற்று வரும் செந்தமிழ் என்னும் சொல் உணர்வு, நிலையில் இலக்கண வரம்பை வற்புறுத்துவ தாகவும் செயல் நிலையில் செம்மொழி ஆக்கத்தை வற்புறுத்துவதாகவும் மதிப்பீட்டு நிலையில் இலக்கணம் வற்புறுத்தாவிடில் கிளைமொழி தோன்றிப் புதுமொழியாக மாறும்" இதன்வழி தமிழ் எந்தவித மாற்றமும் காணாத தனித்துவமான மொழி என்பதனை உணர முடிகின்றது.

"ஓர் இனத்தை வீழ்த்த வேண்டுமானால் அவர்தம் மொழியை வீழ்த்தவேண்டும்" என்னும் முதுமொழிக்கேற்ப உலக வரலாற்றில் பல்வேறு இனங்கள் எழுச்சியுற்ற காலங்களில் சில இனங்களை சிதைத்தும் அழித்தும் வந்துள்ளன. உலகில் தோன்றிய மொழிகளில் பெருந்தொகையானவை அழிந்துபோயுள்ளன. இதற்கு வேற்று இனத்தாக்கமே காரணமாக அமைந்துள்ளன. ஓர் இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு ஒன்று மொழி மற்றது மதம். இந்த இரு கருவிகளுமே உலக வரலாற்றில் பல்வேறு போர்களுக்கும் அழிவிற்கும் காரணமாக அமைந்துள்ளன. அதற்கு எமது தமிழினமும் விதி விலக்கல்ல என்பதற்கேற்ப பல்வேற சந்தர்ப்பங்களில் தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் அழிப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. அவற்றிற்கு மேலாக எமது தமிழர்கள் வாழ்ந்த இடங்கள் கடல்கோள்களினால் அழிந்துபோனதும் காரணமாகின்றது. சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த எங்கள் இனத்தின் அழிவு இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட அனர்த்தங்களாலும் போர்களாலும் இடம்பெற்றுள்ளமையை அறியமுடிகின்றது. தமிழ் இனத்தை வீழ்த்த பல்வேறு காலகட்டங்களில் இந்திய உபகண்டத்தினுள் ஊடுருவிய ஆரியரும், முகமதியரும் பெரும் பிரயத்தனங்களைச் செய்தனர். இந்திப் பெருநிலப்பரப்பில் வடக்கைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்தனர் எனினும் தெற்கில் அவர்களின் உபாயம் பலிக்காததைக் கண்டு மாற்றுவழியில் எமது பண்பாட்டையும் மொழியையும் சிதைக்க எண்ணினர். தமிழ் மொழியில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். இதனை நன்கு உணர்ந்து தொல்காப்பியர் செம்மை சான்ற மொழிக்கு வரம்பிட நினைத்தார் அதன் வழி எமது மொழி தமிழ் தான் என்பது இன்றுவரை நிலைத்திடச் செய்த பெருமைக்கு உரியவர் அவரே. வடக்கிருந்து வந்தவர்களின் மொழி எமது மொழிக்குள் ஊடுருவதைத் தடுத்தற்பொருட்டு

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ,
எழுத்தொடு புணர்ந்த சொலாகும்மே" (தொல்.சொல். 401)
எனவும்
மொழி பெயர்த்து அதர் பட யாத்தல்.
தொல்.பொரு. மரபு 98)

எனவும் இலக்கணம் வகுத்து தமிழ் மொழியின் இனிய இயல்பினை மாற்றமின்றிப் பயன்படவும் நிலைபெறவும் வைத்தார்.

எமது அன்னை மொழியாம் தமிழின் தோற்றம் மிகத் தொன்மையானது. கடற்கோளால் முதற்சங்கம் தோன்றிய குமரிக்கண்டமும், இடைச்சங்கம் தோன்றிய கபாடபுரமும், கடைச்சங்கம் தோன்றிய மதுரையும் அழிந்தன என ஆய்வாளர்கள் குறிப்பிடுவதனை கேள்விப்படுகின்றோம். இந்த அழிவுகளில் இருந்தும் தப்பிப்பிழைத்த இனம் எங்கள் தமிழ் இனம். அந்தத் தமிழினத்தின் பெருமை பேசும் தகைமையைத் தருவது அந்த இனத்தின் மொழியேயாகும். மொழியில்லாமல் இனம் இல்லை. மொழியழிந்தால் இனம் அழிந்துவிடும்.

இன்று நாம் தமிழர் என்று கூறிக்கொண்டு தமிழ் தெரியாமல் வாழும் நிலை ஏற்பட்டுவருகின்றது. புலம்பெயர்ந்த மண்ணில் மட்டுமன்றி தாயகத்திலும் இன்று தமிழில் பேச வெட்கப்படும் நிலைமையினைக் காண்கின்றோம். வேற்று மொழிகளைப் பேசுவது பெருமை என நினைக்கின்றோம். தமிழ் உணர்வே இன்றி சடங்களாக வாழ்ந்துவருகின்றோம். தமிழை வெறும் வயிற்றை நிரப்புவதற்காக மட்டும் பயன்படுத்தும் நிலைமாறி இது எங்கள் தாய்மொழி, எமது உணர்வோடு ஒட்டிய மொழி என்னும் உண்மை உணர்வோடு செயற்பட எம்மை ஊக்குவிப்பதற்கான தொன்மைசார்ந்த நூல் ஒன்று உளது என்றால் அது தொல்காப்பியம்தான் என்று துணிந்து கூறமுடியும். எனவே தமிழர்களாகிய நாம் தொல்காப்பியத்தின் தொன்மை, அதன் பொருண்மை என்பனவற்றை உணர்ந்துகொள்ளத் தலைப்படவேண்டும் என்னும் நோக்கோடு கையேடு போன்ற ஒரு சிறு நூலை ஆக்கியுள்ளது உலகத் தொல்காப்பிய மன்றத்தின் கனடாக் கிளை. இந்த நூலைப் பெற்று தொல்காப்பியத்தின் அடிப்படை உண்மைகளைத் தெளிந்து கொள்ள வேண்டும் என்பதே தொல்காப்பிய மன்றத்தின் நோக்கமும் செயற்பாடும் ஆகும்.

**த. சிவபாலு,** B.Ed.Hons, M.A.

பேராசிரியர் சி. இலக்குவனார் அவர்கள் தொல்காப்பியம் பற்றிக் குறிப்பிடுவதனை இங்கு தருவது பொருத்தமாக அமையும். "இன்று நமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் நூல்களுள் தொல்காப்பியமே தமிழர் வாழ்வின் பலதுறை பற்றி அறிவதற்குத் துணை புரிவதாகும். இதனைத் தமிழ்ப் புலவர் மட்டுமே தேர்வு கருதிக் கற்று வருகின்றனர். இ∴து இலக்கண நூல்தான் என்றாலும், ஏனைய மொழிகளிலுள்ள இலக்கண நூல் போன்றதன்று. அண்மை நூற்றாண்டில் தோன்றி வளர்ந்து வரும் மொழியாராய்ச்சியும், இலக்கிய ஆராய்ச்சியும், பண்பாட்டுக் கலைகளாம் உயிரியல், உளவி யல், வாழ்வியல் முதலியனவும் தன்னகத்தே கொண்டு இலங்குகின்றது." எனக்குறிப்பிடுவதனை ஒவ்வொரு தமிழரும் அறிந்துகொண்டு தொல்காப்பியத்தை ஓரளவிற்கா வது அறிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும் என்பதே தொல்காப்பிய மன்றத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.




# EDUCATION

## Review Questions16-04

### ➢ CHEMISTRY 12 & IB

(i)Organic synthesis

A. Benzene → toluene →benzoic acid

B. 1-propanol → propanone

C. ethanal → ethylethanoate

(ii) What are the major products in each of the following if $CH_3CHBrCH_3$ reacts with

(a) EtOH (b) EtONa/ EtOH

### ➢ BIOLOGY 12

(I) Name the monosaccharide units and the bonds present in the following disaccharides.
(i) sucrose (ii) lactose (iii) maltose

(II) What are polysaccharides? Compare the structures of starch, glycogen and cellulose.

(III) What are steroids? Give examples and their importance.

(IV) Briefly describe the three dimensional shapes of polypeptides and protein.

### ➢ ADVANCED FUNCTIONS 12

Find the solution,

(a) $|x^2 - x - 3| = -x + 3$

(b) $|3x + 8| = |2x - 3|$

## Answer Key : 16-03

### ➢ CHEMISTRY IB

$Ca^{2+} + XO_3^{2-} \rightarrow CaXO_{3(s)}$

n $(ca^{2+})$ = 0.78 x 0.025 = 0.0195 mol

Assume that molar mass of X = $x$


Molar mass of the substance,

= (40.08 + $x$ + 3 X 15.99)

Mass = (88+ $x$ x)( 0.0195)= 1.96;


$x$ = 12, ie X = carbon

(iv)



3-(2,3-dimethylbutyl)-4-methylphenol

### ➢ PHYSICS 12




(a) T= mg = 500×9.8N

(b) (i) pulling back, (h=20-20cos 30)= 2.68m

Δ Eg =Δ mgh=mg x2.68 J

= $\Delta E_k$ = ½ $mv^2$; V=7.3m/s

(ii) Tension = mg + $mv^2$/r = 6.2 ×$10^3$N

### ➢ CALCULUS & VECTORS 12

(i) $\lim_{x\to 0} \frac{ax^2+bx+c}{cx^2+bx+a}$ ans: c/a

(ii) $\lim_{h\to -4} \left(\frac{\frac{1}{4}+\frac{1}{h}}{4+h}\right)$ ans: -1/16

(ii) $\lim_{x\to 2} \frac{x+2}{x^3+8}$ ans: 3/5

(iv) $\lim_{x\to 1} \frac{x^6-1}{x^{10}-1}$ ans: 1/12

(i) $\sqrt{\frac{1+x^3}{1-x^3}}$ ans: $\frac{3x^2}{(1+x^3)^{\frac{1}{2}}(1-x^3)^{\frac{1}{2}}}$

(ii) $\sqrt{1+x^2}.\,sin^3\sqrt{x}$ ans:

$\sqrt{1+x^2}\,3\sin^2\sqrt{x}.\cos\sqrt{x}\,\frac{1}{2\sqrt{x}} + \sin^3\sqrt{x}.\frac{1}{\sqrt{1+x^2}}.2x$

### ➢ BIOLOGY IB

The stroke volume (volume of blood in a single cardiac cycle) increases when the physical fitness increases. Therefore, with the lower heart rate (no cycles/ minute) heart can deliver the required amount of to tissues.

During exercise body requires more supply of oxygen. This will lead to increases breathing rate and, heart rate and metabolism to speed up.

Answer key
16-04 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE

# வாங்கிய...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

‘தகவல் கையேடு’ (Information Brochure) ஒன்றினை தெளிவான விபரங்களுடன் வெளியிட்டிருந்தனர்.

• வீடு என்ற சொத்தின் உரிமை என்பது தங்களுக்கு தெரியாமல் என்றோ ஒரு நாள் மேற்கொள்ளப்பட்ட பதிவு இன்னொருவரின் பெயரிலும் இருக்கலாம். (Unknown title defects)

• ஒருவர் வீட்டினை வாங்குவதற்கு முன்னிருந்த வீட்டின் உரிமையாளர் மின்சாரச்செலவுகள், வரி, அடமானக்கடன், பராமரிக்கும் செலவுகள் என ஏதாவது ஒன்றினை கொடுத்து தீர்க்காது விட்டிருந் தால் அது இன்றைய உரிமையாளரின் பொறுப்பில் வந்து விழலாம். (Existing liens against the property’s title)

• அயலவர்கள் எல்லையினை அதிகரித்து அங்கு தொல்லைகள் தரலாம். (Encroachment Issues)

• ஒருவரின் சொந்த ஆவணங்களை திருடி இன்னொருவர் செய்யும் மோசடிகள் என்பது அவரின் வீடு என்ற உடமையினை பாதிக்கலாம். (Title Fraud)

• பதிவுகளில் உள்ள காணியின் அளவுகளில் மோசடிகளும் ஏற்படலாம். (Erros in Surveys and Public Record)

மேற்குறிப்பிட்ட பல்வேறுவகைப்பட்ட ஆபத்துகளுக்கு வீடு வாங்கும்போது தங்கள் வக்கீலின் அலுவலகத்தினால் செய்து கொள்ளப்படும் ‘உரிமை காப்புறுதி’ பாதுகாப்பினை தருகின்றது. அதேநேரம் எவ்வகையான ஆபத்துகளுக்கு ‘உரிமை காப்புறுதி’ கைகொடுக்காது என்பதும் மாகாண அரசு இவை தொடர்பாக வெளியிட்ட கையேட்டில் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

வீட்டு உரிமைகளை மாற்றிக்கொடுத்து பதிவு செய்யும் சகல வழக்கறிஞர்களும் ஆதன உரிமைகளை மாற்றிப் பதிவு செய்யும்போது இக்காப்புறுதி ஒப்பந்தமும் மேலதிக கட்டணத்திற்கு செய்து கொடுப்பது வழமையாகும். ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் அவர்களின் வக்கீலை அணுகும்போது அவர் உடனடியாக உரிமைக் காப்புறுதி ஒப்பந்தம் செய்து கொண்ட கம்பனிக்கு மனு செய்து நட்டஈட்டினை பெற்றுக்கொள்ளும் ஒழுங்குகளை செய்து தருவார். இதே உரிமைக் காப்புறுதியே இவர்களின் பிரச்சினையிலும் நட்டஈடு வழங்கவேண்டும் என்று ஒரு தீர்ப்பினை வழங்கி ஒரு சட்ட சரத்தினை உருவாக்கியுள்ளது.

# தெய்வீக...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

தன்னை அணைத்து அருளியவாறு ஆர் பெறுவார் என்று பெருமிதம் கொள்கின்றார். இறுதிக் காலத்தில் இறை பரம்பொருளும் ஆன்மாவும் தாள்தலை தாடலை என்று ஒன்றாவது போல்கலந்து பேரானந்தத்தில் திளைக்கும்.

வான் கெட்டு மாருதம் மாய்ந்து
அழல் நீர் மண் கெடினும்
தான் கெட்டல் இன்றி சலிப்பு
அறியாத் தன்மையானுக்கு
ஊன் கெட்டு உயிர் கெட்டு
உணர்வு கெட்டு உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித்
தெள்ளோணம் கெட்டாமோ!



# யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்


தொடர்புகளுக்கு: 416.299.8361

## MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.

Contact: 647 340 9490/ 416 732 2228



# தெய்வீக காதல்

## காதலர் தினம் பெப்ரவரி 14 ஞாயிறு

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம்மை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் பாவித்து பதிகம் பாடியுள்ளனர். இது நாயக நாயகி பாவம் எனப்படும். இறைவனிடம் அன்பு, காதல் கொண்ட ஆன்மா அவனை தேடி, நாடி, ஊடி, கூடி இன்புறுபவையாக அமைந்தவை இப்பாடல்கள்.

முதலில் ஞானசம்பந்தர் தம்மை ஒரு பெண்ணாக எண்ணிக்கொண்டு சீழ்காழியில் கோயில் கொண்டிருக்கும் ஈசனின் நாமத்தை இயம்பும்படி ஒரு கிளியிடம் கேட்கின்றார். பேசும் திறமையுடைய கிளியிடம் இறைவனின் திருநாமத்தை தன்முன் ஒருமுறையேனும் பேசும்படி இறைஞ்சுகின்றார். காதலனை சந்திக்க முடியாத போது அவனது நாமத்தைக் கேட்டாவது உள்ளத் தினவு சிறிதளவாவது ஆறும் என்ற எதிர்பார்ப்பினால் இக் கோரிக்கை விடப்பட்ட தெனலாம்.

சிறையாரும் மடக்கிளியே! இங்கே வா தேனொடு பால்
முறையாலே உனத்தருவன். மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடல் தோணிபுரத்து ஈசன் துளங்கும் இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கு ஒருகால் பேசாயே!

காதலன் காதலிக்கு தூது விடுவது வழக்கம். சுந்தர மூர்த்தி நாயனாரும் தூதுவகையைச் சேர்ந்த தேவாரங்களைப் பாடியுள்ளார். திருவாரூரில் கோயில் கொண்ட ஈசன் மீது பெருங்காதல் கொண்டவர் அவர். ஏதோ காரணத்தால் அவர் திரு ஒற்றியூரில் சிலகாலம் தங்க வேண்டி ஏற்பட்டது. இக்கால இடைவெளியினால் காதலின் வேகம் மிகுதியாக ஆரூரருக்கு பல பறவைகளை தூது அனுப்பி பதிகம் பாடினார். அதில் ஒரு பாடல் பின்வருமாறு பறக்கும் எம் கிளிகள் பாடும் பூவை காள் அறக் கண் என்னைத் தரும் அடிகள் ஆரூரரை மறக்க கில்லாமையும் வளைகள் நில்லாமையும் உறக்க மில்லாமையும் உணர்த்த வல்லீர்களே!

இத்தேவாரத்தில் பறக்கும் அத்தனை உயிரனைத்தையும் விளித்து ஆரூரருக்கு தூதாக அனுப்புவதாக கூறப்பட்டுள்ளது.

காதலில் ஈடுபட்டிருக்கும் பெண் காதலனையே எந்த நேரமும் நினைவில் நிறுத்தி நிற்பாள் என்பதற்கு நாவரசரின் திருத்தாண்டகம் சான்றாக அமைகின்றது. மனத்திரையிலிருந்து காதலனை அகற்றமுடியாத காதலியின் நிலை இதுவாகும்.



முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
 மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
 பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
 அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
 தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

காதலி காதலனின் பல பெயர்களை கிளிக்கு கற்பித்திருந்தாள். காதலர் பிரிந்திருக்கும் காலத்தில் காதலன் மீது அவளுக்கு சினம் ஏற்பட்ட பொழுது கிளி அவனது திருநாமங்களை திருப்பித் திருப்பி சொல்லத் தொடங்கியது. அப்பொழுது காதலி அதற்கு உணவே கொடுக்காமல் தண்டிப்பாள். பசியின் வேதனையால் கிளி 'உலகளந்தான்' என்று உரக்கக்கூவி கோதையின் துயரை மேலும் அதிகரிக்கும். இதையெல்லாம் சுற்றியுள்ள பெற்றோர் உறவினரிடம் சொல்லி முறையிடுவாள் கோதை. இனிமேல் என் துயரத்தை தீர்க்க விரும்புவீர்களாயின் என்னை கண்ணன் வாழும் துவாரகாபுரியில் கொண்டு போய் விட்டு விடுங்கள் என்று நெஞ்சம் புலம்புவாள். உணர்ச்சியின் சிகரத்தை எட்டுவன கோதையின் பாடல்கள்.
இதுதான் நாச்சியார் திருமொழியில் ஒரு பாசுரம்

கூட்டிலிருந்து கிளி எப்போதும் கோவிந்தா, கோவிந்தா என்று அழைக்கும். ஊட்டுக் கொடுக்காமல் செறுப்பனாகில் உலகளந்தான் என்று உயரக் கூவும் நாட்டில் தலைப்பழி எய்தி உங்கள் நன்மை இழந்து தலையிடாதே சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும் துவாரபதிக்கு என்னை உய்த்திடுமின்.



நா. க. சிவராமலிங்கம்

குருந்தமர நிழலில் குருவாய் காட்சி தந்து ஆட்கொண்டு அருள் பாலித்த இறைவனுக்காக தனது ஊன் கெட்டது, உயிர் கெட்டது, உணர்ச்சி கெட்டது, உள்ளம் கெட்டது, நான் என்ற அகங்காரம் கெட்டது என்று பாடியுள்ளார் மணிவாசகர். இந்த இன்ப அன்பு நிலையில் இறைவன்

தொடர்ச்சி 34ஆம் பக்கம்


# தமிழ் பூங்காவின் தமிழ் மரபுத்திங்கள்

தமிழ் பூங்கா மாணவர்களால் தமிழ்பூங்கா தமிழ் பள்ளியில் 05-02-2016 அன்று கொண்டாடப்பட்ட தமிழர் மரபுத்திங்கள் நிகழ்வின் நிழல்படங்கள்














# காதலர் தினம்

மண்ணில் இந்தக் காதல் அன்றி யாரும் வாழ்தல் கூடுமோ
 மண்ணில் வாழும் மானிடனே கேளடா
இதில் மிருகங்களும் கூடத்தானடா


காதல் என்னும் வீதியினிலே காத்திருக்கும் காதலர்களே
 காதல் தினம் இன்று இங்கே கனிந்து வரும் கவிதை ஒன்று
காதலனின் கடிதம் வருமென காதலி காத்திருந்த காலம் அன்று
 கணினி மூலம் கடிதம் வரைந்து காதலிக்கும் காலம் இன்று

மறைவைத் தேடிச் செல்லும் காதலர்களே மனதைத் தேடுங்கள்
 மரித்துப் போக விடாது இதயத்தில் மலரக் காதலியுங்கள்
கவனம் வேண்டும் கன்னியர்களே காளையர்களே உங்கள்
 கணினி மூலக்காதல் காதலர்களின் கால்களையும் வாரிவிடும்

வஞ்சியுடன் வாழ்ந்திடவே வாலிபனும் விரும்பிடுவான் அவன்
 வையத்தில் எல்லையில்லா இன்பத்தை எட்டிடவே முயல்வான்
கட்டிலிலே விளையாடும் காமலீலை தீர்ந்து போனால்
 காதலிங்கு ஓய்ந்து போகும் காயம் தரும் காதல் இன்று

கண்கவரும் கட்டழகைக்கண்டு காதல் கொள்ளாதீர்கள்
 கட்டழகு களைந்து போனால் காதலும் கலைந்து போகும்
இதழோடு இதழ் சேர்த்து இன்பந்தேடும் காதல் இன்று
 இனிதான காதல்தனை இந்நாளில் இங்கு காண்பதரிது



கவிநாதம் பரந்தாமன்






யோசிதவை நினைத்து யோசித்த ராஜபக்ச
உலகர் தொலைபேசியில் வழமைபோல் பிஸி.
ஐ பொட் அகிலாண்டேஸ்வரி அதைவிட பிஸி.



ஹப்பி பமிலி டே. வாழ்த்து பேஸ்புக்கில் வழிந்து கொண்டிருந்தது.
லைக் ....பதில், கருத்து அனுப்புவதிலேயே பிஸியாக இருந்தா .

பமிலி டே வாழ்த்துக்களை அனுப்பிக் கொண்டிருக்கினம்.
எத்தினை பேர் வாழாமல் வாழ்ந்து கொண்டிருக்கினம்.
சம்பிரதாயத்துக்கு 'ஹப்பி பமிலி டே'



தெரிந்த, தெரியாத ஆட்களுக்கு காதலர் தின வாழ்த்துக்களை
அனுப்பிக் கொண்டிருக்கினம்.
உலகம் எங்கோ போய்க் கொண்டிருக்கிறது.



இன்று பலர் சமய நம்பிக்கையில்லாதவாறு காட்டிக்கொள்வார்கள்.
தம்மோடு சேர்ந்தவர்களை மதநம்பிக்கை இல்லாதவர்களாக்கி விட்டு
தாங்கள் ரகசியமாக அவர்கள் தேவாலயத்திற்கும் கோவில்களுக்கும்
சென்று வழிபடுகின்றனர். பொங்கல், புதுவருடம் பொது விழாவென்று
சொல்லி சைவத்திற்கு அசைவம் குடிவகை வழங்கி விழாக்களை
கொண்டாடி வருகின்றனர்
அதனைப் பாராட்டவும் பலர் இருக்கின்றனர்.



சமயத்தில் பெருநம்பிக்கை கொண்ட ராஸபக்ச நல்லூரில் ஒருகாலம்
நல்லூருக்கு சென்று அரிச்சனை செய்தார். திருப்பதி சென்றார்.
இப்போ தோசம் நீங்க கடலில் குளிக்கிறார்.

அதுசரி அன்னம்மாக்கா, பலரின் வாழ்க்கையை நாசம் செய்தவர்கள் தோசம் நீங்க
கடலில் பின் நீச்சலடித்தால் தோசம் நீங்குமோ என கேட்டா செக்கண்ட் புளோர்
செல்லம்மா. (பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்)

ஆனால் வெலிக்கடையில் சிறைப்பட்டுள்ள மகன் யோசிதவை யோசித்து முன்னாள்
ஜனாதிபதி ராஜபக்ச அழுதார்.
சிறையிலுள்ள மகனைப்பார்க்க சென்றுள்ளார்.



10 - 15 வருடங்களாக இன்றும் பெற்றோர் தங்கள்
பிள்ளைகளை சிறை சிறையாக, இராணுவ முகாம்
இருந்த இடங்களிலும் தேடி வருகின்றனர்.

செய்திகளைப் பல ஊடகங்கள் வாயிலாக பார்த்தும் படித்தும்
உலகருக்கு சிரிப்புத்தான் வந்தது.

பாரதியார் பாடல்கள் பாரதியார் வாழ்ந்த காலத்தில் எப்படி பிரபல்யமோ தெரியாது.
ஆனால் அவரது கவிதை வரிகளை சினிமாப் பாடல்களில் பாடலாசிரியர்கள், கவிஞர்கள்,
இசையமைப்பாளர்கள் மூலம் வெளிக்கொணரும் போது பாரதியாரும் கண்ணம்மாவும்
கண்முன்னே நிற்கின்றனர்.

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா........ மகாகவி பாரதியார்.
உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி.....
பாரதியாரின் கற்பனை உள்ளத்தை உருக்கும் பாட்டு.
ஆனால் சிலர் அழுவதைப்பார்த்தால்....சிரிப்புத்தான் வருகிறது. ராமனை நினைத்து
தசரதன் அழுதான்.



பிரகலாதனை நினைத்து இரணியன் கலங்கினான், அழுதான்.
அபிமன்யுவை நினைத்து அருச்சுனன் அழுதான்.

கோவலனை நினைத்து கண்ணகி அழுதாள்.
பல கோடி மோசடியில் கனிமொழி கைது செய்யப்பட்டு சிறையில்
இருந்தபொழுது கலைஞர் கருணாநிதி அழுதார்.

இத்தனைக்கும் மேலாக ராஜபக்ச அழுவது சர்வதேச ரீதியில் பெரிய
செய்தியாக உள்ளது.



சிலர் சிரிப்பார்... சிலர் அழுவார்......
நான் அழுதுகொண்டே சிரிக்கின்றேன்.
தண்ணீரில் மீனழுதால் அதன் கண்ணீரை யாரறிவார்?

பெப்ரவரி 4ஆம் திகதி கொழும்பில் (சிலருக்கு கிடைத்த சுதந்திர)
சுதந்திர தின விழாவில் தமிழில் நமோ நமோ தாயே பாடப்பட்ட
பொழுது சிலர் கண்ணீர் வடித்தனர் சிரித்தாலும் கண்ணீர் வரும்..
அழுதாலும் கண்ணீர் வரும்.
எத்தனை சினிமாப் பாடல்கள் எத்தனை கருத்துக்கள்.



ஞாபகம் இருக்கிறதா? பெப்ரவரி 15....29..

16. தெளிவத்தை ஜோசப் ஈழத்து சிறுகதை எழுத்தாளர் பிறந்தநாள்



16. ரசிகமணி டி.கே.சிதம்பர நாத முதலியார் நினைவுதினம் (1954)

20. மலேசியா வாசுதேவன் பிரபல பாடகர், நடிகர்.
(யூன்-15 1-944 –பெப்-20-2011)



21. அனைத்துலக தாய்மொழி நாள்.

22. காதல் மன்னன் ஜெமினி கணேசன் நினைவுதினம் (2005)




22. ஜோர்ஜ் வாசிங்டன் அமெரிக்க முதல் ஜனாதிபதி பிறந்தநாள்.
(22 -பெப். 1732 - 14 டிசம்பர் 1799)




26. அண்ணை றைற் TVI YT லிங்கம் புகழ் கே. எஸ்.
பாலச்சந்திரன் நினைவு தினம். (1944-2014) ஈழத்து எழுத்தாளர்,
நாடக கலைஞர், நடிகர், தயாரிப்பாளர்.

27. ந. பாலேஸ்வரி நினைவு நாள் ஈழத்து புதின எழுத்தாளர்.
(1924 - 2014)







# கொக்குவில் இந்துக்கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் - கனடா

## வருடாந்த தமிழ்மொழிக் கல்விசார் போட்டிகள் - 2016

***Educational Contest in Tamil Language – Year 2016***

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடத்தும் வருடாந்தத் தமிழ் மொழிக் கல்விசார் போட்டிகளும் கணிதம், ஆங்கிலம் (தரம் 03 - 08வரை) நடைபெறும். இப்போட்டிகள் யாவும் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களின் வாரிசுகள் மட்டுமே பங்குபற்றும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இடம்: SAI CENTRE, 5321 Finch Ave East, Scarborough, ON, M1S 5W2
தொலைபேசி இலக்கம்: 416.335.7242
காலம்: பங்குனி 19, 2016 – சனிக்கிழமை, காலை 9.00 மணி
(Saturday, March 19 – 9:00 a.m.)

தமிழ்ப் பாடப் போட்டிகளுக்கான வயதெல்லை 06, 09, 12, 15, 18 வயதுக்கு உட்பட்டோர் பிரிவுகளாக நடத்தப்படும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் காலை 8:30 மணிக்கு முன்பாக கட்டணங்களைச் செலுத்தி தமது பெயர்களை பதிவுசெய்தல் வேண்டும்.
கட்டண விபரம்:

- குடும்ப அங்கத்துவப் பணம் $15.00
- தமிழ்ப் பாடத்திற்கான கட்டணமாக ஒவ்வொரு பாடத்திற்கும் தலா $5.00 உம் ஆகக் கூடுதலாக 3 பாடங்களுக்கு மட்டுமே அறவிடப்படும்.
- ஆங்கிலம், கணிதம் பாடத்திற்கான கட்டணம் $ 5.00 தனியாக செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி மார்ச் 12, 2016 (Saturday, March 12, 2016)
சகல வயதுப் பிரிவினருக்குமான போட்டிகள் யாவும் காலை 9:00 மணிக்கு ஆரம்பமாகும்.
மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக்கொள்ள
திரு ந. நாகேஸ்வரன் - (416) 299-6645, மின்னஞ்சல்: nada.nages@gmail.com
திருமதி சி. நாமகள் - (416)283-1439, மின்னஞ்சல்: namagalx5@gmail.com
திருமதி ப. ஜெயலோஜினி: 416.287.8164
நிறுவனங்கள்: **VLAMBARAM - GTA Square, # 201, 5215 Finch Ave. East**
**BREAD MASTER BAKERY - Unit #B3, 31 Tapscott Road** (Malvern Mall பின்புறமாக)

# ஒஸ்காரை பகிஸ்கரிப்போம்

2015ஆம் வருடத்துக்கான ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழா மாசி 28ஆந் திகதி லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறு கின்றது. கடந்த வருடமும் இவ்வருடமும் இவ்விழாவிற்கான பரிந்துரைகளில் கறுப்பின கலைஞர்களும் அவர்களைப் பற்றிய திரைப்படங்களும் தவிர்க்கப்பட்டுள்ளன. இது திட்டமிட்ட இன வாதம் என



- ரதன் -

கருதலாம். ஒஸ்காரின் நீண்ட வரலாற்றில் மிகக் குறைந்த கறுப்பினத்தவரே விருதுகளை வென்றுள்ளார்கள்.

ஒஸ்கார் விருதுகளை தீர்மானிக்கும் உறுப்பினர்கள் 6000 பேரில் 90 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் வெள்ளை இனத்தவர்கள். இவர்களில் 70 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் வெள்ளை இன ஆண்கள். இந்த ஆறாயிரம் பேரில் பெரும்பான்மையினர் 50வயதுக்கு மேற்பட்டோர். ஒஸ்கார் என்பது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஓர் அங்கம். உலகின் சிறந்த படம் என ஒஸ்காரின் சிறந்த பட விருது பெறும் படம் அமெரிக்க ஊடகங்களால் பிரச்சாரப்படுத்தப்படுகின்றது. உண்மையில் ஆங்கில மொழிப் படங்களே சிறந்த படத்துக்கான தகுதியைப் பெறுகின்றன. ஆங்கிலம் தவிர்ந்த மொழிப்படங்களுக்கு சிறந்த வெளிநாட்டு மொழிப் படத்துக்கான விருதே வழங்கப்படு கின்றது. உலகின் சிறந்த படமென்பது உலகின் சகல மொழிகளிலுமிருந்து தேர்வு செய்யப்படுவதாக இருக்க வேண்டும்.

சிறந்த கலைஞர்கள், தொழில்நுட்ப கலைஞர்கள் என்பவர்களும் இவ்வாறே தேர்வு செய்யப்படுகின்றார்கள். விழாவிற்கு முன்பான இறுதி மாதங்கள், விழாவின் பின்னரான சில மாதங்கள் பரிந்துரைக்கப் படும் படங்களுக்கும் விருது பெறும் படங்களுக்கும் முக்கியமான காலம். இதனை அவர்கள் தங்களது பொன்னான காலம் எனக் குறிப்பிடுவார்கள். இது விருதுக்கு பரிந்துரைக்கப்படும், வெற்றி பெறும் கலைஞர்களுக்கும் பொருந்தும். காரணம் திரைப்படங்களுக்கான விளம்பரங் களை ஊடகங்கள் "ஒஸ்கார் பரிந்துரை அல்லது ஒஸ்காரை வென்ற" என்று விளம்பரப்படுத்துவதனால் அதிகளவு வருமானம் பெறுகின்றன. உலகின் வல்லரசு என தன்னை தம்பட்டம் அடிக்கும் அமெரிக்கா திரைஉலகிலும் தான் தான் முடிசூடாமன்னன் என நிரூபிக்கும் முயற்சியே இந்த ஒஸ்கார்.

இன்று உலகெங்கும் ஒஸ்கார் நிகழ்ச்சிகள் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றன. ஒரு fashion Show போன்று நடத்தப்படும் இவ் விழாவினூடாக அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனங்கள் பல கோடிகளை வருமான மாகப் பெறுகின்றன. அது மட்டுமல்ல உலகெங்கும் அவர்களது கலாசாரத்தை இவ்விழா காவுகின்றது. உலகமயமாதல் இன்று உலகெங்கும் அமெரிக்காவை ஒத்த அங்காடிகள், அங்காடித் தொகுதிகள். வீட்டு மனைகள். உயர் மாடி வீட்டுத் தொடர்கள் என கட்டிடங்களில் மாத்திரம் மாறாமல் உணவு, உடை, உறையுள் என்ற மூன்று முக்கிய விடயங்களிலும் மாறி விட்டன. இன்னும் சில வருடங்களில் உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் ஒரே மாதிரி உணவு, உடை, உறைவிடங்களைக் காணலாம். காலனித்துவ ஆட்சியினால் பல மொழிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. வட-அமெரிக்காவில் பூர்விக முதல் குடிகளின் 250க்கு மேற்பட்ட மொழிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. அவர்களது பெயர்கள் கூட ஆங்கில பெயர்களாக மாறி விட்டன. அவர்களது கலாசாரமும் அழிக்கப்பட்டு விட்டது. ஏன் அவர்கள் சனத்தொகை கூட திட்டமிட்டு அழிக்கப்பட்டு விட்டது. உலகில் தப்பிப் பிழைக்கும் மற்ற மொழிகளும் திட்டமிட்ட அழிப்புக்கு உள்ளாகின்றன.

ஹொலிவூட் படங்கள் இன்று அதிகளவு வருமானத்தை வட அமெரிக்கா தவிர்ந்த பிரதேசங்களில் இருந்தே பெறுகின்றன. ஹொலிவூட்டின் எழுச்சியை பிரென்ச், ஸ்பானிஸ் பட உலகங்களும் தாக்குப் பிடிக்க முடியாமல் தள்ளாடுகின்றன. ஐரோப்பாவில் ஹொலிவூட்டின் தாக்கம் மிக அதிகமாகவேயுள்ளது. அமெரிக்கா ஆங்கிலம் தவிர்ந்த மற்றைய மொழிகளை மாத்திரம் அழிக்கும் முயற்சியில் இறங்கவில்லை. அவர்களது தனித்துவமான கலைகளையும் அழிக்கின்றது.

வருடா வருடம் உலகெங்கும் பல திரைப் பட விழாக்கள் நடைபெறுகின்றன. அவற் றுள் மிக முக்கியமான திரைப்பட விழா கான்ஸ். இவ் விழாவில் சர்வதேச நடுவர் குழுவே வெற்றி பெறும் படைப்புக் களையும். கலைஞர்களையும் தேர்வு செய்கின்றார்கள். நடுவர்கள் சிறந்த திரைப் படப் படைப்பாளிகளாகவே இருப்பார்கள். மாறாக ஒஸ்காரில் திரைப்பட நிறுவனங் களின் தலைவர்கள் போன்றோரே நடுவர் களாக உள்ளனர். கான்சில் விருது பெறும் எந்த திரைப்படமும் அண்மைக் காலங்களில் ஒஸ்காரின் சிறந்த விருதைப் பெறவில்லை. ஆனால் வட அமெரிக்காவின் கலாசாரத்தை பிரதிநிதிப்படுத்துவதும், ஹொலிவூட்டுடன் மிகவும் நெருக்கமாக இருப்பதுமான, உலகின் மிக முக்கிய திரைப்பட விழாக்களில் ஒன்றான ரொரன்ரோ சர்வதேச திரைப்படவிழா ஒஸ்காருக்கான ஒரு முன்னோட்டம். ரொரன்ரோவில் மக்கள் தேர்வு விருதைப் பெறும் படங்கள் ஒஸ்காரில் பல விருதுகளை பெறுகின்றன. கான்சில் சிறந்த படவிருதைப் பெற்ற பல்ப் பிக்சன் போன்ற படங்களை கூட ஒஸ்கார் பரிந்துரையுடன் கைவிட்டு விட்டது.

மல்கம் எக்ஸ் ஒரு கூட்டத்தில் பேசும் பொழுது "நான் இந்த நாட்டில் ஓர் அந்நியன்" என்கின்றார். ஹொலிவூட் படங்கள் தொடர்ச்சியாக முதன் குடிகள், கறுப்பின மக்கள், முஸ்லீம்கள் போன்று அனைத்து சிறுபான்மையினத்தவரையும் தனது படங்களில் கூலிகளாகவும், கேலிக்குரியவர்களாகவும் கொலை செய்துள்ளது. 2015 ஆரம்பத்தில் வெளியான இன்ரவியு என்ற படத்தில் வட-கொரிய தலைவரையும் வட-கொரியா வை யும் மிக மோசமாக சித்தரித்துள்ளது. தலைவரை ஒரு நகைச்சுவைக்குரியவராக மாற்றிவிட்டது.

அண்மைக் காலங்களில் அமெரிக்காவில் கறுப்பின மக்களுக்கு எதிராக தொடர்ச்சி யாக வன்முறைகள் நடைபெறுகின்றன. அவர்களுக்கான நீதியென்பது எட்டாக் கனியாகவேயுள்ளது. அமெரிக்க அதிபர் ஒரு கறுப்பினத்தவராக இருந்தாலும் அமைப்பு ரீதியாக மாற்றங்களை கொண்டு வரும் வரை ஒன்றுமே செய்ய முடியாது.

எம்மைப் போன்ற புலம் பெயர்ந்தவர்கள் இங்கு சுபீட்சமாக வாழ எங்களுக்கு முன்பு புலம் பெயர்ந்தவர்கள் இங்கு அடிமையாக வாழ்ந்து தங்களது உரிமைகளுக்காக போராடி பல மாற்றங்களை இந்நாட்டில் கொண்டுவந்துள்ளார்கள். அவர்கள் சிந்திய இரத்தம் எங்கள் வாழ்வை சுமூகமாக்கி யுள்ளது. இப்பொழுது நடைபெறும் ஒஸ்கார் போன்ற திட்டமிடப்பட்ட அக வன்முறை களுக்கு எதிராக நாங்கள் குரல் கொடுக்க வேண்டும். எம்மால் முடியக்கூடியது ஒன்றேயொன்று. ஒஸ்கார் இரவன்று ஒஸ்கார் நிகழ்ச்சிகளை பார்க்காமல் தவிர்க்க வேண்டும். எவ்வளவு பேர் பார்க்கின்றார்கள் என்பது தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு முக்கியம். சிறுபான்மை இனத்தவர்கள் அனைவரும் பார்க்காமல் தவிர்த்தால் ஒஸ்காருக்கு ஓர் அழுத்தம் ஏற்படும். அது அடுத்து வரும் வருடங்களில் கறுப்பின மக்களுக்கு ஒரு சிறு மாற்றத்தையாவது ஏற்படுத்தும்.

# கவிஞர்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

காட்சிதருகின்றனர். எல்லோரையும் சமரச நிலையில் நோக்காது, அவரவர் திறமை எப்படிப்பட்டதென இனம் கண்டு மக்கள்முன் நிறுத்துவதும் அவர்கள் பாடல்களை இரசிக்கச் செய்வதும் இப்போது ஈழத்தில் இருக்கும் விமர்சகர்களுடைய முக்கிய கடமையாகும். இந்த முக்கிய கடமைகளுள், முதலாவதாக, தன் படைப்பாற்றலால் முன்னணியில் திகழ்பவரும் கவியரங்கங் களுக்கு ஓர் உயிர்ப்புக் கொடுத்தவரும் பல கவிதை நூல்களின் ஆசிரியருமாகிய கவிஞர் வி. கந்தவனம் அவர்களை வாசலிடைக் கொன்றை மரமாக நிறுத்தி, அது பூத்துக் குலுங்குகின்ற காட்சியை உங்களுக்குக் காட்டப்போகின்றேன்.

இதை வாசிக்கப்போகும் நண்பர்கள் கவிஞர் கந்தவனத்தைப்பற்றி முன்னரே அறிந்திருப் பார்கள் என்றே நம்புகின்றேன். ஏனெனில் இப்போதுள்ள கவிஞர்களில் கவிஞர் கந்தவனம் அவர்களின் பெயர் மிகவும் பிரபலயமானது. எனினும் அவரது கவி-தைகள் இதுவரை முறையாக மதிப்பீடு செய்யப்படவில்லை. அதனால் ஒரு முக்கிய பணியாக நினைத்தே நான் இதைச் செய்கிறேன்.

பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் தேசிகவி நாயகம்பிள்ளைக்கும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்துக்கும் நாமக்கல் கவிஞருக் கும் சோமுவுக்கும் எழுதியிருக்கும் விமர்சனங்களை வாசித்து இரசித்த உங்களை, எங்கள் நாட்டுக் கவிஞர்களும் என்ன செய்திருக்கிறார்கள் என்று ஒருகணம் சிந்திக்கத் தூண்டுவதும் இவ்வெழுத்தின் நோக்கமாகும்.

ஏற்கனவே நவாலியூர் சோமசுந்தரம் அவர்களைப் பற்றியும் (திறவாத படலை), பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் தமிழ்ப் பணிபற்றியும் (மூன்றாவது கண்), செந்தமிழ் மணி பொ. கிருஷ்ணபிள்ளையைப் பற்றியும், அல்வாயூர்க் கவிஞர் செல்லையா அவர்களைப் பற்றியும் (கவிதை வானில் ஓர் வளர்பிறை), அம்பிப் பாடல்களைப் பற்றியும் விமர்சனரீதியில் நூல்களும் கட்டுரைகளும் எழுதியிருக்கிறேன்.

இந்த வரிசையை அடுத்துக் கவிஞர் கந்தவனத்தைச் சந்திக்கிப்போகிறீர்கள். இதோ அடுத்த வாரம் 'பளிங்கனைய கவிக்கரசன் கம்பன் என்னும் தேவனை' கீரிமலையினிலே கவிஞர் சந்தித்த காட்சியைக் காண்போம்.

- நன்றி: ஈழநாடு வாரமலர், 27.11.77.



# விசாரணை...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

கிஷோரை கைது செய்ய, தமிழகக் காவல் அதிகாரியான சமுத்திரக்கனி வருகிறார். அங்கே, தமிழக இளைஞர்கள் நான்கு பேரின் நிர்க்கதியான நிலையையும் பார்க்கும் சமுத்திரகனி அவர்கள் விடுதலையாக உதவுகிறார்.

ஆந்திராவில் இருந்து தமிழகத்துக்கு, சென்னையில் சமுத்திரக்கனியின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல்நிலையத்துக்கு அழைத்து வரப்படுகிறார்கள். வீட்டுக்கு புறப்பட வேண்டியதுதான் என்று நிம்மதி பெருமூச்சு விட்ட நிலையில், எதிர்பாராத திருப்பமாக காவல்துறை மீண்டும் அவர்கள் வாழ்வுடன் விளையாடுகிறது. அன்று ஆயுத பூஜை. எனவே, வீட்டுக்குக் கிளம்பும் முன் காவல் நிலையத்தை ஆயுதபூஜைக்காக சுத்தம்செய்து தரச் சொல்கிறார்கள் அங்குள்ள காவலர்கள். இவர்கள் சுத்தம் செய்து கொண்டிருக்கும் போதே, காவல்துறையின் கடுமையான விசாரணையில் ஒரு கைதி இறந்துபோகிறார். காவல்நிலையத்தை சுத்தம் செய்யும் இளைஞர்களை மறந்து, அந்தக் கொலையை தற்கொலையாக்க காவல்துறையினர் திட்டமிடுவதை, இளைஞர்கள் கேட்டுவிடுகிறார்கள். தங்கள் திட்டம் இவர்களுக்குத் தெரிந்துவிட்டது என்பதால், நால்வரையும் போலி மோதல் கொலை செய்ய முடிவு செய்கிறார் காவல்துறை அதிகாரிகள்.

நால்வரின் கதியும் என்ன ஆனது என்பது மீதிக் கதை. நால்வரும் ஆந்திரா காவலர்களால் ஓர் இரவில் பிடித்துச் செல்லப்படும்போது தொடங்கும் படம், இறுதியில் ஓர் இரவுக் காட்சியுடனே முடிகிறது.



தினேஷ், முருகதாஸ், சமுத்திரக்கனி, கிஷோர் உட்பட அனைத்து நடிகர்களுமே பாத்திரங்களுக்கு ஏற்ற சரியான தேர்வு. அடிக்கு அலறி, பயத்தில் வெடவெடக்கும் தினேஷ், ‘எனக்கு பல்லுதான் அழகுனு அம்மா சொல்லும்’ என மனதை உருக்கும் முருகதாஸ், ‘நம்மளைக் கொன்னுருவாங் கடா’ என உயிர் நடுங்கும் அப்சல், தன்னால் இந்த அப்பாவி இளைஞர்களுக்கு ஏற்பட்ட அபாயத்தைக் கண்டு கண்கலங்கும் சமுத்திரக்கனி, காவல் துறை விசாரணையைத் தன் தொழிலுக்கே உரிய தைரியத்துடன் எதிர்கொண்டு காவலர்களின் நிஜ முகத்தைப் பார்த்த பிறகு மண்டியிட்டுத் தவழ்ந்து பம்மும் கிஷோர், ‘ஒவ்வொரு உயிரும் இந்தப் பூமிக்கு வர்றதுக்கு ஒரு காரணம் இருக்கு. அது போறதுக்கும் ஒரு காரணம் இருக்கணும்’ எனக்கூறும் காவலர் ராமதாஸ்... ஒவ்வொருவரின் மிகையில்லா நடிப்பும் படத்தின் பெரும்பலம். காவலர்கள் மற்றும் கைதிகளின் உடல்மொழி, இயல்பும் யதார்த்தமுமாக தெறிக்கிறது. கடுமையான காவல் துறைக்குள் மனசாட்சியுடன் செயல்பட முயற்சிக்கும் ஒரு மனிதனின் ஊசலாட்டத்தை, கையறுநிலையை, குற்றவுணர்ச் சியை உடல்மொழியிலும் உரையாடல்களிலும் அற்புதமாக வெளிப்படுத்துகிறார் சமுத்திரக்கனி. அனைவரிலும் தனித்து தெரிகிறார். சிறிய வேடமே என்றாலும் தெலுங்கில் பேசி, தன் உணர்வுகளை புரிய வைக்கிறார் ஆனந்தி. சரவண சுப்பையா, அஜய் கோஷ் என மற்றவர்களும்கூட பிசிறடிக் காத நடிப்பால் படத்துக்கு பலம் சேர்த்திருக்கிறார்கள்.

ஒரு மணி நேரம் 40 நிமிடம், திகிலும் திருப்பங்களுமாக நகரும் படத்தில் பாடல், நகைச்சுவை போன்ற தமிழ்த் திரை யின் அடையாளமான இடைச்செருகல்கள் இல்லை. பாடல்கள் இல்லை என்றாலும், உறுத்தாத பின்னணி இசையின் மூலம் தன் இருப்பை உணர வைக்கிறார் ஜி.வி. பிரகாஷ்குமார்.

மறைந்த கிஷோரின் படத்தொகுப்பு, ஆரம்பம் முதல் கடைசி நொடி வரை இமைகளை கட்டிப்போட்டு இதயத்தை படபடப்பிலேயே வைத்திருக்கிறது. எப்படிப்பட்ட ஒரு மகத்தான கலைஞனை இழந்துவிட்டோம் என்பதை இப்படத்தில் அவரின் கச்சிதமான உழைப்பு உணர்த்துகிறது.

ஒளிப்பதிவாளர் ராமலிங்கத்துக்கு இது முதல் படம். ஆனால், இது முதல் படம் என்று சொல்ல முடியாத அளவுக்கு கண்ணெதிரே நடக்கிற நிகழ்வுகளாகவே காட்சிப்படுத்தி இருக்கிறார். இருளும் ஒலியும் இவர் காமிரா வழி கவிதை எழுதுகிறது.

மு.சந்திரகுமார் என்ற ஆட்டோ ஓட்டுநர், தன் வாழ்வில் நிகழ்ந்தவற்றை வைத்து எழுதிய, ‘லாக்கப்’ என்ற நாவலை ஒரு பகுதியாகவும், மீதியை செய்தித் தாள்களில் நாம் அன்றாடம் பார்க்கும் சில உண்மைச் சம்பவங்களின் பின்னணியோடு இணைத்தும் இப்படத்தின் திரைக்கதையை உருவாக்கியுள்ளார், வெற்றிமாறன். முழு நாவலை அப்படியே படமாக்கினாலும், அந்த எழுத்தாளருக்குரிய அங்கீகாரத்தைத் தராத தமிழ் திரைக் கலைஞர்களுக்கு மத்தியில், மு. சந்திரகுமாருக்கு இந்தப் படத்தில் வெற்றிமாறன் தந்திருக்கும் முக்கியத்துவம் இன்னொரு தமிழ்த்திரை ஆச்சரியம். ‘லாக்கப்’ நாவலின் தழுவல் என்று, படம் தொடங்கும்போது காண்பிப்பதுடன், சர்வதேச திரைப்பட விழாவில் பங்கேற்ற மு. சந்திரகுமாரின் காட்சிப் பதிவுகளைப் படம் முடிவில் இணைத்தது சிறப்பு.

வெற்றிமாறனின் திரைக்கதையும் இயக்கமும், காவல் துறையின் நிஜ முகத்தை, அதன் குரூரத்தை இப்படத்தில் நம் கண்முன் காட்டும்விதம் பதறச் செய்கிறது. காவல்துறை என்ற அமைப்பு எப்படி செயல்படுகிறது என்பதை, அதன் ஒவ்வொரு அணுவையும் நுணுக்கமாக ஆராய்ந்து காட்சிப்படுத்தியிருக்கிறார், வெற்றிமாறன்.

காவல்துறையின் மொத்த அமைப்பு முழுவதுமே கறைபடிந்து கிடப்பதையும், தனிப்பட்ட நபர்களின் மனசாட்சியோ நல்லெண்ணமோ, அதில் ஒரு துரும்பைக்கூட கிள்ள முடியாது என்பதையும் அழுத்தமாகச் சொல்கிறது படம். அப்பாவிகள் மீது கொடுமைகளைக் கட்டவிழ்த்துவிடும் காவலர்கள், வேறொரு தளத்தில் இதே அமைப்பின் பலிகடாக்களாக மாறும் முரண்பாட்டையும் படம் சித்தரிக்கத் தவறவில்லை. தங்களை, தங்கள் வேலையை, தங்கள் மனைவி மற்றும் குழந்தைகளின் உயிர்களை அதிகார வர்க்கத்திடம் இருந்து தற்காத்துக்கொள்வதற்காக, அப்பாவிகளையும் நீதியையும் பலி கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லாமல் நிர்க்கதியாக நிற்கிறார்கள் சில மனசாட்சியுள்ள காவல்துறை அதிகாரிகள். காவல்துறையின் மனித உரிமை மீறல்களின் நிஜமான சூத்திரதாரிகள் காவலர்களோ காவல் அதிகாரிகளோ அல்ல, அவர்களை பொம்மைகளாக ஆட்டுவிக்கும் அதிகார வர்க்கம்தான் என்பதைத் தோலுரித்துக் காட்டுகிறது படத்தின் இரண்டாம் பகுதி. விசாரணை முன்னிறுத்தும் இந்த யதார்த்தம், இந்த அமைப்பில், இங்குள்ள யாருக்குமே நிஜமான பாதுகாப்பு இல்லை என்பதை முகத்தில் அறை உண்மையுடன் நமக்கு உணர்த்துகிறது.

இடைவேளையே தேவை இல்லை என்னும் அளவுக்கு படத்தை நேர்த்தியாக கொண்டு செல்லும் வெற்றி மாறன் ஒரு தேர்ந்த இயக்குநராக நூறாண்டு கடந்த தமிழ்த்திரை சரித்திரத்தில் நிமிர்ந்து நிற்கிறார். பாலுமகேந்திரா இருந்திருந்தால் தன் சிஷ்யனை உச்சிமுகர்ந்து கொண்டாடியிருப்பார். அதனாலென்ன, அவருக்குப் பதிலாக நாம் கொண்டாடுவோம்.




தரத்தில் சிறந்தவை
இல்லத்தரசிகளின் முதல் தெரிவு
நிரு பிராண்ட் தயாரிப்புகள்
எமது புதிய அறிமுகம்
COCONUT OIL
- 100 % Natural
- No Preservative
COCONUT
Niru
ORGANIC EXTRA
Coconut Oil
Perfect for:
- frying
- Cooking
- Baking
அனைத்து முன்னணி தமிழ் கடைகளிலும் கிடைக்கும்
Tel: 416- 750 1976 web:www.niru.com email: info@niru.com
Niru
Niru
Niru
நிரு




# காதலர் தினம்

காதலர்க் கோர்நாள் அதுதான் களிப்பளிக்கும்
போதைத் திருநாள் பெருமைகொள் - மாதர்காள்
தித்திக்கும் இந்நாளில் தீர்வொன்று வேண்டுமெனில்
பத்திரமாய் உன்னையே பார்.

வாலிபரே சிந்திப்பீர் வாழ்க்கை ஒருமுறைதான்
பாலியல் தொந்தரவு பாவமப்பா - காலித்
தனம்வேண்டாம் காரிகையைத் தங்கையெனக் கொள்ளல்
வனப்பாமே வாழ்வின் வழி.

கற்கின்ற காலத்தில் கண்சிமிட்டும் காதலால்
பற்றுகின்ற கல்வி பறிபோகும் - உற்றுணர்ந்தே
காலத்திற் கேற்ப கனதனம் சேர்த்தபின்
சீலமுடன் கொள்காதல் சீர்.

பண்டுதொட்டு இன்றுவரை பற்றிநிற்கும் காதலை
விண்ணவரும் ஏற்கின்ற விந்தைபாரீர் - வண்டமிழர்
வாழ்வில் வலம்வரும் காதல் கனிந்திட்டால்
தாழ்விலா வாழ்வங்கே தான்.
பழமை கழிதல் புதுமை புகுதல்
வழமைதான் என்றாலும் வாய்ப்பாம் - இளமையில்
செய்வன செய்துமே சிற்றினம் சேர்தற்காம்
ஐயம் தெளிதல் அறிவு.




- முருகேசு மயில் வாகனன் -

மடலேறி வென்றார்கள் காதலை அன்று
இடராலே மாழ்கின்றார் இன்று - படுகின்றார்
துன்பந்தான் கையிலுள்ள செல்லாலே பேரிடரே
கன்னியரே காளையரே காப்பு.

மடலேறுதல் என்பது சங்ககாலத்தில் காதலுக்குப்
பெற்றோர்
மறுப்புத் தெரிவித்தால் காதலன் கருக்குமட்டையால்
தேர்செய்து
அதில் இருக்க நண்பர்கள் அத்தேரை காதலியின்
வீட்டைச்சுற்றி
இழுத்துச் செல்வர். ஆப்போது காதலனின் உடலெங்கும்
கருக்கு
வெட்டி இரத்தம்பாய பெற்றோரும் மற்றோரும் மனமிரங்கிக்
காதலுக்குச்
சம்மதிப்பர்.

வர்த்தகஞ் செய்வோர்க்கு வாய்பான காலமிது
வகைவகையாய்ப் பொருள்விற்க வாய்ப்புத் தானே
அர்த்தமுள்ள காலத்தில் அன்பளிப்புக் கொடுத்தே
ஆனந்தம் பொங்க அங்கு மிங்கும்
நர்த்தனஞ் செய்கின்றார் நங்கையர் சேரவே
நவீன வாழ்வென்றே நாமும் இருப்போம்
அர்த்தமும் உண்டுதான் ஆண்பெண் இணையவே
அவதானம் வேண்டுமே அவ்வாறா னவர்க்கே.



# NK Movers

## We make moving easy!




***Proudly moving the local community for the last 20 years***

கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றவர்கள்

## WE SPECIALIZE IN:

- RESIDENTIAL MOVING
- COMMERCIAL MOVING
- LONG DISTANCE MOVING

மேலதிகமாக

**$50**

கழிவினை பெறுவதற்கு இக்கூப்பனைக் காட்டவும்

**QUESTIONS TO ASK**

Choosing a moving company is a major decision. Making sure to learn about a company's cost and service is very important. Once you are comfortable then make your final selection.

- **Are you an insured company?**
- **Is your staff trained?**
- **Do you offer free estimates?**
- **What payment option is available? Is a deposit required?**
- **Is there a contact number I can contact on move day if there are any questions or challenges?**
- **Are there additional charges for:** **Stairs?** **Travel time from your location to mine?** **Evenings and weekends?**

**TEL: 416-566-4260**

**FAX: 1-888-614-9373**

**TEL: 1-800-895-8362**

**WWW.NKMOVERS.CA**

**clientsupport@thenkmovers.com**

**32 Howden Road - Unit 2. Toronto, M1R-3E4**

"Let me help you make the right choice"
Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL
Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All Stars Realty Inc., Brokerage
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.
Allstate
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

we always care at...
Bridletowne Dental
416 492 3775
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
Brideltowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
(1 Block South of Finch Ave. East)

Direct:416-908-5656 MORTGAGES
1st,2nd,3rd
Purchase
Refinance
Renewal
Switches
Equity Line of Credit
For all your Mortgage needs !
Off:416-878-7979 Fax: 416-613-5779
Toll Free: 1-877-687-1214
Our Office:
1585 Markham Road, Unit# 407A
Toronto, M1B2W1 ON Canada
www.mortgagealliance.com
Email:nsubramaniam@mortgagealliance.com
Facebook:Nesan Subra
NESAN
Mortgage Agent
MORTGAGE ALLIANCE
ACCESS INC. Lic # 11404
Independently Owned & Operated
Corporate Office: 209-8130 Sheppard Ave. East
Toronto M1B 3W3

Free Real Estate Class - Call: 416.321.6969

BUY/SELL PROPERTIES IN GTA

BLOOR ST E & COURTICE
Bedrooms : 4
Washroom : 3
Asking Price:$549,900

QUEENSVILLE & HWY 404
RESTAURANT + 2 HOUSES
BUILDING + BUSINESS
Asking Price:$2.5M

HWY 401& PARK RD
Bedrooms : 3 + 2
Washroom : 3
Asking Price: $399,900

COUNTRY HILLS IN KITCHENER
Bedrooms : 4 + 1, 2 Sep. unit
Asking Price:$339,900
INVESTMENT PROPERTY

DIXIE & PETER ROBERTSON BRAMPTON
Bedrooms : 3
Washroom : 2
Asking Price:$364,900

ROSSLAND & AUDLEY AJAX
Bedrooms : 4
Washroom : 3
Asking Price:$599,900

A. Anton Jeeva, FRI
Broker
Contact: 416.575.5055
Specialized in Power Of Sale Homes & New condos
RE/MAX Dynasty Realty Inc., Brokerage*
8 Shadlock St. #7, Markham ON L3S-3K9
Tel: 905.471.0002
Web: www.antonjeeva.com
E-Mail:anton.jeeva@gmail.com
*Independently Owned & Operated

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

SNM HEALTH CENTRE
www.snmhealthcentre.com
(Markham and 14th Avenue)
20 New Delhi Drive,
Suite 72, Markham,
Ontario, L3S 0B5
All insurances are accepted
Specializing in:
Pain and Injury Treatment
Headache and Migraine Relief
Motor Vehicle Accidents
Workplace Injuries (WSIB)
Athletic Performance Enhancement
Corporate Wellness Programs
Women's Health and TMJ Treatment
Foot Health Solutions & Diabetic Foot Care
Professional Services Include:
Physiotherapy
Chiropractic
Acupuncture
Massage Therapy
Osteopathy
Chiropody
Orthotics and Orthopedic Shoes
Custom Made Braces (Neck, Back, Knee & Ankle)
Compression Stockings
TENS
Book an Appointment Now!
647.216.6506 / 905.554.5540

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில்
வாசிப்பதற்கு www.vlambaram.com
www.tamilvanakkam.com

Experienced & New Sales Reps. are Welcome to Join
Raja Mahendran, P. Eng.
Broker / Owner
For All Real Estate & Investment Needs!
HomeLife / GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave., E. #203 Toronto, ON
Tel.: 416.321.6969
*Independently Owned & Operated